# நேருக்கு நேர்

## என்.செல்வராஜா நேர்காணல்கள்



JPL
C13299

வெளியீடு
அயோத்தி நூலக சேவைகள்
குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடசேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

132299 CC

Public Library
Jaffna

# நேருக்கு நேர்

என்.செல்வராஜா நேர்காணல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
080

# நேருக்கு நேர்

என்.செல்வராஜா நேர்காணல்கள்

ஆசிரியர் - என்.செல்வராஜா (Noolthettam.ns@gmail.com)
பதிப்பு - முதற்பதிப்பு, 20 ஜூலை 2020
வெளியீடு : அயோத்தி நூலக சேவைகள்,
ஐக்கிய இராச்சியம் & குமரன் புத்தக இல்லம்,
கொழும்பு 6
அச்சுப்பதிப்பு : குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6
தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
அட்டை வடிவமைப்பு : கௌதமன் செல்வராஜா
பக்கங்கள் : xiv, 142 பக்கம்.
விலை : ரூபா 650.00
பதிப்புரிமை : என்.செல்வராஜா 2020
சர்வதேச தராதர நூல் பதிவெண் 978-955-659-676-2

# Nerukku Ner

N.Selvarajah Nerkanalkal
(Interviews with N.Selvarajah, Writer, Bibliographer and Librarian)

Author : N.Selvarajah (Noolthettam.ns@gmail.com)
Edition : First Edition, 20th July 2020
Publishers : Ayothy Library Services,
United Kingdom and
Kumaran Book House, Colombo
Printers : Kumaran Book House,
39, 36th Lane, Colombo -6,
Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
E-Mail : kumbhlk@gmail.com
Cover Design : Gauthaman Selvarajah
Pages : xiv, 142 p.
Price : Rs. 650.00
ISBN : 978-955-659-676-2

© Copy Right 2020 by N.Selvarajah
All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photo-copying, recording or otherwise, without the prior written permission of the author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பொது சன நூலகம்
14 OCT 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

வணக்கம்,

ஈழத்துப் புலம்பெயர் வாழ்வியலுக்கான ஓட்டத்திற்கிடையேயும் தன்னுள் ஓரங்கமாக வரித்துக்கொள்கிற கலை இலக்கியச் செயல்பாட்டினை வரலாறு மறந்துவிடாதபடி செயல்படுத்த முனையும் போது காலச்சுழற்சியில் கரைந்துவிடாத உறுதியுடன் அடியெடுத்து வைக்க வேண்டும். பொதுவெளியில் சமூக சிந்தனையுடன், ஆத்மசுத்தியுடன் செயல்படின் வரலாற்றில் நம்மைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். இல்லையெனில் செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் பிறழ்வு ஏற்பட்டுவிடும். அத்தகைய கவனத்துடன் தனது ஒவ்வொரு படைப்புக்களையும் தனது அதீத கரிசனையுடன் வெளிக்கொண்டுவரும் திரு.என். செல்வராஜா அவர்களின் "நேருக்கு நேர்" எனும் நேர்காணல்களின் தொகுப்பு நூலும் எதிர்கால இளைய தலைமுறைகளின் நூல்கள் பற்றிய தேடல்களுக்கும், அவற்றினை ஆவணப் படுத்துதலுக்குமான ஆர்வத்தை, ஆலோசனைகளைப் பெற உதவும் என்று நம்புவோம்.

நூல்களின் மீதான காதலுடன் தேடுவோர்களுக்குப் பரிச்சய மானவர் திரு.என்.செல்வராஜா அவர்கள். நாம் கற்கும் காலத்தில் அதிக வசதியீனங்கள் இருந்த சூழலில் பாடநூல்களுக்குள் மட்டுமே புதைந்திருந்தோம். மேலதிக வசதிகள், அவற்றுக்கான தேடல்களுக்கான வாய்ப்புக்கள் இருந்ததில்லை. நமது அறிவுத் தேடலுக்கு பொது நூலகங்களையோ, அன்றைய பத்திரிகை களையே நாடவேண்டியிருந்தது. கண்டிப்பான ஆசிரியர்கள் வாய்த்ததினால் பாடத்திட்டத்திற்கப்பால் தேடும் நிலையை நாமோ, பெரியவர்களோ ஏற்படுத்தித் தரவில்லை. காலமாற்றம் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுவிட இளைய தலைமுறைகளின் தேடலுக்கான வாசல்களும் மெல்ல மெல்லத் திறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவருடகால யுத்தம், இடப்பெயர்வு, அகதி வாழ்வு, புதிய களச் சூழல் என மாற்றம் பெற எல்லைகளும் விரியத்தொடங்கின.

பலர் பல்துறை அறிஞர்களாகவும், படைப்பாளர்களாகவும் முகிழ்க்க அவர்களுக்கான படிப்பு, வாசிப்புக்கான தளங்களைத் தேடியவண்ணம் இருந்தனர். இங்குதான் நூலகங்களினதும், நூல்களை ஆவணப்படுத்தலுக்கான தேடலும் முனைப்புப்பெற்றன. பல மொழிப் புலமையாளர்களின் வருகையும், பன்மொழி வெளியீட்டு முயற்சிகளும் தோன்ற எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் படியான சூழலும் ஏற்பட்டன. பல்துறை படைப்பாளர்கள் முன்னர் இல்லையா என்கிற கேள்வியும் எழலாம். இருந்தனர். பின்னாளில் அதிகரிக்கும் சூழல் ஏற்பட்டதே உண்மை.

படைப்புகள் அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களின் மூலமாக நமக்குக் கிடைத்தாலும் பலருக்கும் அவை பற்றிய தகவல்கள் கிடைத்ததில்லை. இப்போதும் அப்படியே. நூலகங்களில் சென்று தேடுகின்ற நேரச் செலவு பலருக்கும் வாய்ப்பதுமில்லை. இலங்கையில் பல பாகங்களிலும் பொதுநூலகங்கள், பாடசாலைகளின் நூலகங்கள் என இருப்பினும் போதியளவு பட்டியல்படுத்தல் குறைவே. இந்த நிலையில் நூலகக் கல்வியைக் கற்ற சிலரின் முன்னெடுப்புக்களால் நூல்களுக்கான முறையான பட்டியல்களைக் காணக்கிடைத்தன. எனினும் தொடர்ச்சியான பட்டியல்களின் தொகுப்பாய் வராத சூழலில் என்.செல்வராஜா தொடர்ந்து பதினான்கு "நூல்தேட்டம்" தொகுதிகளைக் கொண்டுவருதல் என்பது வியப்பைத் தந்திருக்கிறது. அவரின் தொடர்ச்சியான முயற்சி என் போன்றவர்களின் நூல்களின் மீதான தேடுதலுக்கு ஓரளவு உதவியதாகவே கருதுகிறேன்.

நூல்களின் மீதான, அவற்றை வெளிக்கொணர்ந்த படைப்பாளர்கள் அல்லது வெளியீட்டு நிறுவனங்கள் எனப் பல தரப்பட்ட தரவுகளை தன்னகத்தே கொண்டுள்ள தொகுப்பினை தொடர்ச்சியாகக் கொண்டுவரும் திரு. என்.செல்வராஜா அவர்களின் நேர்காணல்கள் மூலம் இன்னும் பல விடயங்களை நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவரின் நூலகம், நூல்கள் பற்றிய கட்டுரைகளை ஞானம், தேசம், லண்டன் சுடரொளி, வல்லினம், பதிவுகள் (இணையம்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ பி சி வானொலி, ஐ பி சி தமிழ் பத்திரிகை, வடலி, தினக்குரல், வீரகேசரி, தமிழர் தகவல் (கனடா) எனப் பல ஊடகங்களில் வெளிவந்து பலரையும் சென்றடைந்து பலரும் அறிந்தவராக இன்று வலம்வருகிறார். இந்த வகையில் இவரின் ஆர்வம், செயல்பாடு, நூல்கள், நூலகம், அவற்றை ஆவணப்படுத்துதல், எதிர்காலத்திட்டங்கள் எனப் பலவற்றை உள்ளடக்கிய கேள்விகளுக்கான பதில்களாகவும் நேர்காணல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேர்காணல்களைப் பலவகைகளுக்குள் அடக்கலாம். அரசியல், சமயம், இலக்கியம் எனப் பல்வகை ஆர்வலர்களை அல்லது ஆளுமைகளை அவர்களின் தெரிவு, அவர்களின் சமகால, எதிர்கால செயல்பாடுகள் குறித்த அனுபவ வெளிப்பாடுகளை தங்கள் கேள்விகள் மூலம் அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களுக்கூடாக அவர்களின் பதில்களைக் கொண்டுவருதலாகும். அங்கு கேள்விகளைத் தொடுப்பவர்களின் ஆளுமைகளுக்கு ஊடாகப் பதில்களைச் சரியான தளத்திற்கேற்ப ஆளுமைகளிடமிருந்து பெறுதலே சிறப்பைத்தரும். அந்த வகையில் தினக்குரல், நவமணி, ஞானம், காதல், தினகரன், ஈழமுரசு (கனடா), மலேசிய நண்பன் போன்ற பல ஊடகங்களின் வாயிலாக ம.நவீன், தி.ஞானசேகரன், சந்திரசேகரன் (இனிய நந்தவனம்), இ.மகேஸ்வரன், ஜெ.கவிதா, ராம், இராஜேந்திரன்(மலேசிய நண்பன்) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களில் அவர்களின் கேள்விகளுக் கான பதிலைச் சரியாகவும், ஆணித்தரமாகவும் தந்ததின் ஊடாக ஒரு வரலாற்றுப் பதிவாகவும் ஆக்கியிருக்கிறார்.

பொதுவெளியில் நாம் பயணிக்கும் போது சமூகம் பற்றிய அக்கறையுடனும், தேடல் பற்றிய சிந்தனைத் தெளிவுடனும் ஒவ்வொரு தடங்களையும் பதிக்கவேண்டும். நம் முன்னே பயணித்த கற்றறிந்தோரின் சுவடுகளும் நமக்கு வழிகாட்டும். அச்சிந்தனைத் தெளிவு திரு.என்.செல்வராஜா அவர்களின் பல பதிவுகளில் நான் கண்டறிந்துகொண்டேன். ஈழத்து நூல்களின் விரபட்டியல் மாத்திரமல்ல மலேசிய நூல்களின் பட்டியலையும் வெளியிட்டுள்ளார். இதனால் உலகின் பல நாடுகளிலும் வாழ்கின்ற நூல்களின் தேடலை இப்படியொரு தகவல் திரட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் பெறமுடியுமாதலால் தாங்களும் தங்கள் நாடுகளில் வெளியாகும் படைப்புகளுக்கான பதிவுகளை ஆங்காங்கே மேற்கொள்ளத் தலைப்படுகின்றனர்.

இதற்கும் அப்பால் சென்று, நமக்கெல்லாம் மாறாத வடுக்களைத் தந்த யாழ் நூலக எரிப்பின் நிகழ்வுகளை, அதன் வலிகளை வரலாற்றுப் பதிவாகவும் தந்துள்ளார்.

வீட்டுக்கொரு நூலகம் அமைக்கவேண்டும் என்பதே நம் முன்னோர்களின் கனவாகும். தற்போதைய படிப்பினைகள் இன்னொருபடி மேலே சென்று இணையத்திலும், புலம்பெயர் சூழலுக்கேற்ப ஆவணக்காப்பகங்களின் அவசியம் உணரப் பட்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நாட்டில் ஏற்பட்ட யுத்தம், சுனாமி, இடப்பெயர்வு, கறையான்களுக்கு இரையாகுதல் என்பவற்றால் மீளவும் அழுந்திடாமல் இருக்கவேண்டும் என்கிற பொறுப்புணர்வு அனைவரிடமும் மேலோங்கிவருவது கண்கூடு. அதன் ஒரு முன்னோடிக் கனவே இவரால் முன்னெடுக்கப்பட்ட "ஐரோப்பியத் தமிழ் ஆவணக்காப்பகம் & ஆய்வகம்" இயங்கு கின்றது.

மேலும், திரு.செல்வராஜா அவர்கள் இலங்கையின் பலபாகங் களிலும் தந்தையாருடனும், பின்னர் தொழில் நிமித்தமும் வாழ்கின்ற சூழலிலும், யாழ்ப்பாணத்தில் இயங்கிய திருநெல்வேலி ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் பொறுப்பாளராகவும் இயங்கினார். அதே சமயம் அகில இலங்கை ரீதியில் இயங்கும் நூலகங்களின் (தனியார் & பாடசாலை உட்பட) பயன்பாட்டிற்கு உகந்தவரையில் "நூலகவியல்" எனும் துறைசார் இதழையும் வெளியிட்டுள்ளார்.

நூலகவியல் சார்ந்து எழுத்துலகில் தங்களது பங்களிப்பைச் செலுத்தியவர்கள் ஒரு சிலரே. தொடர்ச்சியாக தனக்கென்றான பாணியில் யாவரையும் சென்றடையும் வண்ணம் பலருக்கும் தெரிந்தவராக நமக்குத் தெரிந்தவரையில் திரு.என். செல்வராஜா அவர்களே உள்ளார் என்பது என் கணிப்பு. வேறு யாரும் நான் அறியாமல் இருக்கலாம்.

நமது படைப்புக்களை வகைப்படுத்துவது என்பது நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், ஆய்வு என்பவை மட்டுமே எனச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிட்டுப் போய்விடலாம். ஆனால் அவற்றுள்ளும் எத்தனை வகை, வரையறைகள் என அனுபவம்வாய்ந்த நூலகர்களுக்கே தெரியும். அவற்றை நுண்ணிய அறிவுடன் தேர்ந்தெடுத்தல் என்பது பாரிய பணியுமாகும்.

அக்கறையுடனும், தன் நேரத்தையும் பொருட்படுத்தாது செயல்படும் ஒருவரின் நேர்காணல்களின் மூலம் செவ்வனே நூலாக்கித் தருவதென்பதைச் சாத்தியமாக்கித் தந்திருக்கிறார்கள் பதிப்பகத்தினர்.

நூல்களைப் பற்றிய தேடலில் ஈடுபடுவோர்க்கும், அவை சார்ந்த கல்வியாளர்களுக்கும் பயன்படுமொரு பாடநூலாகவும் இந்த நேர்காணல் பயன்படலாம். மிக நேர்த்தியாக வடிவமைத்த அனைத்துத் தரப்பினருக்கும் சிறப்பான வாழ்த்துகளையும் தெரிவிக்கவேண்டிய கடமை நமக்குண்டு.

"...நூல்தேட்டம் இலங்கையில் இதுவரை அச்சில் வெளிவந்த தமிழ் நூல்களையும், இலங்கையரால் தமிழாக்கம் செய்யப்பட்ட பிறமொழி நூல்களையும் உள்ளடக்குகின்றது. இலங்கை எழுத்தாளர்கள் இன்றுவரை தமது நூல்களை இலங்கையில் மட்டுமல்லாது தமிழகம், ஐரோப்பா மற்றும் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்தும் வெளியிட்டுவருகின்றார்கள். இவற்றின் வரவையும் இருப்பையும் முழுமையாகப் பதிவுசெய்த முயற்சி எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இந்நூல்கள் பற்றிய தகவல்களை விரிவாகப் பதிவுசெய்து கொள்வதற்காகவும், பல்வேறு ஆய்வாளர்களின் விரிவான ஆய்வுத் தேவைகளுக்காகவும் நூல்தேட்டம் உருவாக்கப்பட்டது. இதுவரை காலமும் துறைசார்ந்த சிறு பட்டியல்களாக மட்டுமே அறியப்பட்டுவந்த இத்தகைய நூல்விபரங்கள் நூல்தேட்டத்தின் வாயிலாக மட்டுமே விரிவான பதிவுக்குள்ளாகியுள்ளமை ஒரு சிறப்பம்சம் என்று நான் கருதுகிறேன்...." (பக்கம் 37)

ஒவ்வொரு நேர்காணலின் ஊடாகவும் நமக்கு சில செய்தி களையும் சிந்தனைக்கு சில விடயங்களையும் தந்துவிடுகிறார். நமது நூல்கள் அல்லது ஆவணங்கள் முறையாகச் சேமிக்கவும், பாதுகாக்கவும் முடியாத சூழலில் தற்போது ஓரளவிற்கு அவற்றுக்கான தேவை, பயன்பாடுகள் கண்டறியப்பட்டு அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகளை பேணுகிற முயற்சிகள் நிகழாமல் இல்லை. இணையங்களிலோ, உலக அளவில் பாதுகாக்கும் நபர்கள், நிறுவனங்கள் செயல்பட ஆரம்பித்துள்ளன. நமக்கென செயல்படக் கூடிய அரச மையங்கள் நமக்காக இல்லை. தமிழீழ தேசிய நிழல் அரசு இயங்கிய காலங்களில் பாரிய அளவில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அவை மீள அமையும் பட்சத்தில் நிச்சயம் பாரிய அளவில், நீண்டகால மையம் உருவாகலாம். அதுவரையில் ஓரளவுக்கேனும் நாமும் ஆத்மார்த்தமாக இயங்குவோமெனில் எதிர்காலத்தில் நல்ல அறுவடையைப் பெறலாம். அந்த நம்பிக்கையுடன் நூலகர்களுக்கான பங்களிப்பை வழங்குவோமாக.

***முல்லை அமுதன்***

*லண்டன், 13/05/2020*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

1. ஒரு நூலகர் நூலகவியலாளரான கதை:
ஞானம்- நேர்காணல்
(ஞானம் 200ஆவது இதழ்: ஜனவரி 2017: ப. 806-828) 1

2. இலங்கைத் தமிழரின் புத்தகக் கலாச்சாரம்
நேர்காணல் திரு. இ.மகேஸ்வரன் நூலகர்,
தமிழ்ப் பிரிவு, பேராதனைப் பல்கலைக்கழகம்
(தினகரன் வாரமஞ்சரி 28 மார்ச் 2010) 52

3. ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை
ஓரிடத்தில் பதிவுசெய்து ஆய்வுக்கு வழங்குவதே
என் நோக்கம்
நேர்காணல்: பீ.எம்.புன்னியாமீன்
(ஞாயிறு தினக்குரல், 11 ஏப்ரல் 2010: ப. 25) 63

4. ஈழத்துத் தமிழரின் ஆவணங்களுக்கான காப்பகம்
லண்டனில் நூலகவியலாளர் என்.செல்வராஜா
(நேர்காணல்- ஜெ.கவிதா)
(ஞாயிறு தினக்குரல் 27.09.2009, 04.10.2009) 77

5. மலேசிய இலக்கியம் உண்மையில் ஒடுக்கப்பட்டுள்ளது
- என்.செல்வராஜா (நேர்காணல்-ம.நவீன்)
(நவீன இலக்கியத்தை நோக்கி காதல்,
மலேசியா, நவம்பர் 2006: ப.4-6) 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வாசிப்பதில் ஆர்வம் இல்லாதவர்கள் எழுத்துத்துறையில் இறங்குகின்றனர்: புலம் பெயர்வின் அவலங்கள் (நேர்காணல்- ராம்)
(ஞாயிறு தினக்குரல் 11 டிசம்பர் 2005). 100

7. நூலகவியலாளர் செல்வராஜா அவர்களுடன் இனிய நந்தவனம் ஆசிரியர் திரு.சந்திரசேகரன் அவர்கள் மேற்கொண்ட நேர்காணல்.
(நவமணி, Free Lanka Newspapers, களுபோவில, தெகிவளை. 11.09.2005: ப.16.) 104

8. ரொறன்ரோவிற்கு வருகை தந்துள்ள நூல்தேட்டம் என்னும் தொடர் நூலின் ஆசிரியரான என். செல்வராஜா அவர்களுடனான ஒரு நேர்காணல். (நேர்காணல்: கே.ஜவஹர்லால் நேரு)
(ஈழமுரசு, முரசு 6, இதழ் 305: பெப்ரவரி 16 முதல் பெப்ரவரி 22, 2005 வரை: ப.45). 111

9. வரலாறுகளைப் பதிவுசெய்ய வேண்டும் நூல் தொகுப்பாளர் செல்வராஜா கூறுகின்றார் (நேர்காணல்: இராஜேந்திரன், தலைவர், மலேசிய எழுத்தாளர் சங்கம், பிரதம நிருபர், மலேசிய நண்பன்)
(மலேசிய நண்பன், திங்கட்கிழமை 19.07.2004:ப.7) 118

10. A Bibliographer's labour of love
(Interviewed by: J. S. Tissainayagam, Editor, Northeastern Herald, Colombo)
(Northeastern Herald, Issue: November 01 - November 07: 2002). 125

11. N.Selvarajah: Personal Profile 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

ஈழத்தின் தமிழ்நூல் வெளியீட்டுப் பெருவெளியில் இன்று வெளிவந்துகொண்டிருக்கும் தமிழ் நூல்களைப் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தும் எனது தனி மனித முயற்சியான "நூல்தேட்டம்" இருபதாண்டுகளைக் கடந்த நிலையில், தனது பதினைந்தாவது தொகுதியைக் காணவிருக்கின்றது. இதுவரை ஈழத்தவரின் பதினையாயிரம் தமிழ் நூல்களைப் பற்றிய தகவல்களை விரிவாகப் பதிவுசெய்து எதிர்காலச் சந்ததியினருக்கு, அவர்களது முன்னோர்களின் அறிவுக் கருவூலங்களை அறியச் செய்த நிம்மதிப் பெருமூச்சுடன் எனது தேடலைத் தொடர்ந்து வருகின்றேன்.

இத்தேடல் முயற்சிகளுக்காக தாயகத்திலும், ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா, மலேசியா போன்ற இன்னோரன்ன நாடுகளுக்கும் பயணிக்கவேண்டிய தேவை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இப்பயணங்களின்போது, அந்தந்த நாட்டுத் தமிழ் ஊடகங்கள் எனது பயணத்தின் நோக்கங்களை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டி நேர்காணல்களைப் பெற்று தத்தமது ஊடகங்களில் ஒலி, ஒளி, எழுத்து வடிவில் பதிவுசெய்வது வழமையாகிவிட்டது.

அவ்வகையில் சில எழுத்தூடகங்களில் வெளிவந்த நேர்காணல்களைத் தொகுத்து இந்நூலில் பதிவுசெய்திருக்கிறேன். இதுவரை சுமார் பதினேழு நேர்காணல்களை உலகத் தமிழ் அச்சு ஊடகங்களுக்காக வழங்கியிருக்கிறேன். ஆனால் அவற்றை எல்லாம் பதிவுசெய்யாமல் அவற்றில் தேர்ந்த பத்து நேர்காணல் களையே இங்கு இடம்பெறச் செய்திருக்கிறேன். பெரும்பாலான கேள்விகள் நூல்தேட்டம் பற்றியும் எனது எழுத்துப்பணிகள் பற்றியுமே சுற்றிச் சுற்றி கேட்கப்படுவதால், அவற்றின் மீள் பதிவில் அக்கறை கொள்ளவில்லை. ஓரளவு வெவ்வேறு தளங்களில் கேள்விகளைக் கேட்டு சுவாரஸ்யமான பதில்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நேர்காணல்களையே இங்கு இடம்பெறச் செய்துள்ளேன். இருந்த போதிலும், அவற்றிலும் ஆங்காங்கே கூறியது கூறல் நிலைமை ஏற்பட்டுள்ளமையை வாசகர் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

இந்நூல் ஒருவகையில் எனது வாழ்வும் பணிகளும் பற்றிய நூலாகவே கருதப்படலாம்.

இந்நூலை செவ்வனே வெளியிட உதவிய கொழும்பு குமரன் புத்தக இல்லத்தின் நூலாக்கக் குழுவினருக்கும், எனது நூல்களை விலைகொடுத்து வாங்கித் தமது நூற்சேர்க்கைகளில் சேர்த்துக் கொள்ளும் அனைத்து நூலகங்களுக்கும், எனது கட்டுரைகளை ஆர்வத்துடன் வாசிக்கும் அன்பு வாசகர்களுக்கும், எனது படைப் பாக்கங்களை ஆர்வத்துடன் பிரசுரித்து வரும் அனைத்து ஊடகத் துறையினருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

***என்.செல்வராஜா***
நூலகவியலாளர், லண்டன்.
*20.05.2020*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நூலகர் நுலகவியலாளரான கதை

## "ஞானம்" நேர்காணல்

**திரு. தி. ஞானசேகரன் (ஞானம்): வணக்கம் திரு என்.செல்வராஜா அவர்களே, முதலில் தங்களது பிறப்பு, இளமைப்பருவம், கல்வி போன்ற விபரங்களைச் சுருக்கமாகத் தாருங்கள்.**

**திரு. என். செல்வராஜா (செல்வா):** யாழ்ப்பாணத்தில் ஆனைக் கோட்டை எனது தாயாரின் பூர்வீக மண். தந்தையார் யாழ்ப்பாணம்-வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவர். தந்தையார் வல்லிபுரம் நடராஜா அவர்கள் தென்னிலங்கையில் அந்நாட்களில் பொது வேலைப்பகுதி என அழைக்கப்படும் (P.W.D.- Public Works Department) திணைக்களத்தில் ஓவர்சியராகப் பணியாற்றியவர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்த இந்தப் பதவிநிலை 70களில் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது என்பது வரலாறு.

எனது தந்தையார் தென்னிலங்கையில் ஜா-எல பகுதியில் பணியாற்றிய வேளையில் அங்கிருந்த சிறு சிங்களக் கிராமமான "தண்டுகம"வில் 20-10-1954இல் ஆறாவது "கடைக்குட்டி"யாக நான் பிறந்தேன். எனக்கு மூத்தவர் அண்ணர், தொடர்ந்து இரு சகோதரிகள், பின்னர் இரு அண்ணர்கள் என எனக்கு மூத்தவர்கள் ஐவர். எனது பிறப்பின் பின் ஓரிரு வருடங்களில் பெற்றோர் நீர்கொழும்பில் கடற்கரைத்தெருவில் புனித செபஸ்தியார் தேவால யத்துக்கு அண்மையில் இருந்த லக்ஸ்மன் மாவத்தையில் ஒரு வீட்டை நிர்மாணித்தார்கள். "தமிழகம்" என்று அதற்குப் பெயரிட் டார்கள். எனது 16 வயதுவரை அங்கேயே வாழ்ந்துவந்தேன்.

"ஓவசியர் நடராஜா" என்றால் தந்தையை நீர்கொழும்புப் பிரதேசத்தில் எவரும் அறிவர். தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்த அவரால் சமகாலத்தில் நீர்கொழும்பின் ஆஸ்தான அரசியல்கட்சியாகவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளராக இருக்கமுடிந்துள்ளது. அன்றைய பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த டென்சில் பெர்ணாண்டோ தந்தையுடன் நட்புப் பாராட்டி வந்தவர். காங்கேசன்துறையிலிருந்து கொழும் புக்குத் தனது காரில் பயணிக்கும் தந்தை செல்வா (சா.ஜே.வி. செல்வநாயகம்) இடையில் தனது நண்பரான எமது தந்தையையும் சந்தித்து உரையாடிச்செல்ல எமது இல்லத்துக்கும் வருவதுண்டு. நீர்கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் முருக பூபதி எனது அண்ணரின் வகுப்புத் தோழன். அவர் எழுதிய ஒரு கட்டுரையில் எனது தந்தையார் தமிழரசுக் கட்சியின் கொடியைத் தனது காரில் பறக்கவிட்டுத் திரிந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அன்றைய விவேகானந்தா வித்தியாலயம் நான் பிறந்த ஆண்டிலேயே (1954) உருவாக்கப்பட்டது. தந்தையார் இந்து வாலிபர் சங்கத்துடனும், விவேகானந்த வித்தியாலயத்துடனும் நெருங்கிய தொடர்புடையவர். எனது ஆரம்பக் கல்வியும் அந்தப் பாடசாலையிலேயே தொடங்கிற்று. எட்டாம் வகுப்பில் கல்விகற்ற வேளையில் விவேகானந்த மகா வித்தியாலயம் தற்போதைய விஜயரத்தினம் மகா வித்தியாலயமாக பெயர்மாற்றம் பெற்ற வேளையில் அதனை எதிர்த்துவந்த அணியில் இருந்த எமது தந்தையார், என்னையும் எனது அண்ணரையும் அப்பாடசாலையி லிருந்து நீக்கி நீர்கொழும்பு புனித மரியாள் கல்லூரியில் சேர்த்து விட்டார். க.பொ.த. சாதாரண தரம் வரை அங்கேயே கற்றுவந்தேன். விவேகானந்த வித்தியாலயத்தில் நூலகம் எதுவும் இருக்கவில்லை. ஆனால் பாடசாலைக்கு அருகிலிருந்த இந்து வாலிபர் சங்கத்தில் சிறியதொரு தடுப்பறையில் சிறிய நூலகமொன்று இருந்துவந்தது. தந்தையுடன் சங்கத்துக்குச் செல்லும் வேளைகளில் அந்தச் சிறிய நூலகமே எனக்கு பொழுதுபோக்கிடமாயிருந்தது. பின்னர் புனித மரியாள் கல்லூரிக்கு மாற்றம்பெற்றுச் சென்ற பின்னர் அங்கிருந்த பாடசாலை நூலகமும் அதன் பொறுப்பாளராக இருந்த நூலகரும் எனக்கு நண்பர்களாயினர். அங்கேயே எனது வாசிப்பு மெருகேறத் தொடங்கியது.

1970இல் எனது தந்தையாரின் மறைவின் பின்னர் நிரந்தரமாக நீர்கொழும்பை விட்டுப் பிரிந்து ஆனைக்கோட்டையில் தாயா ருடன் அவர் நிர்மாணித்த "அன்னை இல்லம்" என்ற புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தில் எமது வாழ்க்கையைத் தொடரலானோம். யாழ்ப்பாணக் கல்லூரியில் சிலகாலம் கற்றபின்னர், நூலகவியல் துறையினுள் நுழைந்துகொண்டேன்.

**(ஞானம்): இலங்கையில் இருந்த காலத்தில் தாங்கள் எங்கெங்கு தொழில் புரிந்துள்ளீர்கள்?**

**(செல்வா):** நூலகவியல் துறையில் டிப்ளோமா கல்வியைத் தொடர்ந்த பின்னர் இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகர் பதவிக்காக விண்ணப்பித்த வேளையில் அப்பணியில் சேர்வதற்கான நீண்டதொரு காத்திருப்புக் காலத்தில் முதலாவதாக பதவியேற்ற நூலகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகத்தில் அமைந்துள்ள இராமநாதன் மகளிர் கல்லூரியின் நூலகமாகும். மே 1978 முதல் ஏப்ரல் 1979 வரை இக்கல்லூரியின் நூலகராகப் பணியாற்றினேன்.

தொடர்ந்து ஏப்ரல் 1979 முதல் ஜனவரி 1980 வரை யாழ்ப் பாணம் சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ் மாவட்ட நூ லகப் பொறுப்பாளர் பதவியை புங்குடுதீவில் அமைந்திருந்த பணிமனையில் சிறிதுகாலம் பொறுப்பேற்று ஒழுங்குபடுத்தியி ருந்தேன். ஏ.ரீ. ஆரியரட்ணா என்ற சிங்களப் பெரியார் தென்னி லங்கையில் மொரட்டுவை என்ற இடத்தில் ஸ்தாபித்த சர்வோதய மத்திய நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண மக்களுக்கு உதவும் பொருட்டு தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் அமைத்திருந்த வளாகம் இதுவாகும்.

சர்வோதயத்தில் பணியாற்றிய வேளையில் இலங்கை உள்ளூ ராட்சி அமைச்சு தரம் 3 நூலகராக திருக்கோணமலை மாவட் டத்திற்கு என்னைத் தேர்வுசெய்து பெப்ரவரி 1980 இல் பதவிக் கடிதத்தை உள்ளூராட்சி அமைச்சகம் அனுப்பியிருந்தது. தம்பலகாமம் என்ற புராதன தமிழ்க் கிராமத்தை அடுத்துள்ள முள்ளிப்பொத்தானை என்ற முஸ்லிம் - சிங்கள விவசாயக் குடியிருப்பில் (கந்தளாய் செல்லும் பாதையில்) வயல்களுக்கு நடுவில் எனது சிறு நூலகம் அமைந்திருந்தது. பெப்ரவரி 1981 வரை அந்த நூலகத்தை நிர்வகித்து வந்தேன். மாலை வேளைகளில் மாட்டுப் பட்டியாக உருமாறும் அந்த நூலகத்தின் 175 நூல் களையும் பாதுகாக்கும் பணி என்னுடையது. நூலகத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களை வரவைப்பதற்கே பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலையில் அந்த ஊரின் நூலகசேவை அமைந்திருந்தது.

முள்ளிப்பொத்தானை அரச நூலகராகப் பணியாற்றிய வேளையில் சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஏ.ரீ.ஆரியரத்தி னாவின் பரிந்துரைக்கமைவாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தொண்டர் சேவைக்கான அழைப்பை ஏற்று, மனதுக்குப் பிடிக்காத அந்த அரச பதவியை ஒரு ஆண்டிலேயே பெப்ரவரி 1981 இல் துறந்துவிட்டேன்.

இந்தோனேசியா, ஐக்கிய நாடுகள் சபையின் (UNDP Volunteer Project) கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாக எனக்கு நல்லதொரு பணியாற்றும் வாய்ப்பை பெப்ரவரி 1981-பெப்ரவரி 1982 காலகட்டத்தில் சர்வோதய இயக்கம் வழங்கியது.

**(ஞானம்): ஐக்கிய நாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாக இந்தோனேசியாவில் கடமையாற்றிய அந்த அனுபவம் பற்றிக் கூறுங்கள்**

**(செல்வா):** ஐக்கிய நாடுகள் சபையின் UNDP Volunteer Project என்பது அங்கத்துவ நாடுகளுக்கிடையே துறைசார் திறன்மிக்க இளைஞர்களை சமூகசேவைகளுக்காகப் பரிமாறிக்கொள்ளும் ஒரு வேலைத்திட்டமாகும். சமூக சேவை அனுபவம் மிக்கவர்கள் இத்திட்டத்திற்காக உள்ளூர் சமூகசேவை நிறுவனங்களினூடாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குப் பரிந்துரை செய்யப்படுவார்கள்.

அத்தகைய திட்டமொன்றின்கீழ், கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாக எனக்கு இந்தோனேசியாவில், அந்நாட்டின் பட்டதாரிகள் தொண்டர் அமைப்பான "புட்சி" (BUTSI) நிறுவனத்துடன் இணைந்து பெப்ரவரி 1981-பெப்ரவரி 1982 காலகட்டத்தில் பணியாற்றும் வாய்ப்பை இலங்கைச் சர்வோதய இயக்கம் ஏற்படுத்தித் தந்தது. இத்திட்டத்தின் கீழ் இந்தோனேசியாவின் ஜாவாபாரத் (West Java) பகுதியில் உள்ள பண்டுங் மாநிலத்தில் உள்ள மரேங்மாங் என்ற கிராமத்தில் ஒரு கிராமப் பொது நூலகத்தினை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உதவியுடன் நிறுவி, அக்கிராம மக்களுக்கு பொது நூலக சேவை களை அறிமுகம்செய்து வைக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சேவையின் ஞாபகார்த்தமாக இந்நூலகம் அமைந்துள்ள பாதைக்கு "ஜலாங் செல்வா" என்று கிராமத்தவரால் பெயர் சூட்டப்பட்டமையும், இந்நூலகத் திட்டத்தை பார்வையிட இந்தோனேசியாவின் கல்வி மந்திரியே வருகைதந்து என்னை கௌரவித்தமையும் இன்றும் பசுமை நினைவுகளாயுள்ளன. எனது பயணத்தின் முதல் ஒரு மாதம் தலைநகர் ஜகார்த்தாவில் இந்தோனேஷிய மொழியை பயிற்றுவித்தார்கள். அரையாண்டு சேவை அறிக்கையினை பண்டுங்கில் இடம்பெற்ற ஐ.நா. தொண்டர்களின் மகாநாட்டில் இந்தோனேஷிய மொழியிலேயே வழங்கியிருந்தேன். பின்னர் அப்பிரதேச பாடசாலைகளிலும் நூலகங்களை விருத்திசெய்யும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து அவர்களுக்கான கைநூல் ஒன்றினையும் அவர்களது மொழியிலேயே வழங்கியிருந்தேன். அந்த ஒரு வருட அனுபவங்கள் என்னிடம் வாழ்வின் மேலான தன்னம்பிக்கையை வெகுவாக வளர்த்திருந்தன.

**(ஞானம்): இதன்பின்னர் மீண்டும் இலங்கை திரும்பி ஆற்றிய பணிகள் பற்றிக் கூறுங்கள்.**

**(செல்வா):** பெப்ரவரியில் நாடு திரும்பியதும் உடனடியாகவே இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட மத்திய நூலகப் பொறுப்பாளர் பதவியை மீண்டும் பொறுப்பேற்று மார்ச் 1982 இலிருந்து நவம்பர் 1983 வரை அங்கு பணியாற்றினேன். 1983 இனக்கலவரத்தின் பின்னர் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வோதயத்தின் வடமாகாணக் கிளையாகச் செயற்பட்டுவந்த புங்குடுதீவு வளாகம், மொரட்டுவை மத்திய நிலையத்திலிருந்து பிரிந்து, புங்குடுதீவில் தன் பிரதான பணிமனையைக் கொண்டு "வட இலங்கை சர்வோதய"மாகத் தனித்தியங்கத் தொடங்கியது. எனது பணிக்காலத்தில் இங்குள்ள பிரதான நூலகம், குடாநாட்டின் 12 கிளை நூலகங்களை உருவாக்கி வழிநடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுச் சேவையை முடித்து வந்த எனக்கு மீண்டும் நான் முன்னர் விட்டுச்சென்ற நூலகப்பணியை புதிய சர்வதேச நிதி வசதிகளுடன் விரிவாக்கும் வாய்ப்பு இங்கு கிடைத்தது.

இலங்கையில் இடம்பெற்ற 1983 வன்செயல்கள், இராணுவ ஆட்சியை யாழ்ப்பாணத்துக்குள் பலவந்தமாகப் புகுத்தியதால் கொழும்புடனான வட மாகாண சர்வோதய இயக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமுகமான தொடர்புக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் சுதந்திரமான சமூகப்பணிகளுக்கும் தடைகள் ஏற்பட்டன. இதனால் சர்வோதய இயக்கச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பொருளாதார ரீதியாகவும் அவ்வேளையில் பின்னடைவு நிலையே காணப்பட்டது. மனைவி, ஒரு மகள் என்று எனது குடும்பப் பொறுப்பும் அதிகமாயிற்று. இதனால், சர்வோதய இயக்கத்தின் முழுநேரப் பணியாளன் என்ற நிலையிலிருந்து நீங்கி, டிசம்பர் 1983 முதல் யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் (Evelyn Rutnam Institute for Inter cultural Studies) ஆய்வு நூலகத்தின் நூலகராகக் கடமையேற்று எனது நூலக சேவையினை பிறிதொரு தளத்தில் மேற்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்டேன். சர்வோதயத்தின் வேலைத்திட்டங்களுக்கு தொண்டடிப்படையில் தொடர்ந்தும் சேவையாற்றிவந்தேன். அந்த உறவு இன்றும் தொடர்கின்றது.

திருநெல்வேலி, ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனமானது, கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் (Dr. James T.Rutnam) அவர்களால் தனது துணைவியாரின் ஞாபகார்த்தமாக 1981இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட வேளையில் கட்டப்பட்டது. பல்லின, சமூக, கலாச்சார ஆய்வு நூலகம் இது. இதன் பிரதான அங்கத்தவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் புத்திஜீவிகளுமாகவே இருந்தனர். இந்நிறுவனத்தில் பேராசிரியர் கா.இந்திரபாலா இயக்குநராகவும், ஆ.சிவநேசச் செல்வன் பிரதான நூலகராகவும் பணியாற்றிய வேளையில்-சிவநேசச் செல்வன் வீரகேசரி வார இதழின் பிரதம ஆசிரியராகப் பதவியேற்றுச்சென்றபோது, அவ்வெற்றிடத்தை நான் நிரப்பி யிருந்தேன். காலக்கிரமத்தில் 1985இல் பேராசிரியர் இந்திரபாலா அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் முழு நிறுவனத்தையும் பொறுப்பேற்று நடத்தவேண்டிய பாரிய பணி என்மீது சுமத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் ஒரு கட்டத்தில் நூலகக் கட்டிடம் கையகப்படுத்தப்படுவதை தடுப்பதிலும், இந்திய அமைதிப்படையின் காலகட்டத்தில் அவர்களின் அத்துமீறல்களிலிருந்து நூலகத்தைப் பாதுகாப்பதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக கவனம் செலுத்தவேண்டியிருந்தது. டிசம்பர் 1989 வரை எனது பணி இங்கு தொடர்ந்தது.

1983-1989 காலகட்டம் ஈழத்தமிழரின் அமைதியான வாழ்வியல் போர்ச்சூழலுக்குள் படிப்படியாகத் தள்ளப்பட்ட காலகட்டம். கடல், வான், தரைத் தாக்குதலுக்குள் அல்லலுற்ற ஈழத் தமிழ் மக்களின் வாழ்வியல் அன்றாட உயிர்வாழ்தலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மாற்றப்பட்டதால், தமிழ்ப் பிரதேசமெங்கும் நூலகசேவைகள் அத்தியாவசியமற்ற பணிகளாக்கப்பட்டு எமது சேவைப்பரப்பு மிகவும் சுருக்கப்பட்டது. இந்நிலையில் கொழும்பில் மாத்திரமே நடைபெற்று வந்த இலங்கை நூலகச் சங்கத்தின் இறுதிப்பரீட்சையை நிறைவுசெய்யும் நோக்குடன், எனது தொழில்வழங்குநரான யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகத்திடம் இரண்டுக் கல்விசார் விடுப்பினைப்பெற்று, குடும்பத்தினருடன் கொழும்புக்குச் சென்று பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இங்கிருக்கும் வேளையில் கொழும்புத் தமிழ்ச்சங்கம், இந்து சமய விவகார அமைச்சு ஆகியவற்றின் நூலகங்களை புனரமைத்துத் தரும் பணியையும் மேற்கொள்ள முடிந்தது.

இந்து சமய விவகார அமைச்சு நூலகத்தை புனரமைத்துக் கொண்டிருந்த வேளையில் என்னைச் சந்தித்த அமரர் நீலன் திருச்செல்வத்தின் வேண்டுகோளின்பேரில் அவரது நிறுவனமான கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலையம், (International Centre for Ethnic Studies) ஆய்வு நூலகப் பொறுப்பாளர் பதவியை ஜனவரி 1990 முதல் ஒக்டோபர் 1992 வரை ஏற்றிருந்தேன். அந்நிறுவனத்தின் இயக்குநராக ராதிகா குமாரசாமி பணியாற்றி வந்தார். எமது நூலக வாடிக்கையாளர்களில், அப்போது பாரிசில் பல்கலைக்கழக ஆய்வில் ஈடுபட்டிருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குறிப்பிடத்தக்க ஒருவர். கொழும்பு இனத்துவத்துக்கான சர்வதேச நிறுவனம் திரு. நீலன் திருச்செல்வம் அவர்களால் தாபிக்கப்பட்டு வழிநடத்தப்பட்ட ஒரு நிறுவனம். அவரது நம்பிக்கைக்குரிய ஆய்வு நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பு அங்கு எனக்கேற்பட்டது. கவிஞர் சேரன், சுனில் பஸ்தியான் போன்ற அறிவுஜீவிகளின் தொடர்பும் அங்கு கிட்டியது. ஒக்டோபர் 1992இல் இலங்கையிலிருந்து லண்டனுக்குப் புலம்பெயரும்வரை அங்கு பணியாற்றினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஞானம்): 1992 இல் லண்டனுக்குப் புலம்பெயரவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது?**

**(செல்வா):** யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து கொழும்புக்குக் குடும்பத்தினருடன் புறப்படுவது எளிதாக இருக்கவில்லை. முதலில் விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாக அமைப்பினரிடம் எமது சொந்த வீட்டை ஒப்படைக்கவேண்டியிருந்தது. சுமார் ஆறு மைல்கள் வவுனியாவின் எல்லைக்கு நடந்துதான் கடக்க வேண்டியிருந்தது. விடுதலைப் புலிகளின் எல்லைக்கும் இலங்கை இராணுவத்தின் எல்லைக்கும் இடைப்பட்ட No man's land இனூடாக உயிரைக் கையிலேந்தியபடியே பயணப் பொதிகளுடன் நானும் துணைவியாரும், மூன்று குழந்தைகளும் நடந்தே கடந்த அனுபவம் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாதது. கொழும்பில் ஒரு வருடம் கடந்த நிலையில் யாழ்ப்பாணக் கல்லூரி வழங்கியிருந்த ஓராண்டு விடுப்புக் காலம் முடிவடைந்ததும் யாழ்ப்பாணம் திரும்புவதா, கொழும்பிலேயே தற்காலிகமாகத் தங்கி இருப்பதா அல்லது வெளிநாடொன்றுக்கு நிரந்தரமாகப் போய்விடுவதா என்ற தீர்மானத்தை எடுக்கும் நிலை எமக்கு ஏற்பட்டது. குழந்தைகளுடன் யாழ்ப்பாணம் திரும்புவதற்கேற்ற சூழ்நிலை அங்கிருக்கவில்லை. திரும்பிச் செல்லும் பாதைகள் இன்னமும் முற்றாக அடைக்கப்பட்டே இருந்தன. போர் நிலைமையில் தீவிரத்தன்மை கூடியிருந்தது. அதனால் யாழ்ப்பாணம் திரும்பிச் செல்லும் மன நிலையில் குடும்பத்தினர் இருக்கவில்லை. கொழும்பிலேயே தங்கி இருப்பதால் வீட்டு வாடகை மற்றும் விலைவாசி உயர்வினை தனியொருவனால் சமாளிக்கமுடியாது என்ற நிலையே தோன்றியது. அன்று என் நெஞ்சினில் பல கனவுகளைச் சுமந்துவந்தவன் நான். கொழும்பில் எனது உழைப்பு அன்றாடத் தேவைகளையே நிறைவேற்றப் போதுமானதாக இருந்தது. உறவினரான வாடகை வீட்டுக்காரரும் வாடகையை நான்கு மடங்காக்கியிருந்தார்கள். அதுவேறு என்னைப் பயமுறுத்திக்கொண்டிருந்தது.

ஏழாண்டுகளாக நடத்தி வந்த "நூலகவியல்" காலாண்டிதழின் தொடர்ச்சி, 1989இல் மனதில் கருக்கொண்ட "நூல் தேட்டம்" என்பன என்னிடம் மேலதிக பொருளாதார வலுவை எதிர்பார்த்திருந்தன. இலங்கையில் ஒரு சாதாரண நூலகனால் இவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிக்கமுடியாது என்று திடமாக நம்பினேன். மனைவி-பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் திரும்புவதையும் மறந்து, கொழும்பில் தங்கியிருக்கும் எண்ணத்தையும் துறந்து, எம்முன் அகலத் திறந்திருந்த வெளிநாட்டுப் பயணத்திற்கான கதவை நாடிச்சென்றோம்.

எமது புலப்பெயர்வு முற்றிலும் பொருளாதாரப் புலப்பெயர்வுதான். "அகதி" என்ற சொல்லை நான் என்றுமே ஏற்றுக்கொள்வதில்லை. அன்று மலாயாவுக்கு 1870இல் தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றவர்கள் அகதிகளாகக் கருதப்படவில்லை. அது போலவே நம்மில் பெரும்பாலானவர்கள் பொருளாதார இலக்கை அடைவதற்காகவே நாடுகடந்தோம். இருப்பினும் எனது பொருளாதார நோக்கத்தில் ஒரு பொது நோக்கமும் கலந்திருந்தது. புகலிட வாழ்வில் இன்று இருபத்திநான்கு ஆண்டுகளைக் கடந்த நிலையில் எனது வாழ்க்கைப் பாதையை இன்றைய கணப்பொழுதில் உங்களது கேள்விக்கான பதிலுக்காகத் திரும்பிப் பார்க்கிறேன். அன்று நான் புலம்பெயராதிருந்திருந்தால் இன்று எனது ஈழத்துத் தமிழ் இனத்துக்கான தனிமனித முயற்சியில் துணிச்சலாக இறங்கியிருக்க முடியாது. இதுவரையில் எனது சாதனைகளாக நான் எண்ணிக்கொள்ளும் எதனையும் நிறைவேற்றியிருக்க முடியாது. 15000 ஈழத்துத் தமிழ் நூல்களை உலகெங்கும் பறந்து திரிந்து சேர்த்துத் தொகுத்து எமது இனத்தின் செழுமையை உலகறியச் செய்யும் நூல்தேட்டம் என்ற பெருந்தொகுப்பை கனவாகவே தாங்கிக்கொண்டிருந்திருப்பேன். அத்துடன் இன்று எனது படைப்புகளாக வலம்வரும் 56 நூல்களையும் ஈழத்துத் தமிழ் அறிவியல்துறைக்கு வழங்கியிருக்கமுடியாது. ஈழத்தமிழ்ப் படைப்பிலக்கியங்களை சர்வதேசத் தமிழர்களிடம் எனது செலவில் கொண்டுசேர்த்திருக்கமுடியாது.

**(ஞானம்): லண்டனில் உங்கள் தொழில் மற்றும் நூலகச்சேவை தொடர்பான பணிகள் எவ்வாறு அமைந்தன?**

**(செல்வா):** லண்டன் வந்ததும் என்னை இந்நாட்டுக்கு இயைபாக்கம் செய்துகொள்ள சுமார் ஓராண்டு பிடித்தது. அதற்கிடையில் துணைவியார் தொழில்வாய்ப்பைப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூட்டனில் இயங்கிவந்த வக்சோல் Vauxhall கார் உற்பத்தித் தொழிற்சாலையில் தன் பணியைத் தொடங்கிவிட்டார். பிள்ளைகள் மூவரதும் கல்வியில் நானே அதிக நேரம் செலவிட வேண்டியிருந்தது. தமிழ்மூலம் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றிருந்த மூத்த மகளை நான்காம் வகுப்பில் திடீரென முற்றிலும் ஆங்கில மூலக்கல்வி அமைப்பிற்குத் தயார் செய்வது முதலில் கடினமானதாக இருந்தது. மற்றைய இருவரும் சிறுவயதாகையால் இலகுவாக பிரித்தானிய கல்விச் சேவைக்குள் உள்வாங்கப்பட்டு விட்டார்கள். காலக்கிரமத்தில் பிள்ளைகள் மூவரும் சுதாரித்து கல்வியில் சிறப்பாக காலூன்றி முன்னேறத் தொடங்கிய வேளையில் எனக்கு பிரித்தானிய தபால் சேவையில் நிரந்தரமாகப் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. நான் கற்ற துறைக்கும் கிட்டிய தொழிற்துறைக்கும் சம்பந்தமே இல்லாத போதிலும், நூலகவியல்துறையிலும் நூலியல் துறையிலும் தொடர்ந்தும் ஈடுபடும் வாய்ப்பை தபால்துறையில் பணியாற்றியவேளையில் தக்கவைத்துக்கொண்டேன். அது என்னை உயிர்ப்புடன் வைத்துக்கொள்ள உதவியதெனலாம்.

உழைப்பிற்காகத் தபால் துறையில் பணியாற்றிய அதே வேளையில் எஞ்சிய நேரத்தை மிகக் கவனமாகத் திட்டமிட்டு நூல்தேட்டம், மற்றும் நூலியல் பணிகளுக்காகச் செலவிட்டு வந்தேன். அதற்குத் தேவையான பொருளாதார வளத்தை எனது தொழிற்துறை உழைப்பே வழங்கிவந்தது. நான் லண்டன் வந்த செய்தியை இங்குள்ள பலரும் அறிந்துகொண்டதன் பயனாக புதினம் பத்திரிகையின் ஆசிரியர் ஈ.கே.ராஜகோபால், ஐ.பீ.சீ. வானொலியின் இயக்குநராகவிருந்த சிவரஞ்ஜித் போன்றோருடன் தொடர்பினைப் பெறவும் முடிந்தது. அதன்பின்னர் பிரித்தானிய பத்திரிகைகளிலும், வானொலியிலும் எனது நூலியல் செய்திகள் படிப்படியாக வெளிவரத் தொடங்கின. ஆர்வத்துடன் செவி மடுக்கும் ஒரு அறிவுஜீவிகள் சமூகமும் அன்பான வாசகர்/ வானொலி நேயர் குழுவும் ஐரோப்பா முழுவதும் உருவாகி எனது நட்பு வட்டம் துரிதகெதியில் பரவலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஞானம்): நூலகவியல் காலாண்டு சஞ்சிகையின் தாபக ஆசிரியராகப் பணியாற்றியுள்ளீர்கள். அது தொடர்பான அனுபவங்களைக் கூறுங்கள்.**

**(செல்வா):** இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் நூலகங்களும் நூலகர்களும் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு அறிவியல், தொழில்நுட்ப ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு அக்கால கட்டத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட தொண்டு அடிப்படையிலான அமைப்புக்கள் எதுவும் தமிழர் தாயக மண்ணில் இருந்திருக்கவில்லை. இந்நிலை பற்றி ஈழத்தின் தமிழ் நூலகத்துறையின் முன்னோடிகளாக அந்நாட்களில் இருந்த கலாநிதி. வே.இ.பாக்கியநாதன், எஸ்.எம்.கமால்தீன், இ.முருகவேள் போன்றோருடன் சிலகாலங்கள் கலந்துரையாடித் திட்டமிட்டு வந்திருந்தேன். இதன் விளைவாக இந்த நூலக மும்மூர்த்திகளின் ஆசியுடன் 1985இல் "அயோத்தி நூலக சேவைகள்" என்ற நிறுவனத்தை உருவாக்கினேன். "அயோத்தி" எனது துணைவியாரின் இல்லம். இங்குதான் முதன்முதலில் கூடி இந்தக் கலந்துரையாடலை நாங்கள் மேற்கொண்டோம். அதனால் அந்த அமைப்பிற்கும் அதே பெயரை இட்டிருந்தேன்.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நூலகவியல் கல்வியை தமிழில் பரவலாக்குவதும், அதற்காக அந்நாளில் பெரும் பற்றாக்குறையாகவிருந்த நூலகவியல்சார்ந்த நூல்களைத் தமிழில் வெளியிடுவதும், தமிழ்ப் பிரதேசங்களில் நூலகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குரிய தீர்வுக்கான தொழில்நுட்ப/துறைசார் ஆலோசனைகளை இலவசமாக, தொழில்நுட்பரீதியிலும், துறைசார் ஆலோசனை என்ற ரீதியிலும் வழங்குவதுமாகும். எனது திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க அவ்வேளையில் நல்லதொரு நூலக நண்பர்கள் வட்டம் இருந்தது. வே.இ.பாக்கியநாதன், எஸ்.எம்.கமால்தீன், சி.முருகவேள், எஸ்.ரூபசிங்கம், திருமதி விமலா பாலசுந்தரம் என்று பட்டியல் படிப்படியாக நீண்டுசென்றது.

நூலகக் கருத்தரங்குகள், நூல்வெளியீடுகள், நூலகங்களுக்கு மலிவு விலையில் காகிதாதிகள் வழங்குதல், சனசமூக நிலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13826
KOHA JPL

நூலகங்களுக்கான துறைசார் ஆலோசனைகளை வழங்குதல் என எமது சேவைகள் படிப்படியாக விரிவடைந்தன.

இத்திட்டத்திற்கு அடிப்படையாக நூலகவியல் என்ற காலாண்டு சஞ்சிகை செப்டெம்பர் 1985இல் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங் களில் இயங்கும் அனைத்து நூலகங்களுக்கும், தமிழ் நூலகர்களுக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன. யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம், யாழ் மாவட்ட உள்ளூராட்சி சேவைகள் அலுவலகம், யாழ் மாவட்ட கல்வி நிறுவனங்கள் என்பன ஆர்வத்துடன் இவற்றை விநியோகிக்க ஒழுங்குசெய்திருந்தன. வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில், தமிழ்மூலம் நூலகவியல் கல்வியைக் கற்கும் மாணவர்களுக்கும், சுயம்புவாக நூலகத்துறையில் ஈடுபட்டுவந்த பல தராதரப் பத்திரமற்ற நூலகர்களுக்கும் நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

ஈழநாடு பத்திரிகையிலும் அவ்வப்போது எமது செய்திகளுக்கு முன்னுரிமை அளித்து பிரசுரித்து ஆதரவு வழங்கப்பட்டது. நூலகவியல் சஞ்சிகையின் துரித வெற்றிக்கும், பிரபல்யத்துக்கும் காரணம் (அன்று தொடக்கம் இன்றுவரை) நூலகவியல்துறையில் தமிழில் கல்விபயிலும் மாணவர்களுக்குத் தமிழில் அத்துறைசார் ஆக்கங்களை வாசிக்க வசதியிருக்கவில்லை. மேலும் அவர்களுக் கான துறைசார் கட்டுரைகளை தமிழில் எழுதி வழங்குவதற்கும் அவர்களது விரிவுரையாளர்களுக்கு உந்துதல் தருவதற்கும் தேசிய மட்டத்தில் எந்தவொரு நூலகவியல் துறைசார் சஞ்சிகையும் தமிழ் மொழியில் இருக்கவில்லை. சிங்களத்தில் இரண்டுக்கும் அதிகமான சஞ்சிகைகள் நூலகச் சங்க மட்டத்திலும், இலங்கைத் தேசிய நூலக மட்டத்திலும் வெளிவந்தவண்ணமிருந்தன. சிங்கள மொழியிலான நூலகவியல்துறை நூல்களும் ஏராளமாக இருந்தன. ஆங்கிலத்தில் Library News, Library Review போன்ற சஞ்சிகைகள் அவ்வப்போது வெளிவந்தாலும் அவற்றில் சிங்கள, ஆங்கிலக் கட்டுரைகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் தமிழ்க் கட்டுரைகளுக்கு வழங்கப்படவில்லை.

எனது மனதில் நூலகவியல் சஞ்சிகையை முற்றிலும் தமிழில் வெளியிட வேண்டும் என்ற விதையை விதைக்கக் காரணமாயி

யாழ்ப்பாண பொதுசன நூலகம் சிறப்பு சேகரிப்பு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தவர் திரு. எஸ்.எம்.கமால்தீன் அவர்களாவார். ஒரு தடவை அவர் "நூலகமும் சமூகமும்" என்ற தலைப்பில் தமிழில் எழுதிய கட்டுரையொன்றை பிரசுரத்திற்காக மேற்கண்ட சஞ்சிகைகளில் ஒன்றிற்கு அனுப்பியும் அவர்கள் அதனைப் பிரசுரிக்கவில்லை. ஏன் என்று காரணம் கேட்டபோது, அதனை வாசித்து தேர்வுசெய்ய தமிழ் தெரிந்த ஒருவர் சஞ்சிகைப் பிரிவில் இல்லை என்றார்களாம். இதனை அமரர் கமால்தீனே ஒருதடவை என்னிடம் குறிப்பிட்டிருந்தார். இத்தனைக்கும் ஈழத்துத் தமிழ் நூலகவியலின் முன்னோடியான அவர் தேசிய நூலகசேவைகள் சபையின் முக்கிய நிர்வாகப் பொறுப்பை அந்நாட்களில் ஏற்றிருந்தவர். ஈழத்துத் தமிழ் நூலகவியலின் தந்தையாகவே எம்மால் அறியப்பட்டவர். அவருடைய கட்டுரைக்கே இந்தக் கதியென்றால் அவரது மாணவர்களான எம்மவர்களின் நிலையை என்னென்பது என்று சிந்தித்தோம். அன்றைய உந்துதலின் பயனாகவே நூலகவியல் சஞ்சிகையை நானே ஏற்று நடத்தத் தீர்மானித்தேன். ஏழாண்டுகள் தொடர்ந்து காலாண்டிதழாக நடத்தி வெற்றியும் கண்டேன்.

நூலகவியல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் திரு சி.முருகவேள், வே.இ.பாக்கியநாதன், இ.பாலசுந்தரம், திருமதி ரூபா நடராஜா, திருமதி ரோ.பரராஜசிங்கம், திரு. எஸ்.எம். கமால்தீன், திரு.செ.கிருஷ்ணராஜா ஆகியோர் பணியாற்றினார்கள். காலாண்டுச் சஞ்சிகை அந்நாளில் பிரதியின் விலை 10 ரூபாவாக விற்கப்பட்டது. அவ்வேளையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய பிரதேச பொது நுலகர்கள் பிரதிகளை விநியோகிக்க எனக்குத் துணைநின்றார்கள். வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவிருந்த திரு சுந்தரம் திவகலாலா அவர்கள் (தற்பொழுது இலங்கையில் ஆறுதல் அமைப்பை நிர்வகித்து வருபவர்) முன்வந்து தன் கட்டுப்பாட்டுக்குள் இருந்த அனைத்து பொது நூலகங்களும் நூல்தேட்டத்தை கொள்வனவு செய்யவேண்டும் என்று பரிந்துரை செய்திருந்ததுடன் அவர்கள் சஞ்சிகைகளைப் பெறுகிறார்களா என்று அவ்வப்போது உறுதிப் படுத்தியும் வந்திருந்தார். இவர்களைப்போன்ற ஆரோக்கியமான தொரு நட்பு வட்டத்தின் உதவியுடன் என்னால் நூலகவியலை தடையின்றிக் கொண்டுநடத்த முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991வரை தடங்கலின்றி வெளிவந்த நூலகவியல் சஞ்சிகை, நான் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றதோடு வெளிவராது நின்றுபோயிற்று. தபால் போக்குவரத்து, மற்றும் போர்ச்சூழல் காரணமாக நூலகவியல் மீண்டும் வெளிவருவது இன்றுவரை தடைப்பட்டுள்ளது. இரண்டு இதழ்கள் லண்டனி லிருந்து தொகுத்து, கொழும்பு குமரன் இல்லத்தின் மூலம் 2005/2006 காலகட்டத்தில் அச்சிடப்பட்டு வெளியிட்டிருந்த போதிலும், விநியோகத்தில் காணப்பட்ட தேக்க நிலை காரணமாக தொடர்ந்து எனது முயற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை. கடந்த 2013இல் இலங்கைக்கு வந்திருந்தபோது, நூலகவியல்துறை மாணவர்கள் நூலகவியல் சஞ்சிகைப் பிரதிகளை இப்பொழுதும் நூலகங்களில் பார்வையிட்டு வாசித்துவருவதைக் கண்டு மெய் சிலிர்த்தேன். அதன் விளைவாக, உடனடியாகவே ஏழாண்டு காலத்துக்குரிய முழு நூலகவியல் சஞ்சிகைப் பிரதிகளையும் மீளவும் அச்சேற்றி நூலகவியல் சஞ்சிகையின் பெருந்தொகுப்பாக 2013இல் குமரன் புத்தக இல்லத்தின் வாயிலாக வெளியிட்டி ருக்கிறேன். பிரதான நூலகங்களில் அதனைப் பார்வையிடலாம்.

**(ஞானம்): தாங்கள் மேற்கொண்டு வரும் நூல் தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கான சிந்தனை எவ்வாறு உருவானது? இதுவரை எத்தனை நூல்கள் பதிவாகியுள்ளன?**

**(செல்வா):** நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும் என்பதை அறிவோம். இத்தகைய பதிவுகள் நாகரீகம் மிக்க ஒவ்வொரு இனத்திற்கும் மிக அவசியமானதாகும் என்பதையும் நாம் அறிவோம். இருந்தாலும், இதுவரை எமது தமிழ் இனத்தில் இத்தகைய தேடல்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளை பெருமெடுப்பில் யார் தொடங்கியிருக்கிறோம்? ஆசைப்படுவதுடன் சரியாகி விடுகின்றது. ஒரு நாட்டின், ஒரு தேசியத்தின் அறிவேடுகளைப் பதிவுசெய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டவையே உலகநாடுகளில் இயங்கி வருகின்ற ஆவணக்காப்பகங்களும், தேசிய நூலகங்களுமாகும். தமிழர் களான எம்மைப் பொறுத்தவரை எமக்கென்றொரு நாடின்றி உலகமெல்லாம் குடியேறிப் பரந்து வாழும் இனமாக எம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். எமது அறிவியல் வளங்களைப் பேண நாம் சார்ந்துள்ள நாடுகளின் பிரதான தேசிய இனங்களின் நிழலில் அவர்களது சட்டப் பாதுகாப்புடன் கூடிய அமைப்புக்களின் வாயிலாகவே அவர்களது ஆவணங்களுடன், எமது ஆவணங்களையும் சேர்த்து, அவர்களே பதிவுசெய்யவும் பாதுகாக்கவும் விட்டுவிடுகின்றோம்.

இலங்கைத் தேசிய நூற்பட்டியலில் மொழிவேறுபாடின்றி, மும்மொழி நூல்களுக்கும் கொள்கையளவில் இடம் ஒதுக்கப் பட்டிருப்பினும், தமிழ்நூற்பிரிவில் அரசாங்கப் பிரசுரங்களும் ஒரு சில தமிழ் நூல்களுமே பதிவுகளில் இடம்பெற்றுவந்துள்ளன. இதனை இலங்கைத் தேசிய நூற்பட்டியலைப் பார்வையிடும் எவரும் எளிதில் புரிந்துகொள்ளலாம். அச்சக, வெளியீட்டாளர் சட்டமூலத்தை மதித்து சுவடிகள் காப்பகத்துக்கு ஒழுங்காக நூல்களை அனுப்பிவைக்கத் தமிழ்ப் பிரதேச அச்சகங்களோ, வெளியீட்டாளர்களோ எழுத்தாளர்களோ முன்வராமையால் அங்கு தமிழ் நூல்கள் இடம்பெற வாய்ப்பில்லை என்பது ஒரு சாரார் வாதம். அனுப்பிவைக்கப்படும் தமிழ் நூல்களைப் பட்டியலிடக்கூடிய ஆட்பலம் இல்லாததால் தமிழ்நூல்கள் தேசிய நூலகத்தில் உடனுக்குடன் பதிவிடப்படுவதில்லை.

இன்றைய யதார்த்தநிலை என்னவெனில் ஈழத்துத் தமிழ் நூல்களில் பெரும்பான்மையானவை இலங்கைக்கு வெளியே தமிழகத்திலும் புகலிடத்திலும் அச்சிடப்படுவதாகும். வெளியீட்டா ளர்கள் பெரும்பாலும் நூலாசிரியராகவே இருப்பதால், வெளி யீட்டுச் செலவைக் குறைக்கவும், தமிழகச் சந்தைவாய்ப்பைப் பெறவும் தமது நூலைத் தமிழகத்தில் அச்சிடுகின்றார்கள். தாயகத்தில் உருவான அச்சகங்கள் பல இன்றைய நிலையில் தமிழகத்திலும் வேரூன்றியுள்ளதால் ஈழத்து வெளியீட்டாளர்கள் தமிழகத்தில் தம் நூலைப் பதிப்பிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதில்லை. ஈழத்தமிழர்களின் தமிழக வெளியீடுகள் இலங்கை அச்சகச்சட்டத்தின் புவியியல்ரீதியான வரையறைக்குள் அகப்படுவதில்லை. தமிழகத்தின் தேசிய நூற்பட்டியலிலும் இவை அனைத்தும் சேர்த்துக்கொள்ளப் படுவதுமில்லை. தமது நூலை வரலாற்றுப் பதிவாக்குவதில் எமது எழுத்தாளர்கள் சிலரின் அக்கறையின்மையும் இங்கு சுட்டிக்காட்டப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியது காலத்தின் தேவையாகும். இங்கு நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், இன்று தாயகத்திலும்சரி புகலிடத்திலும்சரி வெளியிடப்படும் எந்தவொரு ஈழத்தவரின் தமிழ் நூலும் தனது வெளியீடு பற்றிய பதிவை உலகில் எங்குமே மேற்கொள்ளும் சக்தியற்றுக் காணப்படுவதாகும்.

நூலகர் என்ற நிலையில் எனது தொழில்ரீதியான பிரச்சி னையாக புதிய நூல்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதென்பது உறுத்திக்கொண்டே இருந்தது. ஈழத்துத் தமிழ் நூலொன்றினைப் பற்றிய செய்தியை இலங்கையில் வாழும் தமிழ் நூலகர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இணைய வசதிகளற்ற அவ்வேளையில் சாத்தியமற்றதாகவே இருந்தது. தாயகத்திலும், புகலிடத்திலும் வெளிவரும் சஞ்சிகைகள் இவ்விடயத்தில் ஓரளவு ஆக்கபூர்வமான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை அவதானிக்க முடிந்தாலும், அந்தச் சஞ்சிகைகள்கூட விநியோகச் சிக்கலுக்குள் அல்லலுற்றுக் குறுகிய வாசகர் வட்டத்துக்குள் தம்மை அடக்கிக்கொள்கின்றன. அவற்றால் வாசகருக்குத் தாம் அறிமுகம் செய்யும் நூலைப் பெற்றுக்கொடுக்கவும் முடிவதில்லை.

உலகெங்கும் சிதறுண்டு கிடக்கும் எமது அறிவுத்தேட்டங் களைத் தேடித்தொகுத்து வகைதொகையாகப் பிரித்து வரலாற்று ஆவண மூலமாக மாற்றும் ஆரோக்கியமான முயற்சி எதுவும் தாயக மண்ணில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படவில்லை. சிறுசிறு முயற்சிகளாக காலத்துக்குக்காலம் இலக்கியகர்த்தாக்கள் சில வரையறைகளுக்குள் இயங்கி, ஆக்க இலக்கிய நூல்களைத் தேர்ந்து அவற்றைப் பட்டியல்களாகப் பதிவு செய்து வந்துள்ள மையை அறிய முடிகின்றது. எப்.எக்.சி.நடராஜா, கனக.செந்தி நாதன், சில்லையூர் செல்வராஜன், செங்கை ஆழியான், நா.சுப்பிரமணியன் போன்றோரை இப்பட்டியலில் அடக்க முடிகின்றது. இவ்வகையில் படைப்பிலக்கியங்களை பட்டியல்க ளாக்கித் தந்த தனிநபர் நூல்விபரப்பட்டியல்கள், கண்காட்சி மலர்கள், தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்கள், பிரதேச வாரியான நூல்விபரப்பட்டியல்கள் என்பன குறிப்பிடத்தக்கவை. இவை இலக்கியத்துறைசாரா அறிவுநூல்களைத் தம் பட்டியல் களுக்குள் முழுமையாகச் சேர்த்துக்கொள்ளத் தவறிவிட்டனர். மேற்கண்ட முயற்சிகள் எதுவும் ஈழத்துத் தமிழ்நூல்கள் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முழுமையான வரலாற்றுப் பார்வையைப்பெற உதவின என்று கூறமுடியாதுள்ளது. யானையைப் பார்த்த குருடனின் கதையாகவே ஈழத்துத் தமிழ் நூல்விபரங்களின் பதிவுகள் அமைந்துவிட்டன.

இத்தகையதொரு வரலாற்றுப் பின்புலத்திலேயே நூல் தேட்டத்தின் வருகை இடம்பெற்றுள்ளது. ஆரம்பத்தில் எனது வரையறுக்கப்பட்ட பொருளாதார வசதிகளுடன் யாழ்ப்பாணத்தி லிருந்து ஒரு காலாண்டு இதழாக நூல்தேட்டத்தினை வெளியிடும் ஆரம்ப முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். 50 நூல்களுக்கான பதிவுகளுடன் ஏப்ரல் 1990இலும் பின்னர் அதன் தொடர்ச்சியாக 51-112 வரையான தொடர் இலக்கமிடப்பட்ட 62 நூல்களுக்கான பதிவுகளுடன் ஜுலை 1990இலும் சிறுசஞ்சிகை உருவில் நூல்தேட்டம் இரண்டு இதழ்கள் வெளிவந்திருந்தன. தொடர்ந்து எனது உள்ளகப் புலப்பெயர்வின்போது கொழும்பிலிருந்து மூன்றாவது இதழுக்கான நூல்விபரங்களைத் தேடமுற்பட்ட வேளையில் நூல்களுடன் கணிசமான அளவு பரிச்சயத்தைக் கொண்ட ஒரு நூலகரான என் கண்களுக்கு அன்றுவரை தட்டுப் படாத ஏராளமான புதிய நூல்களின் இருப்பு, என்னையே திக்குமுக்காடச் செய்துவிட்டது.

கொழும்பில் தங்கியிருந்த வேளையில் எனது பொருளாதார வளங்கள் மிகவும் வரையறைக்குள்ளானதால், நூல்தேட்டத்தைத் தொடரும் திட்டத்தை தற்காலிகமாகக் கைவிடவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. இருப்பினும், எதிர்காலத் தேவை கருதி ஓய்வுநேரங்களில் நூல்களுக்கான பதிவுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவந்தேன்.

பின்னாளில் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்தபோது என்னைச் சுதாரித்துக்கொண்ட சில ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நூல்தேட்டத்தைத் தொடர எனது புகலிடப் பொருளாதார வளம் படிப்படியாக இடம்கொடுத்தது. இதன் பயனாக, முன்னைய காலாண்டுத் திட்டத்தைக் கைவிட்டு தொகுதிக்கு 1000 நூல்பதிவுகளாக நூல்தேட்டத்தை புதிய வடிவில் வெளியிடத் தொடங்கினேன். பிரித்தானியாவில் தமிழ் நூல்களைத் தேடிப்பெறுவதே பெரும்பாடாகவிருந்தது. இதற்காக பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்கும் பெரும் பணச்செலவுக்குரிய பயணங்களை மேற்கொள்ளவேண்டியிருந்தது. பல தனிப்பட்டவர்களின் சேகரிப்புகளை தேடிச்சென்று பார்வையிடவேண்டியிருந்தது.

நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும் ஒன்பதாவது தொகுதி 2014இலும், பத்தாவது தொகுதி 2015இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதினொராவது தொகுதி அச்சகத்தில் வெளியீட்டுக்குத் தயாராக உள்ளது.

இந்நேர்காணல் வழங்கும் வேளையில் 12ஆவது தொகுதிக்கான 190 பதிவுகளைத் தேடிவிட்டேன். லண்டனில் ஒரு முழு நேரத்தொழிலை (பிரித்தானிய தபால் திணைக்களத்தில்) வாழ்வாதாரத்திற்காக மேற்கொண்டபடி, எஞ்சிய வேளையில் எனது இனத்திற்காக இப்பணியைத் தனித்துச் சுமக்கவேண்டிய நிலை இன்றுள்ளது. இதே வேளையில் கடந்த நவம்பர் 2007இல் மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் ஒன்றினையும் தயாரித்து வழங்கியிருந்தேன். சிங்கப்பூர் தேசிய நூலகத்தினால் சிங்கப்பூரிலும், மலேசிய தேசிய நில நிதிக் கூட்டுறவு மையத்தினால் கோலாலம்பூரிலும் (மலேசியா), இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல் கடந்த டிசம்பர் 2009இல் லண்டன் ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும் என்ற அமைப்பினால் (European Tamil Documentation and Research Centre ETDRC) வெளியிடப்பட்டிருந்தது.

**(ஞானம்): சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவர்களுக்கு உசாத்துணை நூல்களாக தங்களது நூல்தேட்டம் தொகுப்புகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். அது பற்றிக் கூறுங்கள்.**

**(செல்வா):** நான் தமிழகத்திற்குச் செல்லும் வேளைகளில் அங்குள்ள தமிழியல் துறை ஆய்வாளர்கள் என்னை அழைத்து கௌரவிப்பதும் தமது கல்விநிறுவனங்களில் எனது நூலியல் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும்படி கேட்பதும் வழக்கம். பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை ஆய்வு மாணவர்களிடையே, நூல்தேட்டம் பற்றியும், புலம்பெயர் இலக்கியம், மற்றும் ஈழத்து நூலியல் தொடர்பாக உரையாற்றிய பின்னர், கலந்துரையாடல்களை மேற்கொள்வது வழக்கம். கடந்த 2013இல் எனது இலங்கைப் பயணத்தின் வழியில், தமிழகத்தில் சென்னைப் பல்கலைக்கழ கத்தின் மெரினா வளாகத்தில் எம்.ஏ. தமிழ் சிறப்பு மாணவர்களி டையே உரையாடிய வேளையில் எம்.ஏ.ஆய்வு மாணவர்களிடையே என்னை அறிமுகம் செய்து வைத்த பேராசிரியர் வீ.அரசு அவர்கள் நூல்தேட்டம், சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஈழத்துத் தமிழியல், புகலிடத் தமிழ் பற்றிய ஆய்வுகளுக்கு முக்கியமான உசாத்துணை நூலாகப் பரிந்துரை செய்யப்படுவதாகக் குறிப்பிட் டார். அது எனக்குப் பெருமகிழ்வைத் தந்தது. ஈழத்துத் தமிழியல் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் எவரும் முதலில் நூல்தேட்டம் தொகுதிகளை பார்வையிட வேண்டும் என்ற நெறிமுறை அங்கிருந்ததை அவதானித்தேன். என்னிடம் கேள்விகளைக் கேட்ட மாணவர்களும் நூல்தேட்டம் பற்றி நன்கறிந்தவராகவே இருந்தார்கள். இதே நிலைமையை திருச்சி ஆண்டவர் கலை அறிவியல் கல்லூரியில் முன்பொருமுறை மேற்கொண்ட உரைநிகழ்விலும் அவதானித்தேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர் அதிர்ஷ்டவசமாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் நூல்தேட்டத்தை பார்வையிட்டுத் தம் ஆய்வுகளின் தேடல்புலத்தை விரிவாக்கும் செயற்பாடுகள் எதுவும் நடைபெறுவதாக நான் அறியவில்லை. முற்றத்து மல்லிகைக்கு மணமில்லை என்று கருதுகிறார்களோ தெரியாது.

அண்மையில் 2015இல் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நூல்தேட்டத்தின் பத்தாவது தொகுதி அறிமுக நிகழ்வொன்றின் போது, உரையாற்றிய பேராதனைப் பல்கலைககழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் துரை மனோகரன் அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழியல் ஆய்வு செய்பவர்கள் தமது உசாத்துணை நூற்பட்டியலில் நூல்தேட்டம் பற்றிய குறிப்பைச் சேர்க்கிறார்களா என்பதை விரிவுரையாளர்கள் அவதானிக்க வேண்டும் என்றார்.

பொதுவாக நூல்தேட்டத்தின் இருப்பை ஆய்வாளர்களிடையே கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் பல்கலைக் கழகத் தமிழ் புத்திஜீவிகளுக்கு உண்டென்பேன். நூல்தேட்டத்தின் தேவை படைப்பாளிகளைப் பொறுத்தவரையில் ஒரு பதிவாகக் கொள்ளப்படுகின்ற போதிலும், ஆய்வாளர்களைப் பொறுத்த வரையில் அது உலகெங்கும் வெளியாகும் ஈழத்தவரின் பல்துறை நூல்கள் பற்றிய குறிப்புரையுடன் கூடிய தொகுப்பாக உள்ளது. உலகில் வேறெந்த நாட்டுத் தமிழ்மொழி நூல்கள் பற்றியும் இல்லாத ஆவணப்பதிவு நூல்தேட்டம் என்று பெருமையுடன் கூறிக்கொள்ள எம்மால் முடியும்.

நூல்தேட்டத்தின் பயன்பாடு தமிழர் என்ற நிலை கடந்தும் உள்ளதென்பதை ஈழத்துப் புத்திஜீவிகள், ஆய்வாளர்கள் நிச்சயம் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கான ஆதாரத்தை எனது நூல்தேட்டத்தின் 11ஆவது தொகுதியின் முகவுரைக் குறிப்பைப் பார்த்து அவர்கள் தெரிந்துகொள்ளலாம். அத்தொகுதியின் முகவுரையை எழுதியவர் சிக்காகோ பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர். அவர் ஒரு தமிழரல்லர். அவர் ஒரு ஜேர்மானியர். தமிழார்வத்தால் ஜேர்மனியில் தமிழ் கற்று, இப்பொழுது அமெரிக்காவின் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார் (Sascha Ebeling is professor of Tamil and comparative literature at the University of Chicago. He is the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

author of *Colonizing the Realm of Words. The Transformation of Tamil Literature in Nineteenth-Century South India* (SUNY Press, 2010, and Dev Publishers, 2013) and of numerous articles on Tamil literature and culture. He has translated Tamil poetry about Sri Lanka's war into English in the two books *A Second Sunrise* (Navayana, New Delhi, 2012) and *Lost Evenings, Lost Lives* (Arc, UK, 2016). Currently, he is completing a book in English on what Tamil literature can teach us about Sri Lanka's war.)

பேராசிரியர் சஷா எபெலிங் என்னுடன் சில மாதங்களுக்கு முன்னர் தொடர்புகொண்டு நூல்தேட்டத்தின் பதிவில் உள்ள சில நூல்கள் பற்றி விசாரித்தவேளையே தமிழரல்லாதவர்களிடமும் நூல்தேட்டம் சென்றடைவதை அறிந்து ஆச்சர்யமடைந்தேன். தனிமனித முயற்சி எப்படி உலக அறிஞரின் கரங்களை எட்டுகின்றது என்பதை உணர்ந்தபோது, எனக்குள் புத்துணர்ச்சி பெருகியது. நான் தேகாரோக்கியத்துடன் வாழும் வேளையிலேயே முடிந்தவரை இன்னும் பல தொகுதிகளை பதிவாக்கி வைக்க வேண்டும் என்ற ஆர்வம் பெருகியது. எனக்குக் கிடைக்கும் விருதுகளும், வாழ்த்துக்களும், பாராட்டுகளும் மாத்திரமல்லாமல் கற்றவர் சபையில் இருந்து நீட்டப்படும் ஆதரவுக் கரங்களும்தான் நூல்தேட்டத்தை 12 தொகுதிகளையும் தாண்டி இருபது தொகுதிகள் வரையிலாவது தொகுத்துச் செல்லவேண்டும் என்ற புத்துணர்வை ஊட்டுகின்றன. அவரது எழுத்தில் நூல்தேட்டம் பற்றி எழுதியதை உள்ளபடியே உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன்.

"Unfortunately, in the case of Sri Lanka's books written in Tamil, official efforts by government agencies and national institutions have not yet been successful in recording all books published. Fortunately, Mr. N. Selvarajah has taken up this task. He has dedicated his life to a work for which others employ entire bibliographical institutions or national libraries. He has accomplished a magnificent feat in listing more than 10,000 books over the past fourteen years with the next 1,000 in the current volume – all with detailed information and even a content summary for each book. He is a one-person *Library of Congress*. **For us, his readers, the information collected in the volumes of *Noolthettam* is**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**priceless! In the history of Tamil culture, few people have given such a gift to Tamil and Tamils all over the globe. And not only to Tamils, but to all of us readers who are interested in knowing more about Tamil books and Tamil culture."**

**(ஞானம்): Books Abroad அமைப்பினருடனான தங்களது தொடர்பும் அத் தொடர்பின் காரணமாகத் தாங்கள் மேற்கொண்ட பணிகள் பற்றியும் கூறுங்கள்.**

**(செல்வா):** ஸ்கொட்லாந்திலுள்ள புக்ஸ் எப்ரோட் நிறுவனம் பெரிய பொருட்செலவுடன், ஏராளமான நிதிவசதியுடன், ஆரம் பிக்கப்பட்டதொரு சர்வதேச நிறுவனமல்ல. ஸ்கொட்லாந்திலுள்ள கல்விச்சாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் சுமார் முப்பது ஆசிரியர்களின் பகுதிநேர தொண்டடிப்படையிலான கூட்டு முயற்சியே இது. பிரித்தானிய பாடசாலைகளில் இரண் டாண்டுகளுக்கு ஒருமுறை அதன் நூலகச் சேர்க்கைகள் கழிக்கப் பெற்று புதிய நூல்கள் வழங்கப்படும் நடைமுறை உள்ளது. அவ்வாறு கழிக்கப்பெறும் நூல்கள் பிரித்தானிய தெருக்களை அமைக்கும் போது பத்திரிகைக்கூழாக்கப்பட்டுஅதற்கான கட்டுமான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. எஞ்சியவை பத்திரிகைக் கழிவுகளாக (Land fills) நிலங்களைச் சென்றடையும். நல்ல பல நூல்கள் இடைநடுவில் இப்படிப் பயனற்றுப் போகாமல், நூலகங்களால் கழிக்கப்பெறும் அந்த நூல்களைப் பெற்று, அவற்றில் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலுள்ள பாடசாலை மற்றும் பொது நூலகங்களுக்கு நேரடியாக அனுப்பிவைத்து, அந் நூல்களின் வாழ்வை நீடிக்கச் செய்வதுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கல்வித்துறையின் நூலகச் செலவினத்தையும் கணிசமாகக் குறைக்க வழியமைக்கும் ஒரு பணியையே புக்ஸ் அப்ரோட் ஆரவாரம் இன்றி மேற்கொள்கின்றது. இந்நிறுவனத்தின் தொண்டுநிலை இணைப்பாளர்களுள் ஒருவராகப் பணியாற்றும் ஒரேயொரு தமிழராகவும், இலங்கையராகவும் நான் 2003 முதல் இயங்கி இதுவரை பல லட்சக் கணக்கான நூல்களை ஈழத்துப் பாடசாலைகளுக்கும், பொது நூலகங்களுக்கும் விளம்பரமேது மின்றி அனுப்பிவந்திருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 முதல் இலங்கையின் பல நூலகங்களையும் பாடசாலை களையும் சென்றடைந்துவரும் இத்திட்டத்தின் கீழ் கடந்த 2014 ஜூன் மாதம் சுமார் ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் நூல்கள் வடக்கு கிழக்கை சென்றடைந்துள்ளன. 2004இல் உடத்தலவின்னை சிந்தனைவட்டத்தின் தாபகர் திரு பீ.எம்.புன்னியாமீனின் உதவியு டன் மலையகப் பகுதிகளுக்கும், குமரன் புத்தக இல்ல அதிபர் திரு.க.குமரனின் உதவியுடன் தென்னிலங்கைப் பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும் நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக இதில் எந்தவொரு பாடசாலையும் பின்னர் புக்ஸ் அப்ரோட் நிறுவனத்துடன் தமது தொடர்புகளை மேற் கொள்ளவில்லை. அதனால் இப்பாடசாலைகள் காலக்கிரமத்தில் உதவித் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அதைப்பற்றி அவை கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. பெரும் பொருட் செலவிலும், நேரச்செலவிலும் தாம் தரம்பிரித்து அனுப்பிவைக்கும் நூல்கள், குறித்த நூலகத்தின் வாசகரைச் சென்றடைய வேண்டுமே யொழிய வீணாக அக்கறையற்று, நூலகப் புத்தகத் தட்டுகளில் தேடுவாரற்றுக் குவிந்து கிடப்பதையோ, பழைய புத்தகச் சந்தையில் விற்பனைக்குத் தள்ளப்படுவதையோ புக்ஸ் எப்ரோட் அமைப்பு விரும்புவதில்லை.

போர்ச் சூழலில் வடக்கு கிழக்குக்கு போக்குவரத்து நிலை சீரற்றிருந்ததால் ஆரம்பத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே சிறிய எண்ணிக்கையில் புத்தக உதவிகள் வடக்கு-கிழக்கிற்கு வழங்கப்பட்டன. இன்று விரிவான போக்குவரத்து வசதிகள் காரணமாக இவ்வுதவித்திட்டத்தினை பாரிய அளவில் வடக்கு கிழக்குக்கு மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் 2004 முதல் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் உதவிகள் வழங்கப்பட்டுவந்த போதிலும், பாடசாலை அதிபர்களாலும், கல்வித்துறை அதிகாரிகளாலும் இதில் போதிய அக்கறை காட்டப்படுவதில்லை என்பது கசப்பான அனுபவமாகும். 2004இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 பாட சாலைகளுக்கு உதவிய புக்ஸ் எப்ரோட் நிறுவனம் 2005, 2007, ஆம் ஆண்டுகளில் அதன் உதவியை பாடசாலைகளின் ஒத்துழைப் பின்மையால் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

278826

நிர்ப்பந்தம் ஏற்பட்டது. குறைந்தபட்சம் நூல்களைப் பெற்றுக் கொண்டோம் என்ற நன்றி அறிதலைக்கூட பல பாடசாலைகள் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்திற்குத் தெரிவிக்கத் தவறிவிட்டன என்பது வேதனை அளிப்பதாகும்.

இத்தகைய அக்கறையற்ற செயற்பாடுகளால், இந்நிறுவனத்தின் வடக்கிற்கான நூல் விநியோகத் தொடர்புகள் முற்றாக நிறுத்தப் படவிருந்த நிலையில், 2010இல் தனிப்பட்ட முறையில் மேற்படி நிறுவனத்திடமிருந்து நூல்களைப் பொறுப்பேற்று, எனது சொநத நிதிவளத்தைப் பயன்படுத்தி 2011 இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி, மன்னார் புனித சேவியர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தனிஸ் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி, யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, காரைநகர் துரையப்பா மத்திய மகா வித்தியாலயம், யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடக் கல்லூரி, யாழ்ப்பாணப் பொது நூலகம், நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகம் ஆகியவற்றுக்கு தலா ஆறுமுதல் எட்டு பெட்டிகள் வீதம் சிறுவர் நூல்களை விநியோகம் செய்தி ருந்தேன். தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட சில பாடசாலைகள் நூல்கள் கிடைத்தமை பற்றிக் குறிப்பிடத்தவறியமையாலும், பின்னர் தொடர்பேதும் மேற் கொள்ளாததாலும், நூல்கள் அப்பாடசாலைகளால் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற கசப்பான முடிவினை புக்ஸ் அப்ரோட் நிறுவனம் எடுத்ததுடன், அப்பாடசாலைகளின் பெயர் களையும் தமது தொடர் உதவிப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டதாக எனக்குத் தெரிவித்திருந்தன. இவ்வாண்டும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நூல்கள் எனது தனிப்பட்ட நிதிவளத்துடன், இறுதி முயற்சியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புக்ஸ் அப்ரோட்டின் செயற்திட்டம் பற்றி இவ்வேளை வாசகர்களுக்குத் தெரிவிப்பதும் பயனளிக்கும் என்று கருதுகின்றேன். பாடசாலையிலிருந்து தொடர்பு கிட்டியதும் அப்பாடசாலைக்கு மின்னஞ்சல் வழியாக மூன்று பக்க விண்ணப்பப்படிவம் ஒன்று அனுப்பிவைக்கப்படுகின்றது. உதவிபெற விரும்பும் பாடசாலைகளால் அவ் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றன. அதில் குறிப்பாக பாடசாலை எதிர்பார்க்கும் நூல்களின் வகைகள், வகுப்புத் தரம் என்பன போன்ற முக்கிய தகவல்கள் கேட்கப்பட்டிருக்கும். அவை பின்னர் புக்ஸ் அப்ரோட்டின் தேர்வுக்குழுவின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உதவி வழங்கும் பாடசாலைகளாகத் தேர்வுசெய்யப்படுவதென்பது நீண்டதொரு நடைமுறையாகும். இத்திட்டத்தின் கீழ் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இப்பாடசாலைகளுக்கு ஆங்கில மொழியிலான சிறுவர், இளையோர் நூல்களும் உசாத்துணை நூல்களும் பாடசாலையின் சார்பில் எவ்வித பணச் செலவுமின்றி தேர்வுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தமது நூலகத்தின் சேர்க்கைகளை வளர்த்துக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் மூன்று கட்டங்களில் தமது தொடர்பினை மேற்கொள்ள உடன்பட்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) நூல்கள் கிடைத்ததும் அதனை மேற்படி நிறுவனத்துக்கு மின்னஞ்சல் வாயிலாகவோ தபால் மூலமாகவோ நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

(2) சுமார் மூன்று மாதங்களில் மேற்படி நூல்கள் அனைத்தும் பட்டியல் இடப்பட்டு நூலகச் சேர்க்கையில் இணைக்கப்பட்ட பின்னர் கிடைத்தவற்றுள் மிகவும் பயனுள்ள நூல்கள் சிலவற்றின் விபரத்தையும் (ஆகக் கூடியது 10 நூல்களின் தலைப்பு, ஆசிரியர் பெயர், பாட விடயம் என்பவற்றை குறிப்பிடலாம்), குறைந்த பயன்பாடுடையதென்று தாம் கருதும் நூல்களில் சிலவற்றின் விபரத்தையும் (இதுவும் முன்னையது போன்றே 10 தலைப்புகளில் அமையலாம்) பட்டியலிட்டு ஒரு கடிதத்தை பாடசாலை அதிபர் வாயிலாக அனுப்பவேண்டும்.

(3) நூல்கள் கிடைத்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில், பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியரின் கண்காணிப்பின் கீழ் மூன்று பிள்ளைகள், தாங்கள் கடந்தகாலங்களில் வாசித்த புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் நூல்களில் ஏதாவது ஒரு நூலைத் தேந்தெடுத்து அந்த நூல் என்ன சொல்கிறது? அதில் தாம் விரும்பும் அம்சம் என்ன ஆகிய தகவல்களை உள்ளடக்கி, 20 வரிகளுக்குள் அமையும் சிறு விமர்சனம் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி (மூன்று மாணவர்களின் மூன்று விமர்சனங்களும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும்) புக்ஸ் அப்ரோட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இவை தவிர தமது நூல்களை கண்காட்சிப்படுத்தமுனையும் பாடசாலைகள், பொது நூலகங்கள் அதுபற்றிய புகைப்படங்களையும் பிற தொடர்பாடல்களையும் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கலாம். அத்துடன் தாங்கள் விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டால் அதனையும் அவ்வப்போது தெரிவித்து புக்ஸ் அப்ரோட் நிறுவனத்தின் கணனித்தகவல் கோவையில் மாற்றத்தை மேற்கொள்ளப் பணிக்கவேண்டும்.

இத்தகைய மூன்று அடிப்படைத் தொடர்பாடல்களையும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் ஒரு பாடசாலை அடுத்த இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளில் மேலும் பெருந்தொகுதி நூல்களை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருக்கலாம். இதனை செய்யத் தவறுவோர், தங்கமுட்டையிடும் வாத்தை கொன்றுதின்று சுவைத்த திருப்தியுடன் எஞ்சிய காலத்தைக் கழிக்கலாம்.

**(ஞானம்): இலண்டன் புத்தகச் சந்தையும் எழுத்தாளர் வாசகர் சந்திப்பும் தொடர்பான தங்களது நோக்கம், அதன் சேவைபற்றிக் கூறுங்கள்.**

**(செல்வா):** புத்தகச் சந்தை என்றதும் வியாபார நோக்கத்தில் மேற் கொள்ளப்படும் செயற்பாடாக இதனைக் கருதிவிடக்கூடாது. லண்டன் புத்தகச் சந்தை பற்றிய சிந்தனை என்னுள் கருக் கொண்டமைக்கு முக்கியமான இரு காரணங்கள் இருந்தன. முதலாவது - லண்டனிலும், புறநகர்ப்பகுதிகளிலும் ஏராளமான சில்லறைக் கடைகளும் துணிக்கடைகளும் ஈழத்தமிழர்களால் நடத்தப்பட்டு வந்தாலும் புத்தகக் கடைகள் வைப்பதென்பது லாபகரமான செயற்பாடாக எவருமே கருதாமையால் லண்டன் தமிழ் வாசகர்களுக்கான வாசிப்புக்கான தீனியை வழங்க எவரும் முன்வரவில்லை. எனினும் வீழ்ந்து வரும் வாசிப்புக் கலாச்சாரம் பற்றி மேடையெங்கும் தொண்டை வறளும் அளவுக்குப் பேசித் தீர்த்துத் தம் சமூக அக்கறையை பதிவுசெய்துகொள்வார்கள். இந்நிலையில் வாசிப்புக் கலாச்சாரத்தை வளர்க்கவேண்டுமானால் முதலில் வாசகர்களிடம் நூல்களைக் கொண்டு சேர்ப்பதும், புதிய வாசகர்களை உருவாக்குவதும் முக்கிய தேவையாக எனக்குப்பட்டது.

இரண்டாவதாக, லண்டனில் நூல்வெளியீட்டு விழாக்கள் பெரும்பாலும் சிறு வட்டங்களுடன் அல்லது பல வெற்றுக்கதிரை களுடன் தான் நடைபெறுவது வழக்கம். பெரும்பாலானவை, ஊர்ச் சங்கங்களின் ஆதரவிலும், கலைநிகழ்ச்சிகளின் துணை யோடும் மேற்கொள்ளப்பட்டதால் ஆட்திரட்டல் என்பது அவரவர் திறமைக்கும் செல்வாக்குக்கும் ஏற்ப இடம்பெற்று வந்தது. எழுத்தாளர் அன்றைய தினம் தனது நூல்களை விற்றது போக எஞ்சியவற்றை எப்படி மக்களிடம் கொண்டுசேர்ப்பது என்ற கேள்வியுடன் வெளியீட்டு விழாவின் பின்னர் வீடுகளுக்குள் அவற்றை முடக்கிவைத்திருப்பார்கள். அதன்பின் அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளியின் படைப்பைப் பற்றிய தகவல்கூட அந்நூலை வாங்க விரும்பியவருக்கு கிடைப்பதில்லை.

இதே வேளையில் இலங்கையில் நிலைமை மேலும் மோசமாக இருக்கின்றது. ஒவ்வொரு நூலும் இப்பொழுது 300பிரதிகள் கூட அச்சிடப்பட்டு விற்பனைசெய்ய முடியாது தேங்கிக் கிடக்கின்றன. இதனால் வெளியீட்டாளர்களிடையே தளர்வுப் போக்கொன்று காணப்படுகின்றது. ஈழத்துப் படைப்பாளிகளினதும், வெளியீட் டாளர்களினதும் நூல்களுக்கு லண்டனில் ஒரு புதிய சந்தைத் தளத்தை திறந்தால் அது அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமையும் என்றும் நம்பினேன். இலங்கை விலையில் வர்த்தகக் கழிவுடன் நூலை கொள்வனவுசெய்து அதனை லண்டனுக்கு விமானப்பொதியாகப் பெற்று அதற்காகும் மொத்தச் செலவினத்தை நூலின் விலையாகக் குறித்து எவ்வித லாபநோக்கமுமற்று அதனை அவ்வப்போது புத்தகச் சந்தைகளை ஒழுங்குசெய்து லண்டனவாழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யத் தீர்மானித்தேன்.

அதே வேளையில், தமது நுல்களுடன் படைப்பாளிகளையும் அந்த மண்டபத்திற்கு வரவழைத்தேன். படைப்பாளிகளுடன் நூல்பற்றிய நேரடி உரையாடலை வாசகர்கள் ஒரு அமைதியான சூழலில் இருந்து மேற்கொள்ள புத்தகச் சந்தை உதவிற்று. இதுவரை கடந்த இரண்டாண்டுகளில் எட்டு புத்தகச் சந்தைகளை இத்தகைய எழுத்தாளர் வாசகர் சந்திப்பு நிகழ்வுடன் ஒழுங்குசெய்திருந்தோம். சில இலக்கிய நண்பர்கள் தொண்டர்களாக வந்துநின்று உதவினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்திரளான மக்கள் கூட்டத்தை அங்கு காண முடியாது போனாலும்கூட புதியவர்களின் வரவு, ஓரளவு திருப்திகரமாகவும் மனநிறைவாகவும் இருந்தது. ஒரு பிரதேசத்தில் புத்தகச் சந்தையை ஒழுங்கு படுத்தும் வேளையில் அதற்கான மண்டபத்தை அதனை ஒழுங்குசெய்ய விரும்புபவர் ஏற்பாடுசெய்து தரவேண்டும் என்று ஒரு நிபந்தனையை நான் விதித்துள்ளேன். காரணம் மண்டப வாடகையை நாம் கொடுத்தால் நூலின் விலை மிக அதிகமாகிவிடும். அதனால், இப்பொழுது, புத்தக வெளியீட்டு விழாக்களின்போது அமைப்பாளர்களின் அனுமதியுடன் முன்நிகழ்வாக சுமார் 3-4 மணித்தியாலங்கள் புத்தகச் சந்தையை நடத்தியும் வெற்றிகண்டுள் ளோம். எது எவ்வாறெனினும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் லண்டன் இல்லங்களை அடைவதற்கு என்னாலான முயற்சிகளை தனி மனித முயற்சியாக மேற்கொண்டதில் ஓரளவு வெற்றிகண்டுள்ளேன் என்றே நம்புகின்றேன்.

**(ஞானம்): இலண்டனில் இருந்து இயங்கும் I B C அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் தாங்கள் ஆற்றிய தொடர் உரைகள் எவ்வாறு அமைந்தன? அதனைப் பற்றிக் கூறமுடியுமா?**

**(செல்வா):** ஐ.பீ.சீ. தமிழ் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் சேவையானது, லண்டனிலிருந்து முழு ஐரோப்பா விலும் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் பிரபல்யமான தமிழ் வானொலிச் சேவையாகும். 2002ஆம் ஆண்டு முதல் இச்சேவையுடன் என்னை ஈடுபடுத்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற நூலை வெளியிட்டிருந்தேன். அதன் வெளியீட்டு நிகழ்வை ஒருமணிநேர வானொலி நிகழ்வாக மேற்கொண்டு லண்டனில் நூல்வெளியீட்டு நிகழ்வில் ஒரு புதுமையை ஏற்படுத்தியிருந்தார்கள். ஒலிபரப்பாளர் எஸ்.கே.ராஜன் அவர்கள் இந்நிகழ்ச்சியைத் திறமையாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

உலகெங்குமிருந்தும் பலர் எனது நூல் பற்றியும் யாழ்ப்பாண நூலகம் பற்றியும் உரையாற்றியிருந்தார்கள். இந்நிகழ்வை தாமே முன்வந்து ஒழுங்குபடுத்தி எனக்கு வலிந்து தம் ஆதரவினை வெளிப்படுத்திய ஐ.பீ.சீ. வானொலியின் சேவை உணர்வு என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் கவர்ந்தது. அக்காலகட்டத்தில்தான் நூல்தேட்டம் தொகுதியின் முதலாவது தொகுப்பையும் மேற்கொண்டுவந்திருந்தேன். தொகுப்புப் பணிகளின்போது நான் கண்டறியும் புதிய நூல்கள், படைப்பாளிகள் பற்றி 20 நிமிடங்கள் தொடர்ந்து உரையாற்றும் பணியை அவர்களின் வேண்டுகோளின் பேரில் 5.5.2002அன்று முதல் மனமுவந்து ஏற்றுக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 7.00 மணி முதல் 10.00 மணிவரை இடம்பெறும் காலைக்கலசம் என்ற சஞ்சிகை நிகழ்வில் எனது உரை 7:10 முதல் 7.30 வரை இடம்பெற்றுவந்தது. அவ்வொலிபரப்பு ஐரோப்பிய நாடுகளில் ஒரு மணிநேர மாற்றத்திற்கேற்ப காலை 8:10 முதல் 8:30 வரை இடம்பெற்றது.

இந்நிகழ்வு வாரம் தவறாமல் நடைபெற்று 6.9.2009இல் முடிவுக்கு வந்தது. இந்த இடைப்பட்ட ஏழாண்டுக் காலத்தில் புகலிடத் தமிழ்ப் படைப்பாளிகளை மட்டுமல்லாது, ஈழத்துத் தமிழ், சிங்கள, முஸ்லிம் படைப்பாளிகள் பலரையும் அவர்களது தமிழ்மொழிப் படைப்புகளையும் அவர்கள் அறியாமலேயே உலகறியச் செய்துவந்திருந்தேன்.

இந்நிகழ்வின் வாயிலாக எனக்கு மிகப்பெரும் அறிமுகமும் ஆதரவாளர்களின் நட்பும் கிடைத்தன. ஒரு நாள் நிகழ்வு தாமதமானாலும் தொலைபேசியில் நலம் விசாரிக்கும் அளவுக்கு முகம் தெரியாத நேயர்களின் உறவு வளர்ந்திருந்தது. ஐ.பீ.சீ. வானொலியில் எனது நீண்டகாலப் பணியை கௌரவித்து தமிழகத்தின் பழ நெடுமாறன் அவர்கள் மூலம் விருதொன்றையும் வழங்கியிருந்தமையை எனக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதுகின்றேன்.

முன்னர் எனக்கு அறிமுகமில்லாதிருந்த ஊடகவியலாளர் கே.ஜீ.மகாதேவா (அண்மையில் திருச்சியில் அமரத்துவம் அடைந்துவிட்டார்) அவர்களின் "நினைவலைகள்" என்ற நூல் 2003இல் தமிழகத்தில் வெளிவந்திருந்தது. அது என் கைகளை எட்டியதும் மகாதேவா பற்றியும் அவரது பிற நூல்கள் பற்றியும் ஒரு உரையை ஆற்றியிருந்தேன். உரை நிகழ்ந்து முடிந்த ஒரு மணி நேரத்தில் தமிழகத்திலிருந்து அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. தமிழகம் வரை எனது உரை அவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவாகச் சென்றடைகின்றதா என்ற ஆச்சரியம். அவர் தான் எனது சந்தேகத்தை தீர்த்து வைத்தார். நோர்வேயிலுள்ள அவரது இளைய மகள் வேலைக்குச் செல்லும்போது வாகனத்திலுள்ள ரேடியோவில் காலைக்கலசம் நிகழ்வை வழமையாகக் கேட்பவர். தனது தந்தையார் பற்றிய எனது உரையை அன்று செவிமடுத்துள்ளார். தன் தந்தையைப்பற்றி ஒருவர் பேசுகிறார் என்றதும் வாகனத்திலிருந்தவாறே தமிழகத்தில் தந்தையுடன் தொலைபேசி உரையாடலை ஏற்படுத்தி அவரையும் தனது தொலைபேசியூடாக எனது வானொலி உரையின் எஞ்சிய பகுதியைச் செவிமடுக்க வைத்துள்ளார். பொதுவாக எனது உரைகளை முன்கூட்டியே எழுத்தில் பதிவுசெய்துவைத்தே வாசிப்பது வழக்கம். அன்று தொடங்கிய நட்பு அவரது பிரிவு வரை தொடர்ந்தது. அவரது அர்ப்பணிப்பு மிக்க உதவியுடன் என்னால் பின்னாளில் "ஈழநாடு ஒரு ஆலமரத்தின் கதை" என்ற ஆவண நூலை வெளிக்கொண்டுவர முடிந்தது.

மற்றுமொரு மனதைத் தொடும் நிகழ்வு கடந்த 2013இல் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH இல்) நடந்தது. அவுஸ்திரேலிய எழுத்தாளர்கள் முருகபூபதி, நொயெல் நடேசன் ஆகியோரது நூல்களின் சிங்கள மொழி பெயர்ப்புகளின் வெளியீடு அன்று நடைபெற்றது. அன்றுதான் காலை லண்டனிலிருந்து கொழும்புக்குச் சென்றிருந்தேன். அன்று மாலை பணிகள் எதுவும் திட்டமிடப்பட்டிராத நிலையில், தினகரன் பத்திரிகையில் இந்நூல் வெளியீட்டு நிகழ்வுபற்றிய செய்தியை வாசிக்கமுடிந்தது. அந்நிகழ்வில் ஈழத்து எழுத்தாளர்களைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்பினைப் பயன்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்புடன் அந்த நிகழ்வுக்கு பார்வையாளராகச் சென்றிருந்தேன். அவுஸ்திரேலியப் படைப்பாளிகள் முருகபூபதியும், நொயல் நடேசனும் என்னை அன்றையதினம் இலங்கையில்- குறிப்பாக தமது நிகழ்ச்சியில் எதிர்பார்த்திருக்கவில்லை. மண்டப மேடையில் இருந்த நண்பர் முருகபூபதி அங்கிருந்தே என்னைக் கண்டுவிட்டிருந்தார். சிறப்புப் பிரதியொன்றினைப் பெற மேடைக்கு என்னை அவர் அழைத்தபோதுதான் இதனைப் புரிந்துகொண்டேன். என்னைக் கண்டதும் மகிழ்வுடன் என்னை அங்கு திரண்டிருந்த சிங்களப் படைப்பாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு மேடையில் அறிமுகம் செய்துவைத்ததுடன், நொயல் நடேசன் சிறப்புப் பிரதிகளையும் எனக்கு வழங்கினார். நானும் அதனைப் பெற்றுக் கொண்டேன். அந்த வேளையில் மேடையில் இருந்த சிங்களப் படைப்பாளிகள் பற்றிய நேரடிப் பரிச்சயம் எனக்கிருக்கவில்லை. நிகழ்வு முடிந்து சிற்றுண்டிக்காக வெளி அறையில் குழுமியிருந்த வேளையில் ஒரு சிங்களப் படைப்பாளி தன் மனைவி மற்றும் இளைஞரான தனது மகனுடன் வந்து திடீரென எனது பாதங்களைத் தொட்டு வணங்கினார். எமது கலாச்சாரத்தில் இதனை நான் அனுபவித்திராததால், நான் சங்கடத்தில் செயலிழந்துவிட்டேன். அனைவரது கவனமும் என்னிடமும் ஆசி பெற முனைந்தவரிடமும் குவிந்தன. அந்தப் பெரு நிகழ்வில் அந்தச் சிங்கள நண்பர் பின்வருமாறு உணர்வுபூர்வமாகக் குறிப்பிட்டார்.

"இலங்கையில் மாத்திரம் அறிமுகமாகியிருந்த என்னை முகம் தெரியாத இந்தத் தமிழ்ச் சகோதரர் தனது ஐ.பீ.சீ. என்ற லண்டன் வானொலி நிகழ்ச்சிகளின் மூலம் ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். இவரது அறிமுக நிகழ்வினாலே நான் பல ஐரோப்பிய தமிழ் நண்பர்களைப் பின்னாளில் பெற்றுக்கொண்டேன். இதனை வெளிநாடுகளிலுள்ள எந்தவொரு சிங்கள நண்பர்களும் செய்ய முன்வரவில்லை. இவருக்கு நான் பெரிதும் கடன்பட்டுள்ளேன்"

அவரது சுய அறிமுகத்தின் பின்னர் தான் அவர் பிரபல சிங்கள படைப்பிலக்கியவாதியான மடுளுகிரியே விஜேரத்தினா என்று அறிந்துகொண்டேன். ஆம் அவரது மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றியும் காலைக் கலசத்தில் முன்னர் உரையாற்றியிருந்தேன். தொலைபேசியிலும் அவருடன் தொடர்புகொண்டு அவரது தகவல்களை இவ்வுரைக்காகப் பெற்றிருந்தேன். அன்றுதான் அவரை நேரில் கண்டிருந்தேன். இதனை நினைவு கூர்ந்து அந்தப் பொது நிகழ்வில் பகிரங்கமாக வெளிப்படுத்தியமை என்னைக் கண்ணீர் மல்கச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஞானம்): மிகவும் நெகிழ்ச்சியான தருணங்களைச் சந்தித்தி ருக்கிறீர்கள். தங்களது எழுத்துப்பணிகள் பற்றி இனிக் கூறுங்கள்.**

**(செல்வா):** எனது எழுத்துப்பணி மிகவும் விசாலமானது. அண்மையில் திரு. க.குமரன் அவர்களின் உதவியுடன் எனது அகவை அறுபது நினைவாக வெளிவந்த "மௌனமாய்ப் பொழியும் மாமழை" என்ற சேவை நயப்பு மலரின் இறுதிப் பகுதியில் 60 பக்கங்களில் எனது படைப்புகள் பற்றிய நூற்பட்டியல் (Bibliography) வெளிவந்துள்ளது. 1981இல் தொடங்கிய எனது எழுத்துப்பணி இன்றளவில் தளராமல் தொடர்கின்றது. பத்திரிகை களைப் பொறுத்தவரை 22.4.1984 அன்று ஈழநாடு வாரமலரில் "உருமாறும் பழமொழிகள்" என்ற சிறு கட்டுரை வெளிவந்தது. இது பின்னாளில் விரிவான தொடராகவும், வானொலி உரைத்தொடராகவும், தனி நூலாகவும் வெளிவந்தது. அதுவே தமிழில் வெளிவந்த எனது முதலாவது எழுத்தாக்கம். முன்னதாக 1981 இலும் 1982இலும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சஞ்சிகை களில் எனது ஐக்கிய நாடுகள் தொண்டர் பணிபற்றி சிறு கட்டுரைகள் நிறுவனத்தின் உள்ளகச் சஞ்சிகைகளில் ஆங்கிலத்தில் வெளிவந்திருந்தன. நூல்களைப் பொறுத்த வரையில் எனது முதலாவது நூலும் ஜூலை 1988இல் ஆங்கிலத்திலேயே வெளிவந்தது. A Select Bibliography of Dr. James T.Rutnam என்ற தலைப்பில் அந்த நூற்பட்டியல் யாழ்ப்பாணம், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவன வெளியீடாக வெளிவந்தது. அதே ஆண்டு "உருமாறும் பழமொழிகள்" என்ற எனது வானொலி உரைத் தொகுப்பும் வெளிவந்தன. எனது 45ஆவது நூலாக நூல்தேட்டம் தொகுதி 11 வெளிவரவிருக்கின்றது.

எனது எழுத்துலகப் பணி பெரும்பாலும் நூலியல், வெளி யீட்டுத்துறை, படைப்புலகம், படைப்பாளிகள் சார்ந்ததாகவே அமைந்துவிட்டது. ஒரு நூலகவியலாளர் என்ற வகையில் நூ லகவியலின் தந்தை எஸ்.ஆர். இரங்கநாதன் அவர்களின் பஞ்சசீலக் கொள்கைகளுள் ஒன்றான ஒவ்வொரு நூலுக்கும் அதன் வாசகரையும், ஒவ்வொரு வாசகனுக்கும் அவனுக்கேற்ற நூல்களையும் தேர்வுசெய்ய வழிகாட்டும் பணியின் நீட்சியாகவே பெரும்பாலான எனது கட்டுரைகளும் நூல்களும் அமைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன. 2002இல் ஐ.பீ.சீ. வானொலியினரால் வழங்கப்பட்ட "நூலகவியலாளர்" என்ற அடைமொழி இன்றளவில் பொருத்த மானதாகவே காணப்படுகின்றது. தேசம் என்ற இணையத்தளத்தை நடத்தும் திரு.த.ஜெயபாலன் அவர்கள் தனது இணையத்தில் எனது கட்டுரைகளை மீளப்பிரசுரிக்கும் வேளையில் "நூலிய லாளர்" என்ற பதத்தைப் பிரயோகிப்பதையும் அவதானித்தி ருக்கிறேன்.

எனது எழுத்துலக வாழ்வில் இடையில் பரீட்சார்த்தமாக ஒரு சிறுகதையும் எழுதிப் பிரசுரமாகியிருக்கின்றது என்பதும் அதிசயம்தான். "இது அதுவல்ல" என்ற கதை ஈழநாடு வாரமலரில் 30.12.1984இல் 5ம் 6ம் பக்கங்களில் பிரசுரமாகியிருந்தன. இதில் நான் அடைந்த சோகம் என்னவென்றால் நான் எழுதிய அக் கதையின் மிக முக்கியமான திருப்பம் (Twist) கடைசிப் பந்தியில் தான் இருந்தது. அந்தத் திருப்பத்திற்காகவே கதையை வளர்த்துச் சென்றிருந்தேன். ஆனால் இடப்பற்றாக்குறை காரணமாகவோ என்னவோ முக்கியமான அப்பந்தி பத்திரிகையில் பிரசுரமாகவே யில்லை. அந்த ஒரு கதையுடன் எனது ஆக்க இலக்கியப் பிரவேசம் குறைப்பிரசவமாகிவிட்டது.

நூல்தேட்டத் தொகுப்புகள் தவிர்ந்த எனது விருப்பத்துக்குரிய நூல்கள் வரலாற்றுப் பதிவுகளாகத் தொகுக்கப்பெற்ற யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு, தீ தின்ற தமிழர் தேட்டம்: கவிதைத் தொகுப்பு, மற்றும் ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை ஆகிய மூன்று நூல்களுமாகும். தற்போது யாழ்ப்பாணத்தின் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 என்ற தலைப்பில் ஒரு தொகுப்பினை ஆவணமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின் றேன். இது 2021 இறுதியில் நூலுருக்காணும் என்ற நம்பிக்கை உள்ளது.

**(ஞானம்): யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற நூல் எழுதப்பட்ட பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்**

**(செல்வா):** இன்றளவில் யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றிக் குறிப்பிடும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் 2001ஆம் ஆண்டுவாக்கில், யாழ்ப்பாண நூலகம் 1981இல் எரிக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்த நிலையிலும், அமரர் க.சி.குலரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எழுதிய "யாழ்ப்பாண நூல்நிலையம்: ஓர் ஆவணம்" என்ற நூல் மாத்திரமே நூலுருவில் கிடைக்கக்கூடியதாக இருந்தது. அதுகூட யாழ்ப்பாண நூலகத்தின் உருவாக்கத்திலிருந்து 1967இல் வே.இ.பாக்கியநாதன் அவர்கள் நூலகராகப் பணியேற்றது வரையிலுமே ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. இது ஈழநாடு பத்திரிகையில், யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டவேளையில் தொடராக வெளிவந்திருந்த கட்டுரைகளின் தொகுப்பு. அமரர் க.சி.குலரத்தினம் அவர்கள் தொடர்ந்தும் எழுதியிருக்கக்கூடிய தகவல் வளத்தைப் பெற்றிருந்தும்கூட, 29ஆவது தொடரில் (இனித்தொடராது) என்ற குறிப்புடன் அவரது கட்டுரைத் தொடர் ஈழநாடு நிர்வாகத்தினரால் நிறுத்தப்பட்டு விட்டது. இத் தொடரையே நூலுருவில் அவுஸ்திரேலியாவிலிருந்து 1997இல் எஸ்.பொ. தனது மித்ர பதிப்பகத்தினால் தானும் ஒரு கட்டுரையைச் சேர்த்து இற்றைப்படுத்தி வெளியிட்டிருந்தார்.

இதே வேளையில் 1997ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்ற பதாதையுடன் சிறீலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட "வெண்தாமரை இயக்கம்" 10.04.1997 அன்று யாழ்ப்பாண நூலகத்தை புனரமைப்புச் செய்வதென்ற தமது செயற்திட்டங்களை வைபவரீதியாக முன்வைத்தது. இராணுவம் சார்ந்த அதன் பல்வேறு செயற்திட்டங்களுக்குள் யாழ்ப்பாணத்து நூலகத்தை மீளக் கட்டி எழுப்புவதும் ஒன்றாகும். முன்னோடி நடவடிக்கையாக யாழ்ப்பாணம் பழைய கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள வீடமைப்பு அதிகார சபையின் கட்டிடத்தில் 14.01.1998 அன்று பொங்கல் தினத்தன்று தற்காலிக நூலகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டம் பலத்த ராணுவக் கெடுபிடிகளுடனும் தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன, சமூக சேவை அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க ஆகியோரின் பங்கேற்புடனும் இடம் பெற்றதை பலரும் அறிந்திருப்பீர்கள். உலகளாவிய பலத்த விளம்பரங்களுடன் 1998ம் ஆண்டு பொங்கலன்று அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்ட தற்காலிக நூலகத்தின் (இடைக்கால நூலகம்) நிர்வாகம் ஜனாதிபதியின் நூலகக்குழுவின் நிர்வாகத்துக் குட்பட்டதாகவே இருந்தது. மாநகர ஆணையாளர் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியாகவே செயற்பட்டுவந்தார். புனரமைக்கப்படும் நூலகத்துக்கு லண்டனிலிருந்து அனுப்பிவைக்கப்படும் நூல்களை அவதானித்து பொருத்தமான நூல்களை மாத்திரம் அனுப்பிவைக்கும் பொறுப்பு, அவ்வேளையில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் ஐரோப்பியப் பிரதிநிதியாகப் பணியாற்றிய எனக்கு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இராமலிங்கம் அவர்களது வேண்டுகோளாக வழங்கப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணியில் லண்டனில் புஷ் ஹவுஸில் இயங்கும் (BBC World Service) பீ.பீ.சீ. சர்வதேச வானொலிச் சேவையிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. அதில் தொடர்பு கொண்ட ஊடகவியலாளரான ஒரு பெண்மணி, யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றி நேர்காணல் ஒன்றுக்காக யாழ்ப்பாண நூலகத்துடன் தொடர்பு கொண்டதாகவும், அவர்கள் எனது தொலைபேசி எண்ணை வழங்கி அதில் என்னைத் தொடர்பு கொண்டு நேர்காணலைப் பெறுமாறும் தம்மைக் கேட்டுக்கொண்ட தாகவும் கூறி நேர்காணல் ஒன்றிற்காக நேரத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர்.

குறித்த தினத்தில் யாழ்ப்பாண நூலகம் பற்றிய வரலாற்றுத் தகவல்களுடன் லண்டனில் உள்ள புஷ் ஹவுஸ் என்ற பீ.பீ.சீ. கலையகத்தில் பிரசன்னமானேன். எனது நேர்காணலை ஒழுங்கு செய்தவர் ஒரு இந்தியப் பெண். எனக்கு மூன்று நிமிடங்கள் தரப்பட்டுள்ளதாகவும் அதற்குள் இரண்டு கேள்விகள் கேட்பதாகவும் குறிப்பிட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. யாழ்ப்பாண பொது நூலகத்தைப் பற்றி உலகிற்குத் தெரியப்படுத்த மூன்று நிமிடமா என்று எண்ணினேன். அங்கே நான் தீர்மானிப்புச் சக்தியாக இருக்கவில்லை. சரி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்வோம் என்று தயாரானேன்.

நேர்காணலில் முதலாவது கேள்வி இதுதான். "யாழ்ப்பாணத் தமிழர்கள் மிகவும் திறமையானவர்கள். கடின உழைப்பாளிகள். கல்வி அறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். உலகெங்கும் உள்ள வைத்தியசாலைகளும் பொறியியல் நிறுவனங்களும் அவர்களால் நிரம்பி வழிகின்றன. இந்நிலையில் 1981ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட அறிவுக்களஞ்சியமான நூல்நிலையத்தை 1998இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசாங்கமே முன்வந்து திருத்தித்தரும் வரையில் நீங்கள் ஏன் மௌனமாக இருந்தீர்கள்? உங்களில் எவருக்கும் நூலகத்தின் புனரமைப்பு பற்றிய அக்கறை வரவில்லையா? அல்லது புனரமைக்கும் நோக்கமின்றி அந்தக் கட்டிடத்தை அப்படியே காட்சிப்படுத்த விரும்பினீர்களா?"

இந்தக் கேள்வியை நான் எதிர்பார்க்கவேயில்லை. யாழ்ப்பாண நூலகம் பற்றி அறிமுகம் செய்யக்கூடிய தகவல்களைச் சேர்த்துக் கொண்டு சென்றிருந்த நான் இத்தகைய ஆழமான கேள்வி யொன்றை அங்கு எதிர்பார்க்கவில்லை. சில செக்கன்களில் சுதாரித்துக்கொண்டு, 1981இல் எரிக்கப்பட்டதும் சில நாட்களி லேயே கிளை நூலகங்களை வலுப்படுத்தியமையையும், 1984இல் இலங்கை மக்களின் நிதிப்பங்களிப்புடனேயே மீள் புனரமைப்புச் செய்தமை பற்றியும், கொழும்பின் கொடித்தினங்கள் பற்றியும், ஒரு கோடி வழங்கப்படவேண்டும் என்ற லயனல் பெர்ணாண்டோ விசாரணைக் கொமிஷனின் தீர்ப்பு இருக்கத்தக்கதாக, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வெறும் 10 லட்சம் ரூபாவை தமிழர் "தளபதி" அ.அமிர்தலிங்கம் அவர்களுக்கு வழங்கி நிலைமையை சமாளித்த புனரமைப்பு நிதி பற்றியும் தொடர்ந்து தகவல்களை வழங்கி நாம் ஒன்றும் சும்மா இருக்கவில்லை எனவும், ஒவ்வொரு கட்டத்திலும் எரிந்த நூலகம் பற்றியே எமது மக்கள் நெஞ்சில் கனன்று கொண்டிருந்தார்கள் என்பதையும் தெரிவித்தேன். மீளமைப்பின் அரசியல் பற்றியும் எடுத்துரைத்தேன்.

நேர்காணல் செய்தவர் இடை நடுவில் என்னை தடுக்கவில்லை. 3 நிமிடம் கழிந்து பல நிமிடங்களாயின. இறுதியில் நான் முடித்ததும், இரண்டாம் கேள்வியை கேட்க அவர் துணியவில்லை. தனது செய்தியின் பின்னதாக இவ்வளவு விஷயங்கள் உள்ளனவா என்று அதிசயித்துவிட்டு, தன்னால் நூலகம் பற்றி எவ்வித அறிவுபூர்வமான தகவல்களையும் ஊடகங்களில் பெற முடியவில்லை எனவும் அங்கலாய்த்தார். அந்த ஊடகவியலாளரே என்னிடம் ஏன் நீங்கள் உங்களிடம் உள்ள தகவல்கள் அனைத்தையும் மூலாதாரங்களுடன் ஒரு ஆவணமாக வெளியிடக்கூடாது? எங்களைப்போன்ற ஊடகவியலாளர்களுக்கு அது பயன்தருமே என்றார. அன்றைய நேர்காணல் ஒரு வரிகூட வெட்டப்படாமல், 12 நிமிட நேரம் பீ.பீ.சீ. உலகச் சேவையில் செய்தியின் பின்னரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு நிகழ்வாக நேரமொதுக்கப்பட்டு ஒலிபரப்பாயிற்று.

அந்த வேளையில் தான் "எமது வரலாற்றை நாம் தான் பதிவு செய்யவேண்டும்: சோம்பேறித் தனத்தால், அதனை அடுத்தவர் பதிவுசெய்ய விட்டுவைத்தால் வரலாற்றைத் திரிபு படுத்தத் துணைபோகும் பழியை ஏற்கவேண்டிவரும் - வரலாறு எம்மை மன்னிக்காது." என்ற ஞானோதயம் எனக்கு ஏற்பட்டது. எமது சொந்த வரலாற்றுப் பதிவுதனை அடுத்தவரைக் கொண்டு செய்ய விட்டு அதில் குற்றம் கூறுவதில் எவ்வித நன்மையும் ஏற்படப் போவது இல்லை. எது நடப்பினும் நாமே எமது இனத்தின் வரலாற்றைப் பதிவுசெய்வோம் என்று தீர்மானித்தேன். புத்தருக்கு ஞானோதயம் போதிமரத்தடியில். எனக்கு ஞானோதயம் புஷ் ஹவுசில். அன்று தொடங்கிய யாழ்ப்பாண நூலகம் பற்றிய வரலாற்றுத் தேடல் 2001ஆம் ஆண்டில் அதனை நூலுருவில் உங்களிடம் கொண்டுவந்து சேர்த்தது.

**(ஞானம்): இதுவரை தாங்கள் வெளிக்கொணர்ந்த தங்களது நூல்கள் பற்றிக் கூறுங்கள்**

**(செல்வா):** எனது நூல்கள் பற்றி ஏற்கனவே உங்கள் கேள்வி களுக்குப் பதிலாக ஆங்காங்கே குறிப்பிட்டிருக்கிறேன். எனது முதலாவது நூல் கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களின் படைப்புகளுக்கானதொரு நூல்விபரப்பட்டியலாகும். ஆங்கிலத்தில் 1988இல் வெளிவந்தது. அதே ஆண்டு எனது முதலாவது தமிழ் நூல் உருமாறும் பழமொழிகள் என்ற தலைப்பில் வெளிவந்தது. இலங்கை வானொலியில் அவ்வப்போது நான் நிகழ்த்திய வானொலி உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்தது. 1989இல் கிராம நூலகப் பொறுப்பாளர்களுக்கான வழிகாட்டி, கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும், நூலகப் பயிற்சியாளர் கைநூல் ஆகியன வெளிவந்தன. 1990இல் சனசமூக நிலையங்களுக்கான கைநூல், நூலக அபிவிருத்திக் கருத்தரங்கு, ஏப்ரல் 6-8, 1990: நூலகர்களுக்கான வழிகாட்டி ஆகியன வெளிவந்தன. 1991இல் கொழும்பிலிருந்த வேளையில் ஆரம்ப நூலகர் கைநூல் என்ற நூலகர் கைநூல் வெளியிடப்பட்டது.

1991 முதல் 2001 வரை ஒரு நூலும் வெளியிடப்படவில்லை. இக்காலகட்டத்தில் 11 கட்டுரைகள் மாத்திரமே என்னால் எழுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துள்ளது. 2001க்குப் பின்னர் தான் எனது எழுத்துலகப் பணி தீவிரமடைந்துள்ளது. 2001இல் யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு என்ற நூலின் வரவுடன் 2002இல் நூல்தேட்டம் 1வது தொகுதி வெளிவந்தது. 2003இல் யாழ்ப்பாணப் பொது நூலகம் நூலின் ஆங்கிலப் பதிப்பான Rising from the Ashes: Tragic episode of the Jaffna Library என்ற நூல் வெளிவந்தது. அதே ஆண்டு மலேசிய தமிழ் இலக்கிய விழாவை தேசம் வெளியீட்டகத்தின் அனுசரணையுடன் நடத்திய வேளையில் மலேசியத் தமிழ் இலக்கியம்: தேசம் சிறப்பிதழ் தேசம் ஆசிரியர் த்.ஜெயபாலன் அவர்களுடன் இணைந்து தொகுக்கப்பட்டது.

2004இல் நூல்தேட்டத்தின் 2வது தொகுதி வெளிவந்தது. 2005இல் நூல்தேட்டத்தின் 3வது தொகுதியும் நூலியல் பதிவுகள் என்ற தலைப்பில் எனது ஐ.பீ.சீ. காலைக்கலசம் ஒலிபரப்பின் தேர்ந்த சில கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன. 2006இல் நூல்தேட்டத்தின் 4வது தொகுதியும் வாய்மொழி மரபில் விடுகதைகள் என்ற நூலும் வெளிவந்தன. விடுகதைகள் தொடர்பாக லண்டனில் "வடலி" என்ற மாதப் பத்திரிகையில் ஜுலை 2003 முதல் மே 2004 வரை தொடராக பதினொரு அங்கங்களில் வெளிவந்த கட்டுரைகளின் நூலுருவே வாய்மொழி மரபில் விடுகதைகள் என்ற நூலாகும்.

2007இல் சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி: தொகுதி 1. வெளிவந்தது. இது இலங்கைத் தமிழரின் 150 சிறப்பு மலர்களின் ஆக்கங்களுக்கான ஒரு வழிகாட்டியாக அமைந்தது. 2000க்கும் அதிகமான கட்டுரைப் பதிவுகள், வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு ஆசிரியர் அட்டவணையுடன் தொகுக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டிலேயே நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்: ஒரு நூல்விபரப் பட்டியல், நூல்தேட்டத்தில் சிந்தனை வட்டம், மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம்: தொகுதி 1, மலையக இலக்கிய கர்த்தாக்கள்: தொகுதி 01 ஆகிய ஐந்து முக்கிய நூல்கள் வெளிவந்தன.

2008இல் செ.கணேசலிங்கனின் படைப்புலகம், நூல்தேட்டம்: தொகுதி 5. நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகர்களுக்கு ஆகிய நூல்களும், 2009இல் Noolthettam: An annotated bibliography of Sri Lankan Tamils. என்ற ஆங்கில நூல்தேட்டத் தொகுப்பும், வேரோடி விழுதெறிந்து: ஒரு நூலகவிய லாளரின் தமிழ் இலக்கியப் பதிவு, ஆகிய நூல்களும் வெளிவந்தன. வேரொடி விழுதெறிந்து என்ற எனது கட்டுரைத் தொகுதி ஞானம் வெளியீடாக வெளிவந்தது. 2010இல் தேடலே வாழ்க்கையாய்: ஒரு ஈழத்து நூலகரின் மனப்பதிவுகள் என்ற நூல் டென்மார்க் எழுத்தாளர் ஜீவகுமாரனின் விஷ்வசேது இலக்கிய அமைப்பின் மூலம் தமிழகத்தில் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, 2011இல் நூல்தேட்டம்: தொகுதி 6, தொகுதி 7 என்பனவும் வெளிவந்தன. 2012இல் நூல்தேட்டம் தொகுதி 8 உம், 2013இல் திரைகடல் தாண்டிய திருக்கோணமலைப் படைப்புலகம், Health in Wartime North of Sri Lanka, தீ தின்ற தமிழர் தேட்டம்: யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு ஆகிய நூல்கள் வெளிவந்தன. யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் எரிப்புப் பற்றிய பல்வேறு கவிஞர்களின் மனத்தாங்கல்கள் கவிதை உருவில் அவ்வப்போது ஊடகங்களில் வெளிவந்திருந்தன. அவற்றின் தேர்ந்த தொகுப்பாக தீ தின்ற தமிழர் தேட்டம் அமைந்திருந்தது.

இவ்வாண்டிலேயே நூலகவியல் காலாண்டிதழ் தொகுதிகளின் பெருந்தொகுப்பாக தொகுதி 1-7: செப்டெம்பர் 1985-ஏப்ரல் 2007 இதழ்கள் மீள்பதிப்புக்குள்ளாகின. 2014இல் நூல்தேட்டம் தொகுதி 9, ஈழத் தமிழரின் போர்க்காலம்: இலக்கியங்கள், ஆய்வுகள், பதிவுகள் (கனடா, தமிழர் தகவல் வெளியீடு) ஆகிய இரு நூல்கள் வெளியிடப்பட்டன.

2015இல் நூல்தேட்டம் தொகுதி 10 வெளியாகி, 10000 ஈழத்துத் தமிழ் நூல்களை குறிப்புரையுடன் பதிவுசெய்த வரலாற்றுப் பெருமை எனக்குக் கிட்டியது. எனது இளமைப்பருவம் முதல் நூலியல் பணிகளுக்கு ஆதரவாகி நின்ற அமரர் ஆர். ஆர். பூபாலசிங்கம் அவர்களின் நினைவாக எனது ஆத்ம திருப்திக்காக, நெருநல் உளனொருவன்: அமரர் ஆர்.ஆர்.பூபாலசிங்கம் நினைவுகளுடன் என்ற நூலைத் தொகுத்திருந்தேன். குமரன் புத்தக இல்லம் அதனை வெளியிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆண்டில் (2016) மலேசியாவில் தமிழ்: பார்வையும் பதிவும், ஈழத்தின் தமிழ் வெளியீட்டுப் பெருவெளி: ஒரு நூலகவியலாளரின் பார்வை, கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்: ஒரு மனிதநேயரின் கதை, உடல்நலமும் உளநலமும் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளேன். 44ஆவது நூலாக ஈழநாடு: ஒரு ஆலமரத்தின் கதை என்ற நூல் வெளிவந்துள்ளது. நூல்தேட்டம் 11வது தொகுதி அச்சிலுள்ளது. ஆக மொத்தம் 45 நூல்களை வெளியிடும் வாய்ப்பு எனக்கு இதுவரை ஏற்பட்டிருக்கின்றது.

**(ஞானம்): ஈழத்தமிழ் சமூகத்தைத் தாண்டி மலேசியாவில் உள்ள தமிழ் படைப்பிலக்கியத்துறைக்கும் தங்களது உழைப்பை வழங்கியுள்ளீர்கள். அந்த அனுபவம் பற்றிக் கூறுங்கள்.**

**(செல்வா):** இலண்டனிலிருந்து வெளிவரும் தேசம் சஞ்சிகையின் வெளியீட்டாளரின் ஆதரவுடன் 05.04.2003 அன்று இலண்டன் Stratford Library Hall இல் மலேசிய தமிழ் இலக்கிய நிகழ்வும், மலேசிய தமிழ் நூல்கண்காட்சியும் எனது பங்களிப்புடன் இடம்பெற்றன. அதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் எனது லூட்டன் இல்லத்தில் 2002 இறுதிப் பகுதியில் நடைபெற்றது. அன்று முதல் ஏப்ரல் 2003 வரை முழு மூச்சாக மலேசிய தமிழ் இலக்கியவாதிகளுடனும் தமிழறிஞர்களுடனும் தொடர்புகளை மேற்கொண்டு நிகழ்வை நடத்தி முடித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 100 தமிழ் நூல்களும், 25க்கும் அதிகமான தமிழ்ச் சஞ்சிகைகளும் கண்காட்சிக்காக எனக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மலேசிய தமிழ் இலக்கியம் பற்றிய அறிதலை, தேடலை என்னுள் ஆழவிதைத்த நிகழ்வு இதுவாகும். இதையொட்டி மலேசிய விருந்தினருடன் பின்னர் உரையாடிய வேளையில் எனது நூல்தேட்டம் பணிகள் பற்றி அறிந்துகொண்ட அவர்கள் மலேசியாவின் ஆரம்பகால இலக்கிய முன்னோடிகள் ஈழத்துத் தமிழர்களே என்றொரு செய்தியை வழங்கினார்கள். இதுவரை மலேயாவுக்குச் சென்ற எம்மவர்கள் பணத்தை மாத்திரம் ஈட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து மலாயன் பென்ஷனியராக சுற்று மதில் நாற்சார் வீடுகளில் இருந்து வாழ்ந்து மடிந்ததைத்தான் நான் அறிந்திருந்தேன். ஈழத்துப் படைப்பாளிகளை பட்டியலிட்ட எப்.எக்.சி., சில்லையூரார், கனக செந்திநாதன் உள்ளிட்ட எம் முன்னோர் கூட மலாயாவில் இலக்கிய யாகம் புரிந்த ஈழத்தவரை முற்றாக மறந்துவிட்டார்கள். இந்நிலையில் தமது பொருளாதார மேம்பாட்டுக்காக மலேசியா சென்ற எமது முன்னோர்கள் அங்கே நடத்திய இலக்கிய வேள்விகள் பற்றிய செய்திகளை நூல்தேட்டப் பதிவுக்காகப் பதிவாக்கும் பொருட்டு அந்த மண்ணிலேயே இருந்து ஆழமானதொரு தேடலை மேற்கொள்வதெனத் தீர்மானித்தேன்.

அதற்கு உறுதுணையாக மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறை துணைநின்றது. அங்கு சுமார் 30 நூல்கள் வரை ஈழத்தமிழர்களின் படைப்புகளாக என்னால் அடையாளம் காண முடிந்தது. இதைப் பற்றித் தனியானதொரு கட்டுரையும் என்னால் பின்னாளில் எழுதப்பட்டுள்ளது. (கனடா, தமிழர் தகவல் 14ஆவது ஆண்டு மலர், பெப்ரவரி 2005. இலங்கையில் மீள்பதிப்பு, ஞாயிறு தினக்குரல் 1.5.2005 முதல் 22.5.2005 வரையிலான நான்கு இதழ்களில் பிரசுரமானது).

மலேசிய விஜயத்தின்போது, ஈழத்து நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை மலாயாப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கி வைத்து அங்கு உரையாற்றிய வேளையில், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினராலும், மலாயாப் பல்கலைக் கழகத்தினராலும் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தினராலும் கூட்டாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய மலேசிய-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூர் நூல்தேட்டம் என்ற தொகுதியை 2000 மலேசியத் தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புகளுடன் தொகுத்து வழங்கியிருந்தேன். நவம்பர் 2007இல் மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் தேசிய நூலகத்தினால் சிங்கப்பூரிலும், மலேசிய தேசிய நில நிதிக் கூட்டுறவு மையத்தினால் கோலாலம்பூரிலும் (மலேசியா), இந்நூல் ஓரிரு நாட்கள் இடைவெளியில் வெளியிடப்பட்டிருந்தது. தொடர்ந்தும் மலேசிய இலக்கியம் பற்றியும் இலக்கியவாதிகள் பற்றியும் வானொலி வாயிலாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் அறிமுகப்படுத்தியவண்ணம் இருந்தேன். அவ்வாக்கங்களின் தொகுப்பாகவே அண்மையில் எனது 40 ஆவது நூலாக "மலேசியாவில் தமிழ்: பார்வையும் பதிவும்" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

**(ஞானம்): புலம்பெயர் நாடுகளில் குறிப்பாக இலண்டனில் இலங்கைத் தமிழரின் புத்தகக் கலாசாரம் எந்த நிலையில் உள்ளது?**

**(செல்வா):** புலம்பெயர்ந்த முதலாம் தலைமுறைத் தமிழர் அறிவைத் தேடுவதைவிட பணத்தைத் தேடிச் சேர்ப்பதிலேயும் பிள்ளைகளை பொறியியலாளர் அல்லது வைத்தியராக்குவதிலும் அதிக அக்கறையுடன் இருக்கிறார்கள். சிறு பிரிவினர் தாயகப் பற்றோடு தாமறிந்த தமிழ், கலை, கலாச்சாரம், பண்பாடுகளைப் பின்பற்றித் தமது பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிகளுக்கு அக்கறை யுடன் அனுப்பி வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் எவரிடமும் பொது வாசிப்பிற்கான அக்கறையைக் காணமுடியாதுள்ளது. தீபம், ஜீ.டீ.வீ, ஐ.பீ.சீ. போன்ற தொலைக்காட்சி ஊடகங்கள் அவ்வப்போது நடத்தும் பொது அறிவுப் போட்டிகளின்போது இந்த இயலாமையும் அறியாமையும் பங்கேற்கும் மக்களிடத்தே துலக்கமாகத் தெரிகின்றது. புகலிடத்தில் புகலிடப் படைப்பாளிகளிடையே கூட, சக படைப்பாளிகளின் நூல்களைப் படிப்பதில் அதிக அக்கறைகாட்டுவோர் குறைவாகவே உள்ளனர். ஒரு படைப்பாளியின் புத்தக வெளியீட்டு நிகழ்வுக்கு பேச அழைத்தாலேயொழிய, பார்வையாளராக இன்னொரு படைப்பாளியைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது.

லண்டனில் நகராட்சி மன்றங்கள் நடத்தும் 21 பொது நூலகங்களில் பிரித்தானிய அரசு தமிழ் நூல்களை வாங்கி வைத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறது. நாளாந்தம் வாசிக்க வரும் தமிழர்களின் எண்ணிக்கை யைப் பொறுத்தே அடுத்த ஆண்டுக்கான நூல்கொள்வனவுக்கான ஒதுக்கீடு அமைகின்றது. தமிழர்கள் நூலகங்களை நாடாததால் வருடாந்த தமிழ் நூல் கொள்வனவு வீதம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி வருகின்றது. பல நூலகங்களின் தமிழ்ப் பிரிவுகள் சத்தமில்லாமல் மூடப்பட்டு வருகின்றன. அதை அறியாதவர்களாகவே எம்மவர்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில் புத்தகச் சந்தைகளினூடாகவாவது ஓரளவு வாசிப்புக் கலாச்சாரத்தை லண்டனில் ஏற்படுத்துவோம் என்றால் அதற்கும் ஆதரவு தருபவர்கள் அரிதாகிக்கொண்டே இருக்கி றார்கள். இரண்டாம் தலைமுறையினரிடம் வித்தியாசமான வாசிப்புக் கலாச்சாரம் காணப்படுகின்றது. அவர்களின் ஆங்கில நூல் வாசிப்பு பாடசாலைகளின் ஊக்குவிப்பினால் வளர்ந்து வருவதைக் காணமுடிகின்றது. அவர்களால் தமிழ் நூல்களைச் சரளமாக வாசிக்கும் பயிற்சி பெற்றோரினால் ஊட்டப்படவில்லை என்பதால், அவர்களது வாசிப்புத் தரம் ஆங்கில நூல்களைப் பொறுத்தவரை அதிகமாகவும் தமிழ் நூல்களைப் பொறுத்தவரை பூச்சியமாகவும் காணப்படுகின்றது என்பதே எனது அவதானிப்பு. லண்டனிலுள்ள எந்தவொரு தமிழ்ப் பள்ளியிலும் மாணவர்க ளுக்கான தமிழ் நூலகங்கள் இல்லை. கட்டிட வசதிக் குறைபாடு இருந்தாலும், நடமாடும் நூலக சேவையினையாவது அவர்கள் நடத்தியிருக்கலாம். பரிசுப் பொருள்களாக நூல்களை வழங்கும் கலாச்சாரம் கூட இங்கு வளர்ச்சியடையவில்லை. மொத்தத்தில் புகலிடத்தில் புத்தகக் கலாச்சாரம் ஆரோக்கியமற்றதாகவே காணப்படுகின்றது. இதனை மாற்றி அறிவுபூர்வமான ஒரு சமூகத்தை உருவாக்க நிறையவே உழைக்கவேண்டியுள்ளது.

**(ஞானம்): உங்களது பணிகளுக்காக நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி....?**

**(செல்வா):** விருதுகளைப் பொறுத்தவரை என்னிடம் ஒரு குறைபாடுள்ளது. எனது படைப்புகள் ஆக்க இலக்கிய வகையைச் சேர்ந்தவையல்ல. வெளியீட்டுத்துறை, நூலகவியல்துறை, ஆய்வுத் துறை சார்ந்தவை. இத்தகைய படைப்புகளுக்கு விருதுபெறும் வாய்ப்பற்றவனாகவே நான் இருக்கிறேன். மேலும் விருதுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுகள் என்பவை என்னைத் தேடி வருவது தான் அழகு. எனக்கு (அரிசோனா இயற்கைப் பல்கலைக்கழகத்தின்) கலாநிதிப் பட்டம் வழங்க எற்பாடு செய்யப்பட்ட வேளையில் ஜுன் 2007இல் "புகலிடத்தில் கலாநிதிகளும் கல்லாநிதிகளும்" என்ற தலைப்பில் இத்தகைய போலிப் பட்டங்களுக்கு எமது மக்கள் அடிமைகளாவதை எதிர்த்து நான் எழுதிய கட்டுரையொன்று லண்டன் உதயன் பத்தரிகையில் வெளிவந்து என்னைக் காப் பாற்றியது. அந்தப் பட்டத்தைப் பெறாமல் "தப்பித்துக்கொண்டேன்". நான் பெற்ற முதலாவது கௌரவமான விருது, கனடாவில் ஒன்ராரியோ மாநிலத்தில் இயங்கும் தமிழர் தகவல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "தமிழர் தகவல் விருது 2004"ம் தங்கப் பதக்கமுமாகும். டொரன்டோ நகர மண்டபத்தில் கோலா கலமாக நிகழ்த்தப்பட்ட அந்தப் பாராட்டு நிகழ்வில் எனக்குக் கிடைத்த விருது எனது 25 ஆண்டு நூலகவியல் மற்றும் சமூக சேவைகளுக்காக வழங்கப்பட்டது. தமிழர் தகவல் சஞ்சிகையை பிரபல பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வம் அவர்கள் மாதாந்தம் வெளியிடுகின்றார். ஒவ்வொரு ஆண்டு பெப்ரவரி மாதமும் தமிழர் தகவல் ஆண்டிதழ் வெளியீட்டுடன் கூடியதாக இந்நிகழ்வு நடைபெறுகின்றது.



இரண்டாவதாக அடுத்த ஆண்டில், 2005இல் கண்டி சிந்தனை வட்டம் "எழுத்தியல் வித்தகர்" என்ற பட்டத்தை வழங்கி கௌர வித்தது. சிந்தனை வட்டத்தின் தாபகர் அமரர் பீ.எம்.புன்னியாமீன் அவர்களாவார். தாயகத்தில் எனது சேவைக்காகக் கிடைத்த முதலாவது விருது இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007இல் அவுஸ்திரேலியா-தமிழ் இலக்கிய கலைச்சங்கம், வழங்கிய "சேவைநலன் பாராட்டு விருது" 24.11.2007 அன்று எனக்கு வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் மெல்பர்ண் நகரில் வாழ்ந்த படைப்பாளிகள் பலர் அன்றையதினம் ஒன்று சேர்ந்து இவ்விருதினை வழங்கியிருந்தார்கள்.

**அதே ஆண்டு, லண்டனில்** அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்-தமிழ் தமது பத்தாவது ஆண்டு விழாவிலே (1997-2007) வழங்கப்பட்ட பணி மதிப்பளிப்பு விருது லண்டனில் எனக்குக் கிடைத்த முதலாவதும் மகிழ்ச்சிக்குரியதுமான விருதாகும். விருதினை தமிழகத்தின் பிரபல தமிழ் அரசியல்வாதி, பழ.நெடுமாறன் ஐயா வழங்கியிருந்தார். அதனை எனக்குக் கிடைத்த கௌரவமாகவே இன்றும் கருதுகின்றேன்.



2011இல் வெளிவந்த சிறந்த ஆவண நூலுக்கான "தமிழியல் விருது 2012", மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினரால் எனக்கு 20.10.2013இல் வழங்கப்பட்டது. அமைப்பாளர்கள் முன்கூட்டியே எனக்குத் தகவல் தராமையால் அந்நிகழ்வில் நேரில் கலந்து கொள்ள முடியவில்லை. ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளை பாராட்டும் நோக்கில் எழுத்தாளர் ஓ.கே.குணநாதன் அவர்களை மேலாளராகக் கொண்டியங்கும் அமைப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013இல் தமிழகம் சென்ற வேளையில், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்-இந்திய ஒன்றியம், சென்னை பாரதிய வித்யா பவனில் 29.01.2013அன்று எனக்கு ஒரு வரவேற்பு விழாவை நடத்தியது. மண்டபம் நிறைந்த பல தமிழறிஞர்கள் கலந்துகொண்ட அவ்விழாவில், நான் நூலக பாடநூல்களில் மாத்திரமே அன்றுவரை அறிந்திருந்த பிரபல தமிழக நூலகர்கள் நேரில் வந்து வரிசையில் நின்று என்னை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்தியது வாழ்வில் மறக்க முடியாதது. அவர்கள் வழங்கிய வரவேற்புபசாரத்தின்போது வழங்கிய வாழ்த்துப் பத்திரம் பெருமையுடன் எனது இல்லச் சுவரை இன்றும் அலங்கரிக்கின்றது.

லண்டனில் வாழ்ந்துவரும் சட்ட ஆலோசகரான தமிழறிஞர் திரு வ.மா.குலேந்திரன் அவர்கள் காலத்துக்குக் காலம் தான்






Major T.Rajah (Former Vice Chancellor, MGR Medical University) delivers his Talk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த தமிழறிஞர்களை அழைத்துப் பட்டமளித்து விருது வழங்குவதுண்டு. அவ்வகையில் பிரிட்டிஷ் மகாராணியார் பற்றிய தனது நூலின் வெளியீட்டு விழாவான 27.7.2013 அன்று என்னை அழைத்துச் சிறப்பித்திருந்தார். அவ்வேளையில் "2013- வாழும் போது வாழ்த்துவோம்" என்ற பதாதையின் கீழ், சிறந்த நூலியலாளருக்கும் தொகுப்பாளருக்குமான விருதினை எனக்கு வழங்கியிருந்தார்.

இவை அனைத்தும் மனதில் அவ்வப்போது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாயும், தொடர்ந்து பணியாற்றவேண்டும் என்ற ஊக்குவிப்பை எனக்கு வழங்குவதாயும் இருக்கின்றது. இருந்த போதிலும் ஈழத்தில் பெரும்பாலான படைப்பாளிகளினதும் புத்திஜீவிகளினதும் மனதில் எனது பணிகள் அழுத்தமாகப் பதியவில்லையே என்ற மனக்குறை இன்றும் தொடர்கின்றது. இலங்கையில் தேசிய மட்டத்தில் எனக்கு இதுவரை எவ்வித அங்கீகாரமும் கிடைக்கவில்லையே என்ற மனக்குறையும் எனக்குண்டு. அதற்கான பரிந்துரையை ஈழத்துத் தமிழறிஞர்கள் செய்யும் அளவுக்கு எனது தமிழ்ப் பணிகளும் இலங்கையில் பரவலாக அறியப்படவில்லை என்றே நம்புகின்றேன்.

அண்மையில் எனது மணிவிழா மலரில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்த வவுனியூர் இரா. உதயணன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதை இங்கே மீள்பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

"2013 இல் லண்டனில் இடம்பெற்ற உலகத் தமிழ் ஆய்வு மகாநாடொன்றிற்கு வருகைதந்த பேராளர்களுக்கான தனிப்பட்ட விருந்துபசாரம் ஒன்றினை நூலகவியலாளர் செல்வராஜா அவர்கள், ஈஸ்ட்ஹாம் திருவள்ளுவர் மன்றத்தில் ஒழுங்கு செய்திருந்தார். அதற்கான அழைப்பையேற்று வருகை தந்தவர்களில் முக்கியமான ஒருவரான சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வீ.அரசு அவர்கள் செல்வ ராஜாவின் நூல்தேட்டப் பணிபற்றி அருமையானதொரு உரையை ஆற்றியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்ட விடயம், "தமிழ் நாட்டிலேயே முழுமையாகச் செய்யமுடியாது போனதொரு நூல்விபரத் தொகுப்பினை முழுமையான விபரங்களோடு ஈழத் தமிழரான என்.செல்வராஜா தனி ஒருவராக நின்று ஈழத் தமிழர்களுக்காகத் தொகுத்து வருகின்றார். இன்னும் ஒரு ஐம்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களின் பின்னர் தமிழகத்தில் மாத்திரமல்ல, இலங்கையில் கூட ஈழத்தின் போர்க்கால வரலாற்றை ஆய்வு செய்யமுற்படும் எந்தவொரு உலகளாவிய பல்கலைக்கழக, இலக்கிய ஆய்வும் நூல்தேட்டத்தின் தகவலைத்தான் முழுமையாக நம்பியிருக்கப் போகின்றது. அந்தளவுக்கு 35 ஆண்டுப் போர்க்கால இலக்கியங் களை முழுமையாக நூல்தேட்டம் பதிவுசெய்திருக்கின்றது. செல்வராஜாவின் பெருமையை, அவரது பணியின் முக்கியத்து வத்தை அயலகத் தமிழகத்தில் நாங்கள் இன்று அறிந்துள்ள அளவுக்கு, ஈழத்துப் பல்கலைக்கழகங்கள் அறிந்துள்ளனவோ தெரியாது. காரணம் அவர் இன்றும் உங்களுடன் உங்களில் ஒருவராக சாமானியராக வாழ்ந்து வருகிறார். அவரது மதிப்பு உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் இவர் வாழ்ந்த காலத்தில் தாம் வாழவில்லையே என எதிர்காலத்தின் உலகத்தமிழ் ஆய்வாளர்கள் உணர்ந்து வருந்தும் காலம் ஒன்று உருவாகும்" என்பதாகும்."

**(ஞானம்): இந்த நேர்காணல் மூலம் ஞானம் வாசகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**(செல்.பா) :** ஆம். எனது நூலியல் சார்ந்த, நூல்தேட்டப் பணிகளை கவனிப்பவர்களிடம், மேலெழுந்தவாரியாக ஏதோ பிரித்தானிய அரசின் நிதி வளத்துடன் நான் எனது சொந்தத் தேவைக்காகவோ, அல்லது பட்டப் படிப்புக்காகவோ, இந்த நூல்தேட்டத் தொகுப்பு களை மேற்கொண்டு வருகிறேன் என்ற சிந்தனை ஊறி நிற்ப தாகவே கருதுகின்றேன். அதுவே அவர்களை நூல்தேட்டத்திலிருந்து தங்களை அந்நியப்பட வைக்கின்றது. தமது பதிவு நூல்தேட்டத்தில் இல்லை என்றதும், ஏன் இல்லை? இருட்டடிப்புச் செய்துவிட்டார் என்ற குற்றச்சாட்டுகளே முதலில் எழுகின்றன. ஈழத்துப் படைப் பாளிகளின் ஒவ்வொரு படைப்பையும் என் சொந்த உழைப்பிலும் நிதியிலும் உலக அரங்குக்குக் கொண்டு செல்வதுடன் அதனை நிரந்தரமானதொரு ஆவணப்பதிவாக்குகின்ற ஒரு மனிதன் என்று சிந்திக்கத் தவறிவிடுகிறார்கள். இதனால் தான் ஒரு பேராதனைப் புத்திஜீவி என்னை "பிஸ்னஸ் நூலகர்" என்று வர்ணித்திருந்தார். அவரது பல்கலைக்கழக ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பு அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் என்னிடம் தமது படைப்புகளின் பிரதியொன்றினை தாமே முன்வந்து அனுப்பிவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை பெரும்பாலானவர்கள் எடுப்பதில்லை. அவராகத் தேடி எடுத்துக்கொள்ளட்டும். பதிவில் இடம்பெறாவிட்டால் அதனைக் குறையாகச் சொல்வோம் என்ற மனநிலையில் இருக்கும் எழுத்தாளர்களை அன்றாடம் நான் சந்திக்கிறேன். இதனால்தான் நான் இன்றும் பெரும் பணச்செலவில் நூல்களைத்தேடி கடல்கடந்து பயணிக்க வேண்டியுள்ளது. தங்கள் படைப்புக்களை வரலாற்றுப் பதிவாகப் பதிவுசெய்யவேண்டியது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை. தமிழ் நூல்களைப் பொறுத்தவரையில், அதனை செயற்படுத்த இலங்கைத் தேசிய நூலகம் தவறிவிட்டதால், அதனை எனது தோள்களில் சுமக்கத் தீர்மானித்தேன். 16 ஆண்டுகளாகச் சுமக்கின்றேன். இனியும் தொடர்வேன். எனது சுமையைக் குறைக்க உதவுங்கள் என்றே நான் ஞானம் வாசகர்களிடம் வேண்டுகோளாக விடுக்கவிரும்புகின்றேன். எனக்கு நிதி உதவி எதுவும் வேண்டியதில்லை. உங்கள் ஊரிலுள்ள நூலகத்தில் நூல் தேட்டம் பிரதிகள் அனைத்தும் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். அங்கே இல்லாவிட்டால் ஏன் இல்லை என்பதை அறிந்து அவர்கள் பெற்றுக்கொள்ள வழிசெய்யுங்கள். உங்கள் நண்பர்கள் ஒரு நூலை எழுதினால் அதன் ஒரு பிரதியை நூல்தேட்டத்தில் பதிவதற்காக அனுப்புவதற்கு அவர்களைத் தூண்டுங்கள்.

இறுதியாக, எனது கட்டுரைகளையும் தொடர்களையும் ஞானத்தில் பிரசுரித்து எனது எழுத்துக்களை வாசகர் மத்தியில் பரவலாகக் கொண்டுசெல்லத் துணை நிற்கும் ஞானம் சஞ்சிகைக் குடும்பத்திற்கு இச்சந்தர்ப்பத்திலே எனது நன்றியையும் உளமாரத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி. வணக்கம்.

(நன்றி: ஞானம் 200ஆவது இதழ்: ஈழத்துத் தமிழ் நவீன இலக்கியவெளி: புரிதலும் பகிர்தலும் நேர்காணல்கள் சிறப்பிதழ். (தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (கொழும்பு: யுனி ஆர்ட்ஸ்). xx, 980 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2000., அளவு: 25.5x18 சமீ., ISBN: 978-955-8354-48-3). ப. 806-828.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரின் புத்தகக் கலாச்சாரம்

நேர்காணல் திரு. இ.மகேஸ்வரன்
நூலகர், தமிழ்ப் பிரிவு
பேராதனைப் பல்கலைக் கழகம்

இலங்கையில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, கொழும்பு மாவட்டங்களில் பல்வேறு நூலகங்களிலும் 1976 முதல் நூலகராகப் பணியாற்றிய திரு என். செல்வராஜாவை அவரது பல் தொகுதி நூலான நூல்தேட்டம் வாயிலாகவும், சஞ்சிகைகள், பத்திரிகைகளின் வாயிலாகவும் நாங்கள் நன்கறிவோம். போர்க்காலச் சூழலில் 1991இல் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று தற்போது லண்டனில் குடும்பத்தினருடன் வசித்துவரும் நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா தற்போது குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இதுவரை 25 நூல்களுக்கும் மேல் எழுதி வெளியிட்டுள்ள இவரின் எழுத்துலக பணியில் "நூல்தேட்டம்" எனும் ஆவணவாக்கல் நூற்றொகுதி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நூல்தேட்டம் இதுவரை 06 தொகுதிகள் வெளிவந்துள்ளன. இந்த 06 தொகுதிகளினூடாகவும் தொகுதிக்கு 1000 இலங்கைத் தமிழர்களின் தமிழ் நூல்கள் என்ற வகையில் மொத்தம் 6000 நூல்களைப் பதிவாக்கியிருப்பது பெரும் சாதனையாகும். இலங்கை எழுத்தாளர்களின் இத்தனை நூல்களை ஒரே பார்வையின் கீழ் வேறு எந்த தனிப்பட்ட நபரோ, நிறுவனமோ குறிப்புரையுடன் கூடியதாக இதுவரை பதிவாக்கவில்லை என்று துணிவாகக் குறிப்பிடலாம். தற்போது நூல்தேட்டம் தொகுதி 07க்கான தேடல் முயற்சிகளை பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் மேற்கொண்டுவரும் நூலகவியலாளரும், எழுத்தாளரும், வெளியீட்டாளருமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. என். செல்வராஜா அவர்களுடன் தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுக்காக மேற்கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப்பகுதி நூலகர் இ.மகேஸ்வரன் அவர்களின் நேர்காணல் கீழே தொகுத்து தரப்படுகின்றது.

**இ.மகேஸ்வரன் : வணக்கம் திரு செல்வராஜா அவர்களே. உங்கள் தீவிரமான தேடல் பணிகளுக்கிடையே தினகரன் வார இதழுக்காக ஒரு நேர்காணலுக்கு நேரம் ஒதுக்கியமைக்கு நன்றி. முதலில் நூல்தேட்டம் என்றால் என்ன? இந்த நூல்தேட்ட நூல் வெளி யீட்டின் மூலமாக நீங்கள் இதுவரை அடைந்துள்ள இலக்கு என்ன என்பதைச் சற்று விரிவாக விளக்க முடியுமா?**

**என்.செல்வராஜா :** நூல்தேட்டம் இலங்கையில் இதுவரை அச்சில் வெளிவந்த தமிழ் நூல்களையும், இலங்கையரால் தமிழாக்கம் செய்யப்பட்ட பிறமொழி நூல்களையும் உள்ளடக்குகின்றது. இலங்கை எழுத்தாளர்கள் இன்றுவரை தமது நூல்களை இலங்கையில் மட்டுமல்லாது தமிழகம், ஐரோப்பா மற்றும் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்தும் வெளியிட்டு வருகிறார்கள். இவற்றின் வரவையும் இருப்பையும் முழுமையாகப் பதிவுசெய்த முயற்சி எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இந் நூல்கள் பற்றிய தகவல்களை விரிவாகப் பதிவுசெய்து கொள்வ தற்காகவும், பல்வேறு ஆய்வாளர்களின் விரிவான ஆய்வுத் தேவைகளுக்காகவும் நூல்தேட்டம் உருவாக்கப்பட்டது. இதுவரை காலமும் துறைசார்ந்த சிறு பட்டியல்களாக மட்டுமே அறியப்பட்டு வந்த இத்தகைய நூல்விபரங்கள் நூல்தேட்டத்தின் வாயிலாக மட்டுமே விரிவான பதிவுக்குள்ளாகியுள்ளமை ஒரு சிறப்பம்சம் என்று நான் கருதுகின்றேன்.

**இ.மகேஸ்வரன் : இதுகால வரை இலங்கையில் இதுபோன்றதோர் முயற்சி எம்மவர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்று கருதுகின்றீர்களா?**

**என்.செல்வராஜா:** ஆரம்பத்தில் எப்.எக்ஸ்.ஸி நடராஜா, கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், நா.சுப்பிரமணியன் போன்ற சில புத்திஜீவிகளும் இலக்கியவாதிகளும் சிறு நூல் களாகவும் நூல்களின் பின்னிணைப்புகளாகவும் இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியை அவ்வப்போது மேற்கொண்டிருந்தார்கள். இவை சிறு பட்டியல் வடிவிலேயே அமைந்திருந்தன. இவை எவற்றிலும் முறையான நூலியல் பதிவுகளோ, அந்த நூல்கள் பற்றிய குறிப்புகளோ இடம் பெற்றிருக்கவில்லை. இவர்கள் பெரும்பாலும் இலக்கியவாதிகளாக இருந்தமையால், இலக்கியத்துறை தொடர்பான நூல்களையே பெரும்பாலும் தமது பட்டியல்களில் பதிவுக்குள்ளாக்கியிருந்தார்கள். திருப்திகரமாக இல்லாவிட்டாலும்கூட, இலங்கைத் தேசிய நூலகமும் நிறுவன ரீதியில் கணிசமான அளவு தமிழ்நூல்களைப் பதிவுசெய்கின்றது.

**இ.மகேஸ்வரன்: நூல்தேட்டம் இலக்கியத்துறைக்கும் அப்பால் இலங்கையில் வெளியாகியதும் இலங்கைத் தமிழர்களால் வெளியிடப்பட்டதுமான அனைத்து நூல்களையும் உள்ளடக்குகின்றது அல்லவா?**

**என்.செல்வராஜா:** ஆம். இலங்கையின் நூலியல் பதிப்புத்துறை வரலாற்றில் இலக்கியத் துறைசார்ந்த நூல்களே பெருமளவில் வெளியிடப்பட்டு வந்திருக்கின்றன. இருப்பினும் இவை மட்டும் தான் இலங்கையின் நூலியல் வரலாறாகாது. உளவியல், சமயம், சமூகவியல், மொழியியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கவின் கலைகள், வரலாறு என்று பல்வேறு துறைகளிலும் இலங்கையில் நூல்கள் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன. நூல்தேட்டம் இவையனைத்தையும் பதிவு செய்யும் ஒரு பெரும் பணியிலேயே ஈடுபட்டிருக்கின்றது. இதன் மூலமே இலங்கையின் நூலியல் வரலாற்றை ஒரு ஆய்வாளர் முழுமையாகத் தரிசிக்க முடிகின்றது.

**இ.மகேஸ்வரன்: இலங்கைத தேசிய நூலகம் தனது தேசிய நூற்பட்டியலிலும் தமிழ் நூல்களை அடக்குகின்றது என்பதை நாம் அறிவோம். இது முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்று ஒரு கருத்தும் நிலவுகின்றது. அது பற்றி உங்கள் கருத்தென்ன?**

**என். செல்வராஜா:** இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை உருவாக்கப்பட்ட காலகட்டங்களில் தேசிய நூற்பட்டியல் என்று ஒன்று தொடங்கப்பட்டது. இலங்கையில் அச்சிடப்பட்ட மும்மொழி நூல்களில் பதிப்பகச் சட்டத்தின் கீழ் அச்சகங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சுவடிச்சாலைக்கு வழங்கப்படும் நூல்களின் தகவல்களை அடிப்படையாக வைத்து இப்பட்டியல் பதிவுசெய்யப்பட்டது. இது காலாண்டுக்கொரு முறையும் பின்னர் மாதாந்தமாகவும் இலங்கையில் இன்றளவில் வெளியிடப்பட்டு வருகின்றது. இன்று இப்பணியை இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கொழும்பிலிருந்து மேற்கொள்கின்றது. இப்பட்டியலில் தமிழ் நூல்களும் இடம்பெறுகின்றன. ஆனால், அவை பெரும்பாலும் அரச வெளியீடுகளையும், ISBN இலக்கம் பெறப்பட்ட நூல்களையுமே உள்ளடக்கி வருகின்றன. அங்கு பணிபுரியும் தமிழ் நூலகர்கள் தமது கைக்கெட்டும் தமிழ் நூல்களை இதில் பதிவு செய்கிறார்கள். இருப்பினும் புவியியல் மற்றும் பல்வேறு காரணிகளால் இதில் உலகெங்கும் அச்சிடப்படும் இலங்கைத் தமிழரின் அனைத்து நூல்களும் என்றுமே முழுமையாக உள்ளடக்கப்படாது என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

**இ.மகேஸ்வரன்: எந்த அடிப்படையினை வைத்து நீங்கள் இவ்வளவு உறுதியாகக் குறிப்பிடுகிறீர்கள்?**

**என்.செல்வராஜா:** இலங்கைத் தமிழர்களின் வெளியீடுகளை நீங்கள் அவதானிப்பீர்களாயின் அவற்றில் கணிசமான அளவு தமிழகத்தில் அச்சிடப்படுகின்றன. இவை இலங்கை ISBN இலக்கம் பெறப்பட முடியாதவை. மணிமேகலை பிரசுரம் போன்ற தமிழகப் பதிப்பாளர்களால் வெளியிடப்படும் இலங்கை யர்களின் நூல்களில் பெரும்பாலும் ISBN இலக்கங்களையே காணமுடிவதில்லை. இவை இந்தியாவில் அச்சிடப்படுவதாலும் இலங்கை தேசிய நூற்பட்டியலில் இடம்பெறும் தகுதியற்றவையாகி விடுகின்றன. மேலும், இலங்கை தமிழர்கள் உலகெங்கும் புலம் பெயர்ந்து பரந்து வாழும் சூழலில் அங்கெல்லாம் வெளியிடப்படும் மிகத் தரமான பல நூல்கள் இலங்கை மண்ணை அடைவதே இல்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. நூலின் பருமன், உள்ளடக்கம், படைப்பாளியின் அக்கறையின்மை, இலங்கையில் விரிவான விநியோகத் திட்டமின்மை என்பன அவற்றுட் சிலவாகும். இந்நிலையில் இந்நூல்களின் வரவு பற்றிய அறிதலை தேசிய நூலகம் கொண்டிருக்குமா என்பது கேள்விக் குறியாகவே யுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.மகேஸ்வரன்: புகலிடத்தில் இலங்கைத் தமிழர்களின் புத்தகக் கலாச்சாரம் பற்றிய சில விபரங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.**

**என்.செல்வராஜா :** இலங்கையிலிருந்து பாரிய புலப்பெயர்வொன்று ஏற்பட்ட எண்பதுகளின் பின்னர் இலங்கையின் பிரபல படைப்பாளிகள் சிலரும் பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தார்கள். நிலக்கிளி பாலமனோகரன் டென்மார்க்கிலும், இந்து மகேஷ் ஜேர்மனியிலும், அமுதுப் புலவர் லண்டனிலும், கவிஞர் கந்தவனம் கனடாவிலும், உதயணன் பின்லாந்திலும், லெ.முருகபூபதி மெல்பர்னிலும், எஸ்பொ, மாத்தளை சோமு போன்றோர் சிட்னியிலும் தமது இலக்கியப் பணியைத் தொடர்கிறார்கள். இப்பட்டியல் மிக நீண்டது. மாதிரிக்கொன்றாகவே மனதில் வந்த ஒழுங்கில் குறிப்பிடுகின்றேன். இவர்கள் தவிர புகலிடத்திலேயே தமது இலக்கியப்பணியை தொடங்கிய இளம் படைப்பாளிகள் கூட்டமொன்றும் உள்ளது. இவர்களுக்கு புலம்பெயர் தமிழர்களால் இயக்கப்படும் ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி, மற்றும் எழுத்து ஊடகங்கள், இணையத்தளங்கள் அனைத்தும் ஆரோக்கியமான புகலிட இலக்கிய வளர்ச்சிக்கு களம் அமைத்துக் கொடுத்து வருகின்றன. சில இளம் படைப்பாளிகள் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளிலும் அடிக்கடி முகம்காட்டுபவர்களாக இருப்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

**இ.மகேஸ்வரன்: தமிழில் இவர்கள் எழுதுவதை படிக்கும் வாய்ப்புள்ள சூழலில் இளைய தலைமுறையினர் உள்ளனரா? அவர்களது தமிழறிவு எப்படி இருக்கின்றது?**

**என்.செல்வராஜா:** நான் இங்கு குறிப்பிடும் எழுத்தாளர்களின் தமிழ்ப்படைப்புக்களை வாசிக்கும் நிலையில் முழுமையான இளைய தலைமுறையினர் இல்லை என்பது உண்மைதான். இந்த நிலை புகலிடத்தில் மாத்திரம் நிலைப்பதல்ல. ஏன் இங்கு இலங்கையில்கூட இளையோரிடையே வாசிப்புக் கலாச்சாரம் அருகி வருவதைப் பற்றி பத்திரிகைகளில் எம்மவர்கள் கவலைகொள்வதை நான் அவதானித்து வருகின்றேன். இங்கு புகலிடத் தமிழர்களைப்பற்றி எனது கருத்து என்னவென்றால் முற்றிலும் வேற்று மொழிச் சூழலில் கல்வி கற்கும் எமது இளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினரிடம் பொதுவான வாசிப்புப்பழக்கம் குறைந் துள்ளது என்று சொல்லமாட்டேன். அவர்களது தேசிய கல்வித் திட்டத்தின்கீழ் நிறையவே வாசிக்க வேண்டியுள்ளது. அதற்கான பயிற்சியும், வசதி வாய்ப்புகளும் பாடசாலைச் சமூகத்தினரால் வழங்கப்படுகின்றன. அவர்கள் தமிழ் நூல்களை வாசிக்கும் ஆற்றல் கொண்டிருப்பது குறைவாக இருக்கலாம். ஆனால் வாசிக்கும் ஆற்றல் பாடசாலை வேலைத்திட்டங்களால் அதிகரித்துச் செல்வதையே காணமுடிகின்றது. இல்லாவிட்டால் ஹரிபொட்டர் போன்ற பெருநூல்கள் இவர்களின் கைகளில் விருப்புடன் செல்வதற்கு வழியேற்பட்டிராது.

**இ.மகேஸ்வரன்: புலம்பெயர் தமிழர்களின் சிறார்களினது வாசிப்பு அறிவு திருப்திகரமாக இருப்பதாகக் கருதுகிறீர்களா?**

**என்.செல்வராஜா:** ஆம். நிச்சயமாக. இது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியே. என்னைப் பொறுத்தவரையில் முதலில் ஏதாவது மொழியின் மூலமான வாசிப்பில் ஆர்வம் ஏற்படுத்தப்படவேண்டும். அதன் பின்னர் அவர்கள் எந்த மொழியில் வாசிப்பது என்ற முடிவையும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ளலாம். சிறுவயதில் தமிழ் நூல்களில் தமது வாசிப்பை ஆரம்பித்து, ஆங்கில நூல்களின் வாசிப்பில் ஆர்வத்தை வளர்த்துக்கொண்ட பலரை நாங்கள் கண்டிருக்கிறோம். லண்டனை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் இங்கு பாடசாலைகளிலும் பொது நூலகங்களிலும் வாசிப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

லண்டனில் பல பிரதேசங்களில் மூத்த எழுத்தாளர்களின் முயற்சியில் வாசகர் சந்திப்புகள் இடம்பெறுகின்றன. வித்துவான் வேலன் இலக்கிய வட்டம், போன்ற பல அமைப்புகள் சிறிய அளவில் கூட்டுமுயற்சியாக தமிழ் நூல் வாசிப்பில் ஈடுபடுகின் றார்கள். கோபன் மகாதேவா என்ற தமிழறிஞரின் முயற்சியில் இயங்கும் இலக்கிய வட்டத்தினர் பூந்துணர் என்றொரு நூலையே வெளியிட்டிருக்கிறார்கள். தமது இலக்கிய வட்டத்தினரின் முயற்சிகளை தொகுத்து இந்த நூலை வெளியிட்டிருக்கிறார்கள். ஹரோ தமிழ்ச் சந்தி என்ற பெயரிலும் அண்மையில் ஒரு புதிய அமைப்பு இலக்கியச் சந்திப்புகளை மேற்கொள்ளத் தொடங்கி யுள்ளது. இப்படியான பல நலன்விரும்பிகள் தமிழ் மொழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடையேயும் இளையோரிடையேயும் வளர்ப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார்கள். டென்மார்க்கில் இளம் தமிழ் வாசகர்கள் வானவில் என்ற பெயரில் ஒரு இணையத்தளத்தையே வைத்திருக்கிறார்கள். அதில் தமிழில் மாத்திரமல்லாது டேனிஷ் மொழியிலும் தமது படைப்புக்களை அவர்கள் பதிவுசெய்கிறார்கள். இதன் பின்னணியில் திரு ஜீவகுமாரன் அவர்கள் இயங்கி வருகின்றார்.

**இ.மகேஸ்வரன் : தமிழ்ப் பாடசாலைகள் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அது எவ்வாறு இயங்குகின்றது?**

**என்.செல்வராஜா:** புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் போகும் இடம் எல்லாம் கோயில் கட்டினார்கள் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் பள்ளிச்சாலைகளையும் தான் அமைத்தார்கள். அந்தந்த நாட்டுப் பாடசாலைகளில் சனி ஞாயிறு வார இறுதிகளில் தமிழ்ப்பள்ளிகளை உருவாக்கி நடத்தி வருகிறார்கள். இங்கு தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் இளம் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தப்படுவதுடன் இசை, நடனம், நாடகம் போன்ற கலைத்துறைப் பயிற்சிகளும் சிறுவயதிலிருந்தே வழங்கப்படுகின்றன. பெற்றோரின் நிதி ஆதரவுடன் தொண்டர் ஆசிரியர்களின் மூலம் இது நிறைவேறுகின்றது. கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் நடத்தும் தமிழ்மொழிப் பரீட்சையில் சித்தி எய்தும் வகையிலும் இங்கு பயிற்சியளிக்கப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் தேசிய மொழிக் கல்வித்திட்டத்தின்கீழ் பிறமொழிப் புலமை பெற்ற மாணவர்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படுவது தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு ஓர் உந்துதலாக அமைகின்றது.

**இ.மகேஸ்வரன்: இரண்டாம் தலைமுறையினரின் தமிழ்மொழிப் பயிற்சி பற்றிக் குறிப்பிட்டீர்கள். இது படைப்பிலக்கியத்துறையில் அவர்களுக்கு எவ்விதம் பயனளிக்கும் என்று கருதுகின்றீர்கள்.**

**என்.செல்வராஜா:** இதுவரை காலமும் பன்னாட்டு இலக்கியங்களை ஆங்கிலவழி மூலமே தமிழில் தரிசித்திருக்கிறோம். இனி வரும் காலத்தில் மூலமொழியிலிருந்தே அதன் தமிழ்வடிவத்தை சுவைக்கும் வாய்ப்பு ஏற்படும். அண்மையில் டேனிஷ் பழம்பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளியான எச்.சி.அனசனின் கதைகளை திரு தர்மகுல சிங்கம் தமிழாக்கம் செய்து மித்ர வெளியீடாக வெளியிட்டிருந்தார். மூலநூல் பிறந்த அந்த மண்ணிலிருந்து அதன் கலாச்சாரத்தை நுகர்ந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் இது. இது போலவே பின்லாந்தின் தேசிய இலக்கியமான கலேவலா என்ற காவியத்தை பின்லாந்து மண்ணிலிருந்தே உதயணன் எமக்குத் தந்திருக்கிறார். இதே போன்று இளைய தலைமுறையில் கலைச் செல்வன் தமிழ்க் கவிதைகளை பிரெஞ்சு மொழியில் வழங்கியி ருக்கிறார். டென்மார்க் பாலமனோகரன் தனது நாவல்களை டேனிஷ் மொழியில் தானே மொழிபெயர்த்திருக்கிறார். பல மொழியியல் அகராதிகள் எம்மவர்களால் புகலிடத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. பிரெஞ்ச், ஜேர்மன் மொழிகளில் பல அகராதி நூல்கள் புகலிடத் தமிழர்களின் பயன்பாட்டிற்கென வெளிவந்துள்ளன. இவை அனைத்தையும் எனது நூல்தேட்டம் தொகுதிகளில் ஆவணப்படுத்தியுமிருக்கிறேன்.

**இ.மகேஸ்வரன்: நல்லது திரு செல்வராஜா அவர்களே, ஒரு நூலகரின் பார்வைக் கோணத்திலிருந்து எமக்கு பல தகவல்களை வழங்கியிருக்கிறீர்கள். நீங்கள் பல நூல்களை வெளியிட்டிருக்கி றீர்கள். இலங்கை நூல்தேட்டம் தவிர மலேசிய நூல்தேட்டம், இலங்கைத் தமிழருக்கான ஆங்கில நூல்தேட்டம், சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி ஆகியவற்றையும் வெளியிட்டதாக அறிகின்றோம். இவை பற்றி சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**

**என்.செல்வராஜா :** மலேசிய, சிங்கப்பூர் தமிழர்களின் ஆரம்பகால நூலியல் வரலாறு இலங்கைத் தமிழருடன் பின்னிப் பிணைந்தவை. அந்நாடுகளில் ஆரம்பகால தமிழ் நூல்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்களால் மேற்கொள்ளப் பட்டவையாகும். இந்நூல்களைத் தேடி அந்நாட்டுக்குச் சென்ற போது தான் முழு உலகத்தாலும் மறக்கப்பட்டு ஓரங்கட்டப் பட்டு இருந்த மலேசிய தமிழர்களின் ஆழமான பல நூல்கள் பற்றி என்னால் அறியமுடிந்தது. இவர்களது படைப்புக்கள் பற்றி இலங்கைத் தமிழர்கள் அறிந்திராதது துரதிர்ஷ்டம் என்றே கருதினேன். இதன் பயனாக 2200 பதிவுகளுடன் எழுந்ததே மலேசிய, சிங்கப்பூர் நூல்தேட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழரின் பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இலங்கை இராணுவத்தின் வரலாறு ஒரு தமிழரால் எழுதப்பட்டதே. கொழும்பு மாவட்டத்தின் வரைபடம் (Street Atlas) ஒரு தமிழரால் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையின் சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முதல் ஆய்வு தமிழராலேயே மேற்கொள்ளப் பட்டது. இத்தகைய பல வரலாற்று முக்கியத்துமான நூல்களை தந்த அந்த தமிழர்களையோ, அவர்களது நூல்களையோ அண்மைக்காலத்தில் ஆங்கிலத்தில் வெளிநாடுகளில் வெளிவந்திருந்த இலங்கை தொடர்பான நூல் விபரப்பட்டியல்கள் உள்ளடக்கியிருக்காதமை எனது கவனத்தை ஈர்த்தது. இதன் காரணமாக எழுந்ததே ஆங்கில நூல்தேட்டமாகும். இது முற்றிலும் தமிழர் அல்லாதவர்களுக்காக ஆங்கில மொழியில் உருவாக்கப் பட்ட ஒரு நூல்தேட்டம்.

இலங்கைத் தமிழரின் நூலியல் பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிப்பது சிறப்பு மலர்களாகும். பல தமிழ் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பு மலர்களில் வந்து குறுகிய வட்டத்திற்குள் தங்கி விடுவதாலும் குறுகிய கால வரலாற்றைக் கொண்டதாலும் ஆய்வு மாணவர்களால் கண்டு கொள்ளாமல் போய்விடும். இதைத் தவிர்க்கும் நோக்குடன் தேர்ந்த 150 தமிழ் மொழியிலான சிறப்பு மலர்களை எடுத்து அவற்றிலிருந்த 2000க்கும் அதிகமான கட்டுரைகளை கண்டறிந்து அவற்றிற்கான ஒரு வழிகாட்டியை (சுட்டி) தயாரித்திருந்தேன். இதனை நூலுருவிலும் கொண்டுவந்து பிரதான நூலகங்களுக்கு வழங்கி யிருந்தேன். இது இன்றளவில் நல்லதொரு உசாத்துணை வழி காட்டி நூலாக பயன்படுத்தப்படுவதை அறிகின்றேன். முதலாம் தொகுதியை வழிகாட்டியாகக் கொண்டு எதிர்காலத்தில் ஈழத்து நூலகர்கள் இதன் இரண்டாவது தொகுதியைத் தொடரலாம். இது எனக்காக மட்டும் வரையறுக்கப்பட்ட பணியல்ல. பாதையை நான் உருவாக்கிப் பயணித்துக் காட்டியுள்ளேன். அவ்வளவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.மகேஸ்வரன்: உங்கள் அண்மைய வெளியீடு பற்றி குறிப்பிடுவீர்களா?**

**என்.செல்வராஜா:** வேரோடி விழுதெறிந்து என்ற தலைப்பில் அண்மையில் ஞானம் வெளியீடாக ஒரு நூலை வெளியிட்டிருக்கிறேன். இலங்கை, மற்றும் புகலிட நூலியல், இலக்கிய முயற்சிகள் பற்றி பல்வேறு கட்டங்களிலும் ஊடகங்களில் என்னால் எழுதப்பட்ட 20 கட்டுரைகளை அதில் தொகுத்திருக்கின்றேன். புகலிட இலக்கியம் பற்றிய ஒரு விரிவான பார்வையை இந் நூல் வழங்கும் என்று நம்புகின்றேன். எனது அனைத்துப் படைப்புகளும் இலங்கையிலேயே குமரன் புத்தக இல்லத்தின் வாயிலாக அச்சிடப்படுகின்றமையால் பரவலாக தினகரன் வாசகர்கள் இதைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**இ.மகேஸ்வரன்: இந்த நேர்காணலின் வழியாக தினகரன் வாசகர்களிடம் ஏதேனும் வேண்டுகோள்களை விடுக்க விரும்புகிறீர்களா?**

**என்.செல்வராஜா:** நிச்சயமாக. நூல்தேட்டம் தொகுதிகளில் இலங்கையில் வெளிவந்த சகல தமிழ் நூல்களும் இடம்பெற வேண்டும் என்பதே எனது ஆவல். அந்த ஆவலே என்னை இலங்கைக்கு வந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மூன்று வாரங்களை முழுமையாகச் செலவிட வைத்திருக்கிறது. இந்த நேர்காணலை வாசிக்கும் படைப்பாளிகளும் வாசகர்களும், உங்கள் அருகாமையில் உள்ள நூலகத்தில் நூல்தேட்டம் பிரதிகளை பார்வையிடவேண்டும். அதில் இடம்பெறத் தவறிய உங்கள் நூல்களை எனக்குப் பதிவுக்காக அனுப்பிவைக்கவேண்டும் என்பதே எனது வேண்டுகோள். தற்போது உருவாகிவரும் ஏழாவது தொகுதியில் இவை சேர்த்துக்கொள்ளப்படும் வாய்ப்புள்ளது.

பொது நூலகம்
14 OCT 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ.மகேஸ்வரன்:** நன்றி திரு என்.செல்வராஜா அவர்களே உங்கள் பணி மேலும் சிறக்க தினகரன் வாசகர்களின் சார்பில் வாழ்த்துக்கூறி, விடைபெறுகின்றேன். நன்றி.

**என்.செல்வராஜா:** எனக்கும் இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு தினகரன் வாசகர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

(நன்றி: "புலம்பெயர் நாடுகளில் வெளியிடப்படும் தரமான நூல்கள் இலங்கை மண்ணை அடைவதேயில்லை"
*தினகரன் வாரமஞ்சரி 28 மார்ச் 2010: ப. ?.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடசேர்க்கை பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை ஓரிடத்தில் பதிவுசெய்து ஆய்வுக்கு வழங்குவதே என் நோக்கம்

*(நேர்காணல்: பீ.எம்.புன்னியாமீன்)*

*இலங்கையிலிருந்து 1991இல் புலம்பெயர்ந்து சென்று லண்டனில் வசித்துவரும் நூலகவியலாளர் திரு. என்.செல்வராஜா அவர்கள் தற்போது குறுகிய கால விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இதுவரை 25 நூல்களுக்கும் மேல் எழுதி வெளியிட்டுள்ள இவரின் எழுத்துலக பணியில் "நூல்தேட்டம்" எனும் ஆவணவாக்கல் நூற்றொகுதி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நூல்தேட்டம் தொகுதியில் இதுவரை 06 தொகுதிகள் வெளிவந்துள்ளன. இந்த 06 தொகுதிகளினூடாகவும் இலங்கையைச் சேர்ந்த மொத்தம் 6000 தமிழ் நூல்களை பதிவாக்கியிருப்பது பெரும் சாதனையாகும். இலங்கை எழுத்தாளர்களின் இத்தனை நூல்களை ஒரே பார்வையின் கீழ் வேறு எந்த தனிப்பட்ட நபரோ, நிறுவனமோ இதுவரை பதிவாக்கவில்லை என்று துணிவாகக் குறிப்பிடலாம். தற்போது நூல்தேட்டம் தொகுதி 07க்கான தேடல் முயற்சிகளை பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் மேற்கொண்டுவரும் நூலகவியலாளரும், எழுத்தாளரும், வெளியீட்டாளரும், பன்னூலாசிரியருமான "இலக்கிய வித்தகர்" திரு. என். செல்வராஜா அவர்களுடன் ஞாயிறு தினக்குரல் வாசகர்களுக்காக மேற்கொண்ட நேர்காணல் கீழே தொகுத்து தரப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பீ.எம்.புன்னியாமீன்: நூல்தேட்டம் என்றால் என்ன? இந்த நூல் தேட்ட நூல் வெளியீட்டின் மூலமாக நீங்கள் இதுவரை எதனை சாதித்துள்ளீர்கள்?**

**என்.செல்வராஜா:** நூல்தேட்டம் இலங்கையில் இதுவரை அச்சில் வெளிவந்த தமிழ் நூல்களையும், இலங்கையரால் தமிழாக்கம் செய்யப்பட்ட பிறமொழி நூல்களையும் உள்ளடக்குகின்றது. இலங்கை எழுத்தாளர்கள் தமது நூல்களை இலங்கையில் மட்டு மல்லாது தமிழகத்திலும், ஐரோப்பாவிலும் வேறும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்தும் வெளியிட்டு வருகிறார்கள். இவற்றின் இருப்பை ஓரிடப்படுத்தி பதிவு செய்து கொள்வதற்காகவும், ஆய்வாளர்களின் விரிவான ஆய்வுத் தேவைகளுக்காகவும் நூல் தேட்டம் உருவாக்கப்பட்டது. இதுவரை காலமும் துறைசார்ந்த சிறு பட்டியல்களாக மட்டுமே அறியப்பட்டு வந்த இத்தகைய நூல்விபரங்கள் நூல்தேட்டத்தின் வாயிலாகவே விரிவான பதிவுக்குள்ளாகியுள்ளமை ஒரு முன்னோடி முயற்சி என்று நான் கருதுகின்றேன்.

**பீ.எம்.புன்னியாமீன்: அப்படியென்றால் இதுகால வரை இலங்கையில் இதுபோன்றதோர் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்று கருதுகின்றீர்களா?**

**என்.செல்வராஜா:** ஆரம்பத்தில் எப்.எக்ஸ்.ஸி. நடராஜா, கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன் போன்றோர் சிறு நூல் களாகவும் நூல்களின் பின்னிணைப்புகளாகவும் இலங்கையில் வெளிவந்த தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் முயற்சியை அவ்வப்போது மேற்கொண்டிருந்தார்கள். இவை சிறு பட்டியல் வடிவிலேயே அமைந்திருந்தன. நூலின் தலைப்பு, ஆசிரியர் பெயர், சிலவேளை வெளியிட்ட ஆண்டு போன்ற விபரங்களே அவற்றில் இடம்பெற்றிருந்தன. இவை எவற்றிலும் முறையான நூலியல் பதிவுகளோ, அந்த நூல்கள் பற்றிய குறிப்புகளோ இடம் பெற்றிருக்கவில்லை. இவர்கள் பெரும்பாலும் இலக்கியத்துறை தொடர்பான நூல்களையே பதிவுக்குள்ளாக்கியிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பீ.எம்.புன்னியாமீன்: இலக்கியத்துறைக்குப் புறம்பாக வேறு துறைசார்ந்த நூல்களையும் நீங்கள் பதிவு செய்துள்ளீர்களா? அவ்வாறு பதிவு செய்திருப்பின் அது பற்றி சற்று விரிவாக குறிப்பிட முடியுமா?**

**என். செல்வராஜா :** இலங்கையின் நூலியல் பதிப்புத்துறை வரலாற்றில் இலக்கியத் துறைசார்ந்த நூல்களே பெருமளவில் வெளியிடப்பட்டு வந்திருக்கின்றன. இருப்பினும் இவை மட்டும்தான் இலங்கையின் நூலியல் வரலாறாகாது. உளவியல், சமயம், சமூகவியல், மொழியியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கவின்கலைகள், வரலாறு என்று பல்வேறு துறைகளிலும் இலங்கையில் நூல்கள் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன. நூல்தேட்டம் இவையனைத்தையும் பதிவு செய்யும் ஒரு பெரும் பணியிலேயே ஈடுபட்டிருக்கின்றது. இதன் மூலமே இலங்கையின் நூலியல் வரலாற்றை முழுமையாக தரிசிக்க முடியும்.

**பீ.எம்.புன்னியாமீன்: இத்தகைய பதிவிற்கு ஏதேனும் சிறப்பான வகுப்புத் திட்டமொன்றை நீங்கள் கைகொள்கின்றீர்களா?**

**என். செல்வராஜா:** நூல்தேட்டத்தின் நூல்கள் யாவும் 10 பிரதான வகுப்புகளுக்குள் அடங்குகின்றன. இது நூலகங்களில் பொதுவாக பயன்படுத்தப்படும் டூவி தசாம்ச பகுப்பு முறையை (Dewey Decimal Classification) அடிப்படையாகக் கொண்டது. இப்பகுப்பு முறையின் கீழ் எமது எழுத்து வளங்கள் அனைத்தையும் பொது விடயங்கள், உளவியல், சமயம், சமூகவியல், மொழியியல், தூய விஞ்ஞானம், தொழில்நுட்பம், கவின்கலைகள், இலக்கியம், வரலாறு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு பிரிவும் மேலும் 10 உப பிரிவுகளாக வகுக்கப்படுகின்றன. உதாரணமாக சமூகவியல் என்ற பிரிவுக்குள் புள்ளிவிபரவியல், அரசியல், பொருளியல், சட்டம், பொதுநிர்வாகம் போன்ற அறிவுத் துறைகள் உப பிரிவுகளாக உள்ளடங்கும். நூல்தேட்டத்தின் பகுப்பு அடிப்படையில் இவ்வாறே அமைகின்றது. தேவை கருதி சிறு மாற்றம் செய்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பி.எம்.புன்னியாமீன்: இலங்கை தமிழ் நூல்களின் ஆவணவாக்கல் களை தனிப்பட்ட நபர்கள் தவிர்ந்து நிறுவனங்களோ அல்லது அரசாங்கமோ பதிவுகளுக்கு உட்படுத்தவில்லை எனக் கருதுகின்றீர்களா?**

**என். செல்வராஜா :** இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை உருவாக்கப்பட்ட காலகட்டங்களில் தேசிய நூற்பட்டியல் என்று ஒன்று தொடங்கப்பட்டது. அதில் இலங்கையில் அச்சிடப்பட்ட மும்மொழி நூல்களில் பதிப்பகச் சட்டத்தின் கீழ் அச்சகங்களால் வழங்கப்படும் நூல்களின் தகவல்களை அடிப்படையாக வைத்து இப்பட்டியல் பதிவுசெய்யப்பட்டது. இது காலாண்டுக்கொரு முறையும் பின்னர் மாதாந்தமாகவும் இலங்கையில் இன்றளவில் வெளியிடப்பட்டு வருகின்றது. இன்று இப்பணியை இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கொழும்பிலிருந்து மேற்கொள் கின்றது. இப்பட்டியலில் தமிழ் நூல்களும் இடம்பெறுகின்றன. ஆனால், அவை பெரும்பாலும் அரச வெளியீடுகளையும், ISBN இலக்கம் பெறப்பட்ட நூல்களையுமே உள்ளடக்கி வருகின்றன. இதில் இலங்கைத் தமிழரின் அனைத்து நூல்களும் என்றுமே முழுமையாக உள்ளடக்கப்படாது என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

**பி.எம்.புன்னியாமீன்: எந்த அடிப்படையினை வைத்து நீங்கள் இவ்வளவு உறுதியாக குறிப்பிடுவீர்கள்?**

**என்.செல்வராஜா:** இலங்கைத் தமிழர்களின் வெளியீடுகளை நீங்கள் அவதானிப்பீர்களாயின் அவற்றில் கணிசமான அளவு தமிழகத்தில் அச்சிடப்படுகின்றன. இவை இலங்கை ISBN இலக்கம் பெறப்பட முடியாதவை. மணிமேகலை போன்ற தமிழகப் பதிப்பாளர்களால் வெளியிடப்படும் இலங்கையர்களின் நூல்களில் பெரும்பாலும் ISBN இலக்கங்களை காணமுடிவ தில்லை. இவை இலங்கை தேசிய நூற்பட்டியலில் இடம்பெறும் தகுதியற்றவையாகி விடுகின்றது. மேலும், இலங்கை தமிழர்கள் உலகெங்கும் புலம்பெயர்ந்து பரந்து வாழும் சூழலில் அங்கெல்லாம் வெளியிடப்படும் மிகத் தரமான பல நூல்கள் இலங்கை மண்ணை அடைவதே இல்லை. இந்நிலையில் அவை பற்றிய அறிதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOHA JPL

தேசிய நூலகம் கொண்டிருக்குமா என்பது கேள்விக் குறியாகவே யுள்ளது.

**பீ.எம்.புன்னியாமீன்: தேசிய நூலக ஆவணவாக்கல் சபையில் வெளியிடப்படும் நூற்பட்டியலில் ISBN இலக்கம் பெறப்பட்ட நூல்கள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டீர்கள். ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் நூல்களுக்கு ISBN இலக்கம் வழங்கும் முறை 1980களிலே அறிமுகஞ் செய்யப்பட்டது. இதற்கு முன்புள்ள நூல்களின் பதிவு நிலை குறித்து நிறுவன ரீதியான அமைப்புகளின் செயற்பாடு பற்றி எத்தகைய கருத்துக்களைக் கொண்டுள்ளீர்கள்?**

**என்.செல்வராஜா:** ஆரம்பத்தில் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு அச்சகம் தான் அச்சிடும் எந்தவொரு நூலிலும் குறிப்பிட்ட சில பிரதிகளை தேசிய நூலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது சட்டபூர்வமானதாகும். ஆனால், தமிழ் பதிப்பாளர்களைப் பொறுத்தவரையில் இது அன்று முதல் இன்று வரை முறையாக கடைப்பிடிக்கப்படவில்லை. இதனை அரசாங்கமும் உறுதியாக நடைமுறைப்படுத்தவும் இல்லை. இதன் காரணமாக தேசிய நூலகப் பதிவுகளில் ஆரம்ப காலம் முதல் தமிழ் நூல்கள் இடம் பெறுவது குறைவாகவே இருந்தது. இன்று கூட ISBN இலக்கமிடப் படுவதும் அச்சகங்கள் தமது நூல்களை தேசிய நூலக ஆவண வாக்கல் சபைக்கு அனுப்பி வைப்பதும் ஒழுங்காக நடப்பதில்லை. இதை நாங்கள் கண்கூடாகக் கண்டும் வருகின்றோம். இதனை கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் இறுக்கமான கொள்கைகள் எதுவுமில்லை.

**பீ.எம்.புன்னியாமீன்: இலங்கை எழுத்தாளர்களால் இலங்கையிலோ அல்லது உலகளாவிய ரீதியிலோ வெளியிடப்படக் கூடிய நூல்கள் யாதோ ஒரு அமைப்பின் கீழ் பதிவு செய்யப்படாமையினால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படுமெனக் கருதுகின்றீர்கள்?**

**என்.செல்வராஜா:** நூல் வெளியீடு என்பது மிக பணச் செல வானதும், காலச் செலவானதுமான ஒரு முயற்சியாகும். ஒரு சமூகத்தின் அறிவின் அளவுகோலாக அச்சமூகத்தினால் வெளி யிடப்படும் நூல்கள் அமைகின்றன. இவை வெளியிடப்படும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்காவது ஓரிடத்தில் பதிவு செய்யப்பட வேண்டியது முக்கியமான தாகும். புள்ளிவிபரத்துக்காக மட்டுமன்றி எதிர்காலத்தின் வரலாற்றுத் தேவைக்காகவும் இத்தகைய பதிவுகள் முக்கியமாகும். இத்தகைய பதிவுகளின் காரணமாக ஒரு நூலின் வரவை உலகளாவிய ரீதியில் மற்றவர்கள் அறிந்து கொள்கின்றார்கள். குறிப்பாக ஒரு ஆய்வாளர் தனது ஆய்வுத் தேடலுக்காக முனையும் போது நூலின் இருப்பை, தனது ஆய்வுத் தேவைக்குப் பொருத்தமான நூல்களின் வரவை இத்தகைய பதிவு ஆவணங் களின் ஊடாக இலகுவில் அடையாளம் கண்டு கொள்கின்றார். இன்று இலக்கியத்துறையை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் தமிழில் இலங்கையரால் எத்தனை நூல்கள், எத்தனை நாவல்கள், எத்தனை சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன என்று எவராலும் உறுதிபட கூற முடியாதுள்ளது. இன்றைய ஆய்வாளர்கள் இலங்கை தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்யும்போது ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள இத்தகைய முழுமையடையாத பட்டியல் களை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். இருட்டு அறைக்குள் கருப்புப் பூனையைத் தேடும் இந்நிலை மாற வேண்டுமானால் அந்த அறைக்கு படிப்படியாக ஒளியூட்ட முனையும் நூல்தேட்டம் போன்ற பாரிய தொகுப்புக்கள் மேற்கொள்வதன் அவசியத்தை படைப்பாளிகள் உணர வேண்டும்.

**பீ.எம்.புன்னியாமீன்: இத்தகைய அவசியத்தினை தற்போதைய தமிழ் எழுத்தாளர்கள் ஆய்வாளர்கள் எவ்வளவுதூரம் உணர்ந்திருக்கிறார்கள்**

**என்.செல்வராஜா:** என்னைப் பொறுத்த வரையில் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் எனது பணியை எனது சுய தேவையின் நிமித்தமும் வர்த்தக நோக்கம் கருதியதாகவும் மேற்கொள்வதாகவே பலரும் இன்றளவில் கருதுவதாக நான் உணர்கின்றேன். இப்பணிக்கு உலகெங்கும் திரிந்து நான் தேடலில் ஈடுபடுவதில் உள்ள பொருளாதார, கால செலவை கணிப்பிட்டால் அது என் வாழ்வின் பெரும்பகுதியை விழுங்கி விட்டதை நான் உணர் கின்றேன். இவ்வளவு தனிப்பட்ட இழப்பின் பின்னர் ஆறு தொகுதிகளை உருவாக்கி அதில் இலங்கை எழுத்தாளர்களின் 6000 நூல்களை பதிவு செய்து எனது இனத்திற்கு வழங்கியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையிலும் நூல்தேட்டம் பற்றிய உணர்வினை படைப்பாளிகள் கொண்டிருக்கிறார்களா என்ற சந்தேகமே எனக்கு எழுகின்றது. அண்மையில் கொழும்பில் ஒரு நூல் வெளியீட்டு விழாவுக்கு சென்றிருந்தேன். அங்கு பேசிய பிரபல எழுத்தாளர் ஒருவர் ஈழத்து இலக்கியத்தை ஆவணப்படுத்தியவர்களாக சில்லையூர் செல்வராசன், கனக செந்திநாதன் ஆகியோரையே சிலாகித்து குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். அன்று ஆவணப் படுத்தல் பற்றிப் பேசிய எவருமே தங்கள் கண்ணெதிரில் விரிந்து கிடக்கும் நூல்தேட்டத்தின் 6000 நூல்களின் ஆறு தொகுதிகளைப் பற்றி ஒரு வார்த்தையேனும் பேசாதது எனது சந்தேகத்தை வலுப்படுத்தியிருந்தது.

**பீ.எம்.புன்னியாமீன்: ஆய்வாளர்கள் மத்தியில் நூல்தேட்டம் எவ்வளவு தூரம் உள்வாங்கப்பட்டுள்ளது.**

**என்.செல்வராஜா:** நூல்தேட்டம் பிரதிகள் ஐரோப்பிய நூலகங்களின் தமிழியல் பிரிவு, அல்லது தென்னாசியப் பிரிவு இயங்கும் நூலகங்களில் இடம்பெற்றுள்ளதால் அங்கு ஓரளவு அறியப்பட்டதாக உள்ளது. லண்டனில் என்னுடன் மேற்கொள்ளப் படும் பல்வேறு தொலைபேசி உரையாடல்களிலிருந்து இதை அறிந்து கொள்ள முடிகின்றது. இலங்கையில் நிலைமை தலை கீழாக உள்ளது. நூல்தேட்டம் பிரதிகளை பிரதான நூலகங்கள் இருப்பில் கொண்டிருக்கின்றன என்று அறிகின்றேன். ஆயினும் ஆய்வாளர்கள் இதனை எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய முடியவில்லை. ஏனெனில் அண்மையில் வெளிவந்த எந்தவொரு ஆய்வு நூலிலும் தமது உசாத்துணை பதிவுகளாக ஆய்வாளர்களினால் நூல்தேட்டம் குறிப்பிடப் பட்டதை நான் அறியவில்லை. நூலகம் இணையத்தில் நூல்தேட் டத்தின் அனைத்துத் தொகுதிகளும் இலவசமாகத் தரவிறக்கம் செய்து பயன்படுத்த வசதியுள்ளது. இதைவிட எதைத்தான் நான் அதிகமாகச் செய்துவிடமுடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பீ.எம்.புன்னியாமீன்: நூல்தேட்டத்தை அடிப்படையாக வைத்து ஏதேனும் ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?**

**என்.செல்வராஜா:** உடத்தலவின்னையிலிருந்து கலாபூஷணம் பி.எம்.புன்னியாமீன் நூல்தேட்டம் முதல் நான்கு தொகுதிகளை விரிவாக ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். "நூல்தேட்டம் இலங்கைத் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டிய ஒரு பெருநதி" என்ற தலைப்பில் இது 2007இல் ஒரு நூலாகவும் வெளிவந்திருந்தது. அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப்பிரிவின் நூலகர் திரு. மகேஸ்வரன் இலங்கை தமிழ் நூல்களை தேசிய நூற்பட்டியலில் ஆவணப் படுத்துவது பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொண்டு வருகின்றார். இதில் தேசிய நூற்பட்டியலுடன் நூல்தேட்டம் பதிவாக்கத்தையும் ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வு செய்து வருகின்றார். விரைவில் அவரது ஆய்வு நிறைவுபெறும் என்று அறிகின்றேன். ஈழத்தமிழர் நூல்களை பீ.டீ.எப். வடிவில் இணையநூலகமாகப் பதிவேற்றிவரும் நூலகம் இணையத்தளத்தின் நூல் தேடுகையின் ஆரம்பப்பதிவுக் குறிப்பாக நூல்தேட்டம் பதிவுகளைப் பயன்படுத்த அனுமதி வழங்கியிருக்கிறேன். அதிலும் நூல்தேட்டம் விரிவான பாவனை யில் உள்ளது. பல்கலைக்கழகங்களில் இலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் நூல்தேட்டத்தை பெருமளவில் பயன்படுத்தித் தமக்கு வேண்டிய ஆய்வுத் தேவைக்கான நூல்களின் இருப்பினை அறிந்து அந்நூல்களை தேடுவதில் ஆர்வம் கொள்வதையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் தங்கியிருந்த மூன்று வார காலத்தில் நேரில் கண்டு புளங்காகிதம் அடைந்தேன்.

**பீ.எம்.புன்னியாமீன்: இதுவரையில் நூல்தேட்டத்தின் ஆறு தொகுதிகளை வெளியிட்டுள்ள நீங்கள் சில வருடங்களுக்கு முன்னர் முதலாவது தொகுதியின் வெளியீட்டின் பின்னர் வழங்கிய ஒரு நேர்காணலில் ஆறுதொகுதிகளில் நூல்தேட்டத்தை பதிவுசெய்ய தீர்மானித்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். இன்றைய நிலையில் இன்னும் எத்தனை தொகுதிகளில் பதிவுசெய்வதாக உத்தேசித்திருக்கிறீர்கள்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்.செல்வராஜா:** ஆரம்பத்தில் எனது தேடலின் வேகத்தை அனுமானித்து ஆறு தொகுதிகளுக்குள் ஈழத்து நூல்களை அடக்கலாம் என்று கனவு கண்டிருந்தேன். இன்று அந்த எண்ணம் மேலும் பல தொகுதிகளை நூல்தேட்டத்தில் காண முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டியுள்ளது. இன்றளவில் நூல்தேட்டம் ஏழாவது தொகுதிக்கான பதிவில் 80சதவீதமான பதிவுகளை சேகரித்துக்கொண்ட திருப்தியுடன் லண்டன் திரும்புகின்றேன். விரைவில் ஏழாவது தொகுதியும் முடிவடைந்து விடும். இன்றளவில் இலங்கையில் எத்தனை நூல்கள் வெளிவந்திருக்கின்றன என்ற உறுதியான கணிப்பினை வழங்கும் ஆவணங்கள் எதுவுமே இல்லை. அதனால் எத்தனை தொகுதிகளை நான் வெளியிடலாம் என்ற எதிர்வுகூரலை இனிமேல் மேற்கொள்ளமுடியாது. முடிந்த வரை முழுமையை நோக்கிப் பயணிப்போம் என்பதே எனது இன்றைய நிலைப்பாடு.

**பீ.எம்.புன்னியாமீன்: இலங்கையில் 1800களின் முன்னரைப் பகுதியிலிருந்து தமிழ் நூல்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இந்த ஆரம்பகால நூல்களைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றீர்களா?**

**என்.செல்வராஜா:** நூல்தேட்டம் ஈழத்துத் தமிழ் நூல்களின் முழுமையான ஆவணமாக அமையவேண்டும் என்பதே எனது அவா. அவ்வகையில் புராதன அச்சு நூல்களையும் பதிவாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளது. எனது தேடலின் போது 1895ம் ஆண்டளவில் வெளியிடப்பட்ட சில நூல்கள் அண்மையில் பேராதனையில் கிட்டியிருந்தன. இதற்கு முன்னரும் மலாயாப் பல்கலைக்கழகத்திலும் சிலநூல்கள் கிடைத்து பதிவாக்கியிருக்கிறேன். தற்போதுள்ள நூல்தேட்டம் பதிவுகள் யாவும் கண்ணால் கண்ட நூல்களையே பதிவு செய்வதாக உள்ளது. இன்று அழிவடைந்துவிட்ட நூல்களையிட்டு இலங்கை சுவடிகள் ஆவணக்காப்பகத்தில் தேடலை மேற்கொள்ளவிருக் கின்றேன். அதற்கான காலம் இன்னும் கனியவில்லை. முதலில் கைக்கெட்டும் நூல்களில் கவனம் செலுத்தி பதிவுகளை மேற்கொண்டபின் ஒரு கட்டத்தில் இந்த எட்டாக் கனிகள் பற்றிய தேடலுக்குள் நுழைவேன். இன்று எளிதில் பெறக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைப் பெற்றுக்கொள்வதிலேயே அதிக உழைப்பையும், நேரத்தினையும் ஒதுக்கவேண்டியுள்ளது.

**பீ.எம்.புன்னியாமீன்: தங்கள் முயற்சிகள் வெற்றியடையப் பிரார்த்திக்கின்றோம். அதே நேரம் சமகால எழுத்தாளர்கள் இம்முயற்சிக்கு எந்தளவு ஆதரவு நல்குகின்றனர். உங்கள் பணிக்கு அவர்களது உதவிகளை எந்தவழியில் எதிர்பார்க்கின்றீர்கள்?**

**என்.செல்வராஜா :** இன்று சமகால வெளியீடுகளை அச்சிடும் இலங்கைப் பதிப்பகங்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றேன். குமரன் பதிப்பகம், சேமமடு பொத்தகசாலை, ஞானம் பதிப்பகம், மலையக வெளியீட்டகம் ஆகியவை தாம் அச்சிடும் அல்லது வெளியிடும் நூல்களில் ஒவ்வொரு பிரதியை எனக்காக ஒதுக்கிவைத்து காலத்துக்குக் காலம் என்னிடம் சேர்ப்பிக்க உறுதியளித்துள்ளார்கள். இதற்கான ஒழுங்குகளை கொழும்பிலுள்ள எனது சகோதரியின் வாயிலாக நான் மேற் கொண்டு வருகின்றேன். சில எழுத்தாளர்கள் தபால்மூலம் நேரடி யாகவே எனக்கு லண்டனுக்கு அனுப்பிவைக்கிறார்கள். இவர்களது அக்கறையின் பயனாகவே நூல்தேட்டத்தின் தொகுப்பினை நான் நம்பிக்கையுடன் துரிதப்படுத்த முடிகின்றது. இந்தப் பணியை எனது காலத்திலேயே முடித்துவிடவேண்டும். அதற்கான பாதையை நான் உருவாக்கி, அனுபவங்களின் வாயிலாக அதனைச் செப்பனிட்டு அதில் பயணித்து வருகின்றேன். எனக்குப் பின்னர் இப்பணியைத் தொடர்பவருக்கு இலகுவாக இருக்கவேண்டும் என்பதே என் சிந்தையில் நிரந்தரப் பதிவாக உள்ளது. நூல் தேட்டம் தொகுப்பு என்பது என்னுடன் தொடங்கி என்னுடனே முடிவடையும் ஒன்றல்ல.

**பீ.எம்.புன்னியாமீன்: இலங்கை நூல்தேட்டம் தவிர மலேசிய நூல்தேட்டம், இலங்கைத் தமிழருக்கான ஆங்கில நூல் தேட்டம், சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி ஆகியவற்றையும் வெளியிட்டதாக அறிகின்றோம். இவை பற்றி சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**

**என்.செல்வராஜா:** மலேசிய, சிங்கப்பூர் தமிழர்களின் நூலியல் வரலாறு இலங்கைத் தமிழருடன் பின்னிப் பிணைந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாடுகளில் ஆரம்பகால தமிழ் நூல்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருந்த யாழ்ப்பாணத் தமிழர்களால் மேற்கொள்ளப் பட்டவையாகும். இந்நூல்களைத் தேடி அந்நாட்டுக்குச் சென்ற போதுதான் முழுத் தமிழ் உலகத்தாலும் மறக்கப்பட்டு ஓரங்கட்டப் பட்டு இருந்த மலேசிய தமிழர்களின் ஆழமான பல நூல்கள் பற்றி அறியமுடிந்தது. இவர்களது படைப்புக்கள் பற்றி இலங்கைத் தமிழர்கள் அறிந்திராதது துரதிர்ஷ்டம் என்றே கருதினேன். இதன் பயனாக 2200 பதிவுகளுடன் எழுந்ததே மலேசிய, சிங்கப்பூர் நூல்தேட்டமாகும்.

இலங்கைத் தமிழரின் பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருக்கின்றன. இலங்கை இராணுவத்தின் வரலாறு, கொழும்பு மாவட்டத்தின் வரைபடம் (Street Atlas) என்பன முதலில் தமிழராலேயே எழுதப்பட்டது. இலங்கையின் சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மேற் கொள்ளப்பட்ட முதல் ஆய்வு தமிழராலேயே மேற்கொள்ளப்பட்டது. மலாயா மான்மியம் என்ற மலாயாவின் வரலாறு கூறும் நூல் ஈழத்தமிழரால் தான் எழுதப்பட்டது. இத்தகைய பல வரலாற்று முக்கியத்துவமான நூல்களை தந்த அந்த தமிழர்களையோ, அவர்களது நூல்களையோ அண்மைக்காலத்தில் ஆங்கிலத்தில் வெளிநாடுகளில் பல்கலைக் கழக மட்டத்தில் வெளிவந்த இலங்கை தொடர்பான நூல் விபரப் பட்டியல்கள் உள்ளடக்கியிருக்காததும், முற்றிலும் சிங்களப் புத்திஜீவிகளே இலங்கையில் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள் என்ற தவறான சித்திரிப்பினையும் இலங்கை தொடர்பான சர்வதேச நூல் விபரப்பட்டியல்கள் காட்ட முயற்சிப்பது எனது கவனத்தை ஈர்த்தது. இதன் காரணமாக எழுந்ததே ஈழத் தமிழர்களின் படைப்புக்களை வெளிக்கொண்டுவரும் ஆங்கில நூல்தேட்டமாகும். இது முற்றிலும் தமிழர் அல்லாதவர்க ளுக்காக ஆங்கில மொழியில் உருவாக்கப்பட்ட ஒரு நூல்தேட்டம்.

இலங்கைத் தமிழரின் நூலியல் பாரம்பரியத்தில் முக்கிய இடம் வகிப்பது சிறப்பு மலர்களாகும். பல தமிழ் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பு மலர்களில் வந்து குறுகிய வட்டத்திற்குள் தங்கி விடுவதாலும் குறுகிய கால வரலாற்றைக் கொண்டதாலும் ஆய்வு மாணவர்களால் கண்டு கொள்ளாமல் போய்விடும். இதைத் தவிர்க்கும் நோக்குடன் தேர்ந்த 150 தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியிலான சிறப்பு மலர்களை எடுத்து அவற்றிலிருந்த 2000க்கும் அதிகமான கட்டுரைகளை கண்டறிந்து அவற்றிற்கான ஒரு வழிகாட்டியை (சுட்டி) தயாரித்திருந்தேன். இதனை நூலுருவிலும் கொண்டுவந்து பிரதான நூலகங்களுக்கு வழங்கியிருந்தேன். இது இன்றளவில் நல்லதொரு உசாத்துணை வழிகாட்டி நூலாக பயன்படுத்தப்படுவதை அறிகின்றேன். குறிப்பிட்ட சிறப்பு மலர்களுக்கும் நீண்ட ஆயுளை இப்பணி ஏற்படுத்தித் தந்துள்ளது. வாசகர்கள் அதிகம் தேடுவதால், நூலகங்களும் சிறப்பு மலர்களை உசாத்துணைப் பிரிவில் வைத்துப் பாதுகாக்கத் தொடங்கியுள்ளார்கள்.

**பீ.எம்.புன்னியாமீன்: இலங்கைக்கு வந்து கடந்த மூன்று வாரங்களாக பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தின் நூல் தேடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த நீங்கள் எதிர்வரும் வாரம் மீளவும் லண்டன் செல்லவுள்ளீர்கள். நூல்தேட்ட தேடல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக இக்காலகட்டத்தில் வேறு ஏதாவது இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டீர்களா?**

**என். செல்வராஜா:** கடந்த மூன்று வாரங்களாக பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் எனது பெரும் பொழுதை கழித்த வேளையில் தமிழ் துறையின் அழைப்பின் பேரில் பல்கலைக்கழக தமிழ்துறை மாணவர்களுடனும், விரிவுரையாளர்களுடனும் ஒரு கலந்துரையாடலில் பங்கேற்றேன். புலம்பெயர் வாழ்வியல் தொடர்பான பல கருத்துப் பரிமாற்றங்களை அந்நிகழ்வில் மேற்கொள்ள முடிந்தது. எதிர்வரும் 12ஆம் திகதி மட்டக்களப்பு செங்கலடி மகாவித்தியாலயத்தில் ஆசிரியை சுதாகரி மணிவண்ணன் எழுதிய "அரங்க அலைகள்" என்ற நாடக நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொள்ள இருக்கின்றேன். அதன் போது 11ஆம் திகதி கிழக்கிலங்கை எழுத்தாளர்களை சந்திக்கும் ஒரு நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 16ஆம் திகதி கொழும்பு தமிழ் சங்கத்தில் அறிவோர் ஒன்று கூடல் நிகழ்வில் உரையாற்றவும் இருக்கின்றேன். இவற்றை தவிர முடிந்தவரையில் எழுத்தாளர்களையும், நூல் வெளியீட்டாளர்களையும், பதிப்பகங்களையும் தொடர்பு கொண்டு நூல்தேட்டத்திற்கான நூல் சேகரிக்கும் நிகழ்ச்சிகளிலும் ஈடுபடவுள்ளேன். எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடல்கள் அனைத்தும் பெரும்பாலும் நூல்தேட்டத்தையும், அதன் தேவையையும், எமது சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதாகவே அமையும் என்று நம்புகின்றேன்.

**பீ.எம்.புன்னியாமீன்: மிக்க நன்றி திரு செல்வராஜா அவர்களே. தங்கள் பணிகள் தற்போதைய நிலையில் இலக்கிய ஆய்வாளர் களால் போதியளவில் மதிப்பீடு செய்யப்படாவிடினும் கூட நிச்சயமாக எதிர்காலத்தில் இதுவொரு விலைமதிக்க முடியாத ஒரு ஆவணமாக திகழும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இறுதியாக ஞாயிறு தினக்குரல் வாசகர்களிடம் நூல்தேட்டம் தொடர்பாக நீங்கள் ஏதாவது விசேட செய்தியை தெரிவிக்க விரும்புகின்றீர்களா?**

**என். செல்வராஜா:** ஞாயிறு தினக்குரல் வாசகர்கள் எனக்கு புதியவர்கள் அல்ல. எனது கட்டுரைகளையும், எனது பணிகள் தொடர்பான செய்திகளையும், நேர்காணல்களையும் தினக்குரல் நிறுவனம் எப்பொழுதும் வெளியிட்டு வருகின்றது. அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைய நிலையில் எம்மக்கள் மத்தியில் நூல்தேட்டம் தொகுப்பு பற்றிய செய்தி தீவிரமாக வலியுறுத்தப்பட வேண்டும். நூல் தேட்டத்தின் இருப்பை அறிந்து கொள்ளும் எந்தவொரு ஆய்வாளரும் தனது தேடலில் செலவிடும் பெரும் பங்கு நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும். இலங்கையின் படைப்பிலக்கியவாதி களும் உலகெங்கும் பரந்து வாழும் தமது சகோதர படைப்பாளிகள் என்ன செய்கின்றார்கள் என்பதை நூல்தேட்டத்தின் பதிவுகள் வாயிலாக எளிதில் அறிந்து கொள்ள முடியும். நூல்தேட்டத்தின் உருவாக்கத்தின் வெற்றி அதனைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. இந்த தொடர்பாடலை தினக்குரல் வாயிலாக எமது படைப்புலக சகோதரர்களுக்கு விடுப்பதின் வாயிலாக அவர்களது பங்களிப்பினையும் நான் எதிர்பார்க்கின்றேன். நூல்தேட்டம் என்பது செல்வராஜா என்ற ஒரு தனி மனிதனுடைய ஆய்வு நூலல்ல. அவனது புகழையோ, பொருளாதார வளத்தையோ மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப் படும் ஒரு சாதனமுமல்ல. இது அர்ப்பணிப்புடன் தனி மனிதனால் முழுச் சமூகத்துக்குமாக சுமக்கப்படும் ஒரு சிலுவை. எம்முன்னோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறை தலைமுறையாகச் செய்யத் தவறிய ஒரு வரலாற்றுப் பணியை எனது தலைமுறையில் பேசாமல் கடந்துபோக என்னால் இயலவில்லை. எனது வாழ்வை அதற்கு அர்ப்பணிக்கும் வாய்ப்பினை இறைவன் தந்திருக்கிறான். அதனை பொறுப்புடன் முடித்துவைக்கவே விரும்புகின்றேன். இது பட்டம் பதவி உயர்வுகளுக்காகவோ,சுயநல நோக்கிலோ மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியல்ல. இதனால் உலகில் அடையாளப்படுத்தப்படப் போவது படைப்பாளிகளும், அவர்களது படைப்புக்களுமேயாகும். இதை நான் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு படைப்பாளியென்ற வகையில் தமது உளமார்ந்த பங்களிப்பாக எதைச் செய்திருக் கின்றார்கள் என்ற கேள்வியை ஒவ்வொருவரது மனதிலும் தினக்குரல் வாயிலாக எழுப்ப வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

*(நன்றி: ஞாயிறு தினக்குரல், 11 ஏப்ரல் 2010: ப. 25.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துத் தமிழரின் ஆவணங்களுக்கான காப்பகம் லண்டனில் நூலகவியலாளர் என்.செல்வராஜா

(நேர்காணல்- ஜெ.கவிதா)

**உங்களைப் பற்றி எங்களுடன்..........**

இலங்கையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் தண்டுகம என்ற கிராமத்தில் 20.10.1954இல் பிறந்த நான், நீர்கொழும்பில் என் இளமைக்காலத்தின் 16 வயதுவரை வாழ்ந்தேன். நீர்கொழும்பு விவேகானந்த (விஜயரத்தினம்) மகா வித்தியாலயம், புனித மரியாள் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றேன். எனது தந்தையார் அமரர் வ.நடராஜா, நீர்கொழும்பின் பிரபல P.W.D ஓவர்சியராக பணியாற்றியவர். நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராகவும் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றியவர். நிறைந்த நூலார்வம் மிக்கவர். தந்தையாரின் மரணத்தின் பின்னர் நீர்கொழும்பையும் விட்டுப் பிரிந்து, தாயாருடன் எழுபதுகளில் யாழ்ப்பாணம் சென்று என் உயர் கல்வியைத் தொடர்ந்து, 1976இல் ஒரு நூலகராக உருவாகினேன்.

நூலகவியலாளர்களான எஸ்.எம்.கமால்தீன், கலாநிதி வே.இ.பாக்கியநாதன் ஆகிய உன்னதமான சிற்பிகளால் வடிக்கப் பெற்று இன்று ஒரு நூலகவியலாளனாக ஈழத்தமிழர்களிடையே வலம்வருகின்றேன். இலங்கையில் இருந்த வேளையில், சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியின் பாடசாலை நூலகராக 1978இல் முதல் நியமனம் பெற்றேன். பின்னர் புங்குடுதீவில் பிராந்தியத் தலைமையகத்தைக் கொண்டிருந்த சர்வோதய சிரமதான இயக்கத்தின் வடமாகாண நூலகராக 1979இல் இணைந்து 1983 வரை அங்கு முழுநேரப் பணியாளராகப் பணியாற்றினேன். இடையில் இலங்கை உள்ளூராட்சி சேவை நூலகராக —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை கிராமத்திலும் ஒருவருடகாலம் பணியாற்றினேன். இக்காலகட்டத்தில் 1982இல் ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டர் சேவையில் (UNDP-UNV) இந்தோனேஷிய நாட்டில் ஒருவருடகாலம் கிராம நூலக அமைப்பினைக் கட்டியெழுப்பும் பணிக்கு சர்வோதய இயக்கத்தின் சிபார்சின் பேரில் சென்றிருந்தேன். 1983 முதல் 1989 வரை, யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தின் ஆய்வு நூலகராக, அங்கு பேராசிரியர் கா.இந்திரபாலா இயக்குநராக இருந்தவேளையில் - பொறுப்பேற்றேன். அவ்வாண்டில் சடுதியாக அவர் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற பின்னர் அந்நிறுவனத்தின் இயங்கலுக்கான முழுப்பொறுப்பையும் படிப்படியாக ஏற்று 1989 வரை அந்நிறுவனத்தை யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பில் கொண்டு நடத்தினேன்.

விடுதலை இயக்க, அரசியல், மற்றும் போர் நெருக்கடிகள் - குறிப்பாக இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்கள், மற்றும் பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியிலும்- அந்த நிறுவனத்தை வழிநடத்திச் சென்றமை எனக்கு நிறைந்த வாழ்வியல் அனுபவத்தைத் தந்தது. பின்னர் 1989இல் கொழும்புக்கு குடும்பத்துடன் உள்ளகப் புலப்பெயர்வினை மேற்கொண்டிருந்தேன். அங்கும் அமரர் தமிழவேள் இ.க.கந்தசாமி அவர்களின் வேண்டுகோளின்பேரில், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பாரிய நூலகச் சேர்க்கைகளை ஒழுங்குபடுத்தும் பணியில் சேவை அடிப்படையில் ஈடுபடலானேன். அதேவேளையில் அமரர் சோமகாந்தனின் அழைப்பை ஏற்று இந்து சமய, கலாச்சார அலவல்கள் அமைச்சின் நூலகத்தினை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தேன். அங்கு எனது பணியினை அவதானித்த அமரர் நீலன் திருச்செல்வம் அவர்கள், எனது பணி நிறைவுற்றதும், தான் இயக்கும் International Centre for Ethnic Studies என்ற சமூக ஆய்வியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகராக முழுநேரப் பணியில் இணையஅழைப்புவிடுத்தார். அவரது அழைப்பையேற்று சில காலம் அவரது நூலகத்தின் ஒழுங்கமைப்பிலும் பணியாற்றினேன். பின்னர் 1991இல் புலம் பெயர்ந்து இங்கிலாந்துக்கு வந்து இங்கு நிரந்தர பிரஜாவுரிமைபெற்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய தபால் திணைக்களத்தின் அந்நிய நாணயப் பிரிவில் அலுவலராகப் பணியாற்றி வருகின்றேன்.

**அங்கு நூல்தேட்டம் தொகுப்பினை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

லண்டன் வரும் முன்னரே யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு "நூல்தேட்டம்" என்ற பெயரில் காலாண்டுச் சஞ்சிகையொன்றை வெளியிடும் பணியில் ஏற்கெனவே 1990இல் ஈடுபட்டிருந்தேன். ஒவ்வொரு இதழிலும் 50 நூல்களைப் பற்றிய சிறு குறிப்புரையுடன் தொகுத்து, இலங்கையில் பணியாற்றிவரும் தமிழ் நூலகர்கள் அனைவருக்கும் அவை பற்றிய தகவல் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே எனது அவாவாக இருந்தது. அவ்வாறாக நூல்தேட்டம் சஞ்சிகையின் இரண்டு இதழ்கள் வெளிவந்தன. பின்னர் நான் கொழும்புக்கு வந்தபோது, அங்கு புத்தகச் சந்தையில் காணப்பெற்ற ஈழத்துத் தமிழ் நூல்களின் எண்ணிக்கையினைப் பார்த்துப் பிரமித்து விட்டேன். அதில் பத்தில் ஒரு பங்கினைக்கூட யாழ்ப்பாணத்தில் நான் அதுவரை அறிந்திருக்கவில்லை.

இலங்கையில் தமிழ் நூலகர்களுக்கு உள்ள பெரும் சவாலாக அமைந்திருப்பது - ஈழத்தவரின் நூல்களைத் தேடிப்பெற்றுத் தமது நூலகங்களில் சேகரிப்பதாகும். ஈழத்துத் தமிழ் படைப் பாளிகள் தமது நூல்களை இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா விலும் வெளிநாடுகளிலும் வெளியிட்டு வருகிறார்கள். இவற்றைப் பற்றிய தகவல்கள் ஒருங்குசேர எங்குமே கிடைப்பதில்லை. இலங்கையின் பிரதான நூலகங்களுக்கு அவற்றை அனுப்பிவைக்க வேண்டும் என்ற அக்கறையோ, அந்நூலகங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தமிழ்ப் புத்தகசாலைகளில் அவற்றை விற்பனைக்கு வைக்கவேண்டும் என்ற ஆர்வமோ அவர்களிடம் பொதுவாகக் காணப்படுவதில்லை. கொழும்பில் எனது பார்வைக்கெட்டிய பெருந்தொகையான நூல்களின் இருப்பைப் பார்த்ததும், எனது நூல்தேட்டம் சஞ்சிகையின் வரவை நிறுத்தி அதனை பாரிய நூல்தொகுதிகளாகவே வெளியிடவேண்டும் என்று தீர்மானித்தேன். சஞ்சிகையாக வெளிவந்து குறுகிய கால வாழ்வுடன் சில நூறு நூல்களை மட்டும் பதிவுசெய்துவிட்டு ஒதுங்கிவிடாது, ஒரு காத்திரமானதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையை நோக்கியதுமான ஆவணத்தொகுப்பாக அதை உருவாக்கி எமது இனத்தின் பார்வைக்கும்- உலகத்தின் பார்வைக்கும் வைக்கவேண்டும் என்று தீர்மானித்தேன். புலம்பெயர் வாழ்வின் குடும்பப் பொருளாதார நிலையும், குடும்பத்தினரின் மேலான ஆதரவும் எனக்குச் சாதகமாயிற்று. ஒவ்வொரு தொகுதியும் 1000 ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய விரிவான தகவல்களைக் கொண்டதாக இத்தொகுப்பு பரிணாமம் பெற்றது. இன்று ஆறாவது தொகுதியில் வந்து நிற்கின்றது. அதாவது 6000 நூல்களைத் தொகுத்துவிட்ட திருப்தியுடனும், இன்னும் எத்தனையோ ஆயிரங்கள் தொகுக்கப்படவேண்டி இருக்கின்றனவே இவை என் வாழ்நாளில் சாத்தியமாகுமா என்ற ஏக்கத்துடனும் உங்கள் முன் நிற்கின்றேன்.

**ஈழத்துத் தமிழ் நூல்களுக்கு மாத்திரம் தான் நூல்தேட்டமா அல்லது அண்டை நாட்டு தமிழ் நூல்களுக்கும் அதனை விஸ்தரித்திருக்கிறீர்களா?**

நூல்தேட்டத்தின் மூன்றாவது தொகுதியின் தொகுப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில், மலேசியாவில் கோலாலம்பூரில் அமைந்திருந்த மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறையில் ஒரு தமிழ் நூலகம் இருப்பதாகவும் அங்கு பல அறியப்பெறாத ஈழத்தவர்களின் நூல்கள் பாதுகாக்கப்பெற்றிருப்பதாகவும் அறிந்து அங்கு சென்றேன். மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் தான் அமரர் தனிநாயகம் அடிகளார் பணியாற்றினார். அங்கிருந்த வேளையில்தான் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் உருவாக்கம் அவரது மனதில் கருக்கொண்டது. அத்தகைய பெருமை பெற்ற அந்த நூலகத்தில் நான் பல ஈழத்தவர்கள் மலாயா மண்ணில் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோது வெளியிட்ட தமிழ் ஆங்கில நூல்களை பார்வையிட நேர்ந்தது. அவர்களைப் பற்றி எந்தவொரு ஈழத்து இலக்கிய ஆய்வாளர்களும் முன்னர் குறிப்பிட்டிருக்கவில்லை. இதைப்பற்றி ஒரு விரிவான கட்டுரையும் எழுதியிருந்தேன். அது தினக்குரலில் தொடராக 1.5.2005 முதல் 22.5.2005 வரை நான்கு வார இதழ்களில் வெளிவந்திருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு நான் ஆய்வில் ஈடுபட்டிருந்த வேளையில் என்னைச் சந்தித்த இந்திய ஆய்வியல்துறைத் தமிழ்ப்பிரிவின் தலைவர், மற்றும் மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் போன்றோர், மலேசிய சிங்கப்பூர் தமிழ் நூல்களுக்கும் ஒரு நூல்தேட்டத் தொகுதியை ஒதுக்கும்படி கேட்டிருந்தனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று மலேசிய-சிங்கப்பூர் நூல்தேட்டம் என்ற தலைப்பில் தனியான ஒரு தொகுதியை 2000 நூல்கள் பற்றிய குறிப்புகளுடன் வெளியிட்டிருந்தேன். ஈழத்து நூல்தேட்டம் போலல்லாது, மலேசிய நூல்தேட்டம் வெளியிட நான் செலவிட்ட பணத்தொகை அந்நூல்களின் விற்பனைமூலம் ஒரு வருடத்திலேயே பெற்றுக்கொள்ள முடிந்தது. தற்போது அதன் இரண்டாவது தொகுதியின் தொகுப்புப் பணியிலும் ஈடுபட்டு வருகின்றேன்.

மலேசிய நூல்தேட்டம் போன்றே தனித்தொகுதியாக ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களின் குறிப்புரையுடன் கூடிய தொகுப்பாக ஆங்கிலமொழியிலமைந்த நூல்தேட்டம் (Noolthettam) தொகுதியொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு (2009) இறுதிக்குள் அந்நூல் உலகெங்கிலும் உள்ள நூலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதன்மூலம் ஈழத்தமிழர் பற்றிய- அவர்கள் இலங்கையின் பல்வேறு கட்டமைப்புகளுக்கு சிங்கள அறிஞர்களுடன் இணைந்து ஆற்றிய பணிகள் பற்றிய தகவல்களை தமிழர் அல்லாதவர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு நிச்சயம் ஏற்படும்.

**நூல்தேட்டம் தொகுப்பு முயற்சி பொருளாதார ரீதியில் உங்களுக்கு திருப்திகரமாக அமைந்துள்ளனவா?**

எனது அனுபவத்தின்படி ஈழத்தமிழரான எம்மவர்களிடம் ஒரு பாரிய குறைபாடு உள்ளது. கவலைக்குரிய விடயமும் அதுதான். தமக்குத் தனிப்பட்ட முறையில் அல்லாது, தமது சமூகத்துக்கு பொதுவாக நன்மை பயக்கவேண்டிய எதையும் மற்றவர்களே தமது செலவில் செய்யவேண்டும் என்று கருதுவதுடன், தாம் பார்வையாளராகவும் விமர்சகர்களாகவும் மாத்திரம் இருப்பதே வசதி என்று நினைப்பது அந்தப் பண்பாகும். இன்றுவரை எந்தவொரு தனிமனிதரோ, பொது, சமூக, அறிவியல் நிறுவனங்களோ எனது நூல்தேட்டம் தொகுப்புப் பணியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பழுவை தாம் கூட்டாக ஏற்க முன்வரவேயில்லை. குறைந்த பட்சம் ஈழத்து படைப்பாளிகளில் ஒவ்வொருவரும் நூல்தேட்டத்தின் பிரதிகளை புத்தகசாலைகளில் விலைகொடுத்து வாங்கியிருந்தால், அல்லது இலங்கையிலுள்ள தமிழ் நூலகங்கள் அனைத்தும் தமது நூலகங்களுக்காக அதனை உசாத்துணை நூலாக வாங்கிப் போட்டிருந்தால்கூட அது மறைமுகமாக எனது பணிக்கு உதவுவதாகவே அமைந்திருக்கும்.

இன்றைய யதார்த்த நிலை என்னவென்றால், நூல்தேட்டம் தொடங்கப்பெற்று ஏழு ஆண்டுகள் கழிந்த நிலையிலும், இன்றும் நூல்தேட்டத்தின் பிரதிகள் விற்பனை செய்யமுடியாமல் தேங்கிக் கிடப்பதாக பூபாலசிங்கம் பத்தகசாலை அதிபர் சிறீதர் சிங் தெரிவித்தார். அவரது கணக்கின்படி ஒவ்வொரு தொகுப்பிலும் 100 பிரதிகள் வரை கையிருப்பில் உள்ளன. இது மிக அண்மைக்கால கணக்கு. இவை உடனுக்குடன் விற்பனையாகியிருந்தால் இன்று நான் தடங்கலின்றி 10 அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான தொகுதிகளைப் பதிவுசெய்திருப்பேன். எனது இந்த ஆவணவாக்கத்தின் முக்கியத்துவம் பற்றி இந்த நேர்காணலை வாசிக்கும் ஒவ்வொருவரும் தமது மனச்சாட்சியை ஒரு தடவை கேட்டுக்கொண்டால், எனது உணர்வுகளை நிச்சயம் புரிந்துகொள்வார்கள்.

**இங்கிலாந்தில் நூலக ஆவணக் காப்பகம் ஒன்றை உருவாக்க முனைவதாக பத்திரிகைச் செய்திகள் வாயிலாக அறிகின்றோம். அவ்வாறு ஒரு ஆவணக்காப்பகத்தை அமைக்கவேண்டும் என்ற உயரிய சிந்தனை உங்களுக்கு எவ்வாறு உருவானது?**

நூல்தேட்டம் தொகுப்பு பரவலாக எம்மவரால் உள்வாங்கப்படும் போதெல்லாம், இந்த நூல்தேட்டத்தில் பதிவிலுள்ள ஆவணங்களை நீங்கள் சேர்த்து வைத்திருக்கிறீர்களா என்ற கேள்வி என்னை நோக்கி எழுப்பப்படுவது வழக்கம். அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மேலதிக முயற்சியொன்றை அண்மைக்காலத்தில் மேற்கொண்டுள்ளேன். நூல்தேட்டம் பதிவுக்காக நான் எழுத்தாளர்களிடமிருந்தும், வெளியீட்டகங்களிடமிருந்தும் அன்பளிப்பாகவும், சில சமயங்களில் விலை கொடுத்தும் பெற்றுக்கொண்ட நூல்கள் சுமார் 3000 வரையில் என்னிடம் சேர்ந்துள்ளன. அதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர தனிப்பட்டவர்களின் சேர்க்கைகளும் இங்கு லண்டனில் ஆங்காங்கே சேர்த்துவைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் ஓரிடப்படுத்தி அவற்றை ஒரு ஆவணக் காப்பகமாகவும், ஆய்வு நிறுவனமாகவும் பேணவேண்டும் என்ற ஆவல் என்னுள் மேலெழுந்ததால் எனது நண்பர்கள் சிலருடன் இணைந்து கடந்த மே 2009இல் European Tamil Documentation and Research Centre என்ற தலைப்பில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளேன். **ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வு நிறுவனமும்** என்று தமிழில் அதை அழைக்கலாம். இது பிரித்தானிய அரசின் அறக்கட்டளையாகவும் பதிவுசெய்யப்பட்டு, அதற்கு தனியான நடைமுறை வங்கிக் கணக்கொன்றும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களின் நிதி வருவாயுடன் இந்த அமைப்பினை நாம் கட்டியெழுப்ப அனுமதி சட்டபூர்வமாக கிட்டியுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் எம்மவரின் கைகளில் தான் இதன் வளர்ச்சி பெருமளவில் தங்கியுள்ளது.

இன்று ஈழத்தமிழர் தொடர்பான நூல்களும், அவர்கள் படைத்த நூல்களும் உலகெங்கிலுமிருந்து தமிழ் உள்ளிட்ட வெவ்வேறு மொழிகளில் வெளியாகியுள்ளன. இவை அனைத் தையும் இங்கு ஓரிடத்தில் பார்ப்பதென்பது மிகக் கடினம். பிரித் தானிய நூலகம், சொயாஸ் நூலகம், கேம்பிரிஜ் பல்கலைக்கழ கத்தின் ஆய்வு நூலகங்கள் என்பன ஓரளவு இலங்கை தொடர்பான நூல்களை சேகரித்துப் பாதுகாத்து வைத்திருந்தாலும் அவை இறுக்கமான அங்கத்துவக் கட்டுப்பாடுகளை விதித்திருப்பதால் பொதுவான வாசகரால் அவற்றை சுதந்திரமாகப் பார்வையிட முடிவதில்லை. இந்நிலையில் எமக்கென்றொரு ஆவணக்காப்பகம் தேவை.

மற்றது, இன்று தமிழர்கள் மாத்திரம் தான் இலங்கைத் தமிழர் பற்றியும் அவர்களின் சமயம், அரசியல், கலை, கலாச்சாரம், வரலாறு பற்றியும் அறிவதில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றில்லை. இலங்கையின் இனப்பிரச்சினை உலகளாவிய கவன ஈர்ப்பினைப்பெற்று விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில் உலகில் பலரும் இலங்கை பற்றியும் இலங்கைத்தமிழர் பற்றியும் ஆர்வம் கொண்டவராகக் காணப்படுகிறார்கள். அவர்களது ஆய்வுக்கும், அறிவுக்கும் வேண்டிய தகவல்களை புலம்பெயர்ந்து வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் வழங்கவேண்டியது முக்கியமான ஒரு பணியாகக் கருதுகின்றேன். அதனையும் நாம் வழங்காமல் இலங்கை அரசாங்கமே தானாக முன்வந்து வழங்கும்வரை காத்திருப்பதும் அதன் பின் விமர்சனம் செய்வதும் பொருத்தமானதா?

அடுத்தது இங்கு வாழும் இரண்டாம் தலைமுறைத் தமிழ்ப் பிள்ளைகள் தாம் ஐரோப்பிய நாடுகளில் அந்நாட்டுத் தேசிய மொழிகளில் கல்வி பயில்கிறார்கள். எதிர்காலத்தில் எமது இனம் பற்றிய வாழ்வியலையும் வரலாற்றையும் தமிழில் அல்லாது பிற மொழிகளில் தான் அவர்கள் பரிமாறப்போகிறார்கள். இதுவே யதார்த்தம். அவர்களின் தேவைக்காகவும் தமிழில் அல்லாத ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் தமிழர் பற்றிய ஆவணங்களைத் தேடிப் பாதுகாத்துவைத்து வழங்க வேண்டியதும் எமது கடமையாகின்றது.

இவை அனைத்தினதும் கூட்டுவெளிப்பாடாகவே இந்த ஆவணக்காப்பகத்தின் உருவாக்கம் பற்றிய சிந்தனை என்னுள் உரம்பெற்றது என்று சொல்லலாம்.

**நிறுவனமாக செய்யப்பட வேண்டிய ஒரு முயற்சியை தனித்து, இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் எப்படி உங்களால் முன்னெடுத்துச் செல்ல முடிகிறது?**

இவை அனைத்தும் விதிவசத்தாலும், எம்மவரின் பாராமுகத்தினாலும் சலிப்புற்று, அவமே காலம் கரைவதனால் வேறு வழியின்றி, தனித்துச் செய்கிறேனேயல்லாது, இது தனி ஒருவனால் செய்து முடிக்கக்கூடிய காரியமல்ல. காலக்கிரமத்தில் எம்மவர் உணர்ந்து எனக்குத் தோள் கொடுப்பார்கள் என்றும், எனக்குப் பின் அடுத்த தலைமுறையொன்று எனது பணியைத் தொடரும் என்றும் நிறைந்த நம்பிக்கைகளுடன்தான் எனது பயணத்தைத் தொடர்கின்றேன். இதனை ஒரு பாரிய சமூகப்பணிக்கான அத்திவாரமாகவே நான் கருதுகின்றேன்.

**உங்களின் இந்த முயற்சிக்கு புலம் பெயர்ந்தவர்களின் ஆதரவு எப்படி உள்ளது?**

புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் புலம்பெயர்தலுக்கும், அகதி அந்தஸ்தினைப் பெறுதலுக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வளத்துடன் வாழ்வதற்கும், தமது சமூக அந்தஸ்தினை உயர்த்திக்கொள்வதற்கும் தேவையான தேர்ந்த நடவடிக்கைகளில் மட்டுமே அக்கறை கொள்வதில் அதிகம் நாட்டம் கொண்டவர்கள். -இது எனது தனிப்பட்ட அபிப்பிராயம். பொதுவானதொரு நீண்ட காலத் திட்டத்தில்- வருவாய் ஈட்டாத ஒரு சமூக நலத்திட்டம் என்று எம்மவரிடம் எதுவுமே இல்லை. விடுதலைப் போராட்டத்திற்கு நிதி கொடுத்தால் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் புலத்திலும், புகலிடத்திலும் எல்லாம் தானாக நடக்கும் என்ற நம்பிக்கையில் பணத்தை வழங்குவதுடன் தமது கடமை முடிந்ததாகக் கருதித் திருப்திப்பட்டுக்கொள்ளும் அப்பாவிகளே அதிகம்.

புகலிடத் தமிழர்கள் கோவில்களைக் கட்டினார்கள். கடைகளை, வர்த்தக நிறுவனங்களைப் பெருக்கினார்கள், பாடசாலைகளைத் தொடங்கினார்கள். இவை அனைத்தும் ஒரு வகையில் பொருளாதார வருவாயை அடிப்படையாகக் கொண்டே கட்டி எழுப்பப்பட்டன. இவ்வமைப்புகளைச் சுற்றியுள்ளவர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையானவர்கள், புலம்பெயர் தமிழர் மத்தியில் பகிரங்கமாக பொதுமேடைகளில் தலை காட்டாதவர்கள். இதனால் ஒரு பாரிய பிரிவு மறைமுகமாக எம்மிடையே ஏற்பட்டு வருகின்றது. பொருளாதார வளம் மிக்கவர்கள் பொதுநலத் திட்டங்களிலிலிருந்து ஒதுங்கிக் கொள்கின்றார்கள். பொது நலத்திட்டங்களை முன்னெடுத்துச் செயற்பட முனைபவர்கள் பொருளாதார பலமற்று தனிமைப்படுத்தப்பட்டு கைவிடப்படுகின்றார்கள். இங்குள்ள கோயில்கள் ஒவ்வொன்றும் பல்லாயிரக் கணக்கான நிதி வருவாய் கொண்டவை. அவை இணைந்து முன்வந்தால் இந்தப் புலம்பெயர் நாடுகளில் பாரிய சாதனைகளை செய்து முடித்திருக்கலாம். ஆனாலும் இன்றுவரை எந்தவொரு கல்விசார் ஆவணக்காப்பகமோ, ஆய்வு நிறுவனமோ ஏன் தமிழ் நூலகமோ இந்தச் சமூக அமைப்புகளால் புகலிடத்தில் இன்றளவில் வளர்த்தெடுக்கப்படவில்லை. அப்படி ஒன்றிரண்டை நான் இனம்காட்டக் கூடியதாக இருந்தாலும் அது தனிப்பட்ட ஒரு சிலரின் தியாகத்தாலும், கனவாலும் கட்டியெழுப்பப்பட்டவையாகவே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இம் முயற்சிகளுக்கு ஈழத்தவர்களின் ஆதரவு போதுமானளவு கிடைக்கின்றதா?**

எனது ஆவணக்காப்பக முயற்சி பற்றி இலங்கை ஊடகங்களில் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்திருந்தேன். இதுவரை எவரும் அணுகவில்லை. இலங்கையிலிருந்து ஆவணக்காப்பகத்திற்கு பணத்தை எதிர்பார்க்கவில்லை. விலைகொடுத்து வாங்க இயலாத ஏராளமான நூல்கள், சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள், அறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் அங்கு தேங்கிக்கிடக்கின்றன. பல சேகரிப்புகள் போரினால் அழிந்துவிட்டன. இன்னும் எஞ்சியவை தனிப்பட்டவர்களிடம் சேகரிப்புகளாக இருக்கின்றன. அவற்றை உரியவர்கள் விரும்பினால் கொழும்பிலேயே ஒப்படைத்து இங்கு அவற்றை பாதுகாப்பாக அனுப்பிவைப்பதற்கான எளிய நடை முறைகளையும் குறிப்பிட்டிருந்தேன். எதிர்காலத்தில் அவற்றை இலங்கையில் பாதுகாப்பதா, லண்டனில் பாதுகாப்பதா என்ற சிக்கலான கேள்விக்கு விடைதேட முடியாதவர்களாக அவர்கள் இருக்கக்கூடும். முடிவை அவர்கள் தான் எடுக்கவேண்டும். தமது சேர்க்கைகளில் ஒரு பகுதியை- அல்லது மேலதிகப் பிரதியொன்றை **ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வு நிறுவனமும்** என்ற எமது அமைப்புக்கு அனுப்பிவைப்பதன் முக்கியத்துவத்தை அவர்கள் உணரும் பட்சத்தில் எம்முடன் தொடர்புகொண்டால் அவற்றை எமது செலவில் இங்கு எடுப்பிக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

**ஈழத்து எழுத்தாளர்கள், புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் மாத்திரமா? அல்லது ஏனைய நாட்டு எழுத்தாளர்களது நூல்களும் லண்டனில் பாதுகாக்கப்படுகின்றனவா?**

**ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகத்தில்** ஆய்வுத் தேவைக்காக பேணிப்பாதுகாப்பதற்காக இலங்கையிலும் உலக நாடுகளிலும் வெளியிடப்பட்ட ஈழத்தமிழர்களினது தமிழ் ஆங்கில நூல்கள் பாதுகாக்கப்படும். மலேசிய-சிங்கப்பூர் தமிழர்களின் நூல்களும் இங்கு சிறப்புச் சேர்க்கையாக பாதுகாக்கப்படுகின்றன. அத்துடன் இலங்கையிலும் தமிழகம் உள்ளிட்ட உலக நாடுகளிலும் ஈழத்தமிழர் பற்றி வெளிவந்த தமிழ், ஆங்கில, சிங்கள நூல்களும் பாதுகாத்து வைக்கப்படும். இவை தவிர ஈழத்துச் சஞ்சிகைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு மலர்கள், பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதி என்பனவும் பாதுகாக்கப்படுகின்றன. மின்நூல்வடிவிலும் இவை பேணப்பட்டு வருகின்றன.

**நூல்களாகவே இவை இங்கு பாதுகாக்கப்படுகின்றனவா? அல்லது இணையத்தளத்தில் மாத்திரம் பாதுகாக்கப்படுகின்றனவா?**

பெரும்பாலும் நூலுருவிலான ஆவணங்களும், ஒலி-ஒளிப்பதிவுகளும் இறுவட்டுகளும் மின்நூல் வடிவங்களும் பாதுகாக்கப்படுகின்றன. ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்கள் இறுவட்டுகளாகப் பாதுகாக்கப்படுகின்றன. துண்டுப்பிரசுரங்கள் கூட இன்றைய காலத்தில் எமது வரலாற்றுப் பதிவுகளாகிவிட்டன. அவையும் எம்மிடம் உள்ளன. இவ்விடத்தில் நூல்களை இணையத்தில் பாதுகாக்கும் நடவடிக்கையில் நேரடியாக இயங்காதபோதிலும், நூலகம் டொட் ஓர்க் (Noolaham.org) இணையத்தளத்தின் இணைய நூலகத்திற்கான முக்கிய பங்காளர்களாக **ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகம்** இயங்குகின்றது. எமது இனத்தில் ஒரு குழு மேற்கொள்ளும் மிக முக்கிமான பணியை வளர்த்தெடுக்க உதவுவது, அதைப் போன்ற மற்றொரு இணைய நூலகத்தை உருவாக்கிச் செயற்படுத்துவதைவிட சிறந்ததென்று கருதுகின்றேன்.

**இங்கு நூல்கள் என்ன முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன?**

காப்பகத்தின் நூல்கள், ஆவணங்கள் அனைத்தும் டூவி டெசிமல் பகுப்பாக்க முறையில் பகுப்பாக்கம் (Dewey decimal Classification - DDC ) செய்யப்பட்டு கணணியேற்றம் செய்யப்பட்டுள்ளன. நூல்தேட்டம் பதிவும் இம்முறையைத் தழுவியே பகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதை அவதானித்திருப்பீர்கள். இன்று தேசிய நூலகம் உள்ளிட்ட இலங்கையின் பொது நூலகங்கள் அனைத்தும் இவ்வகைப் பகுப்பு முறையினையே பின்பற்றுகின்றன. **ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகம்** ஒரு ஆவணக்காப்பகமும் ஆய்வு நிறுவனமுமேயன்றி ஒரு பொது நூலகம் அல்ல. எனவே இங்குள்ள நூல்கள் closed access முறையிலேயே பாதுகாக்கப்படும். வெளிப்படையாக தட்டுகளில் ஒழுங்கமைக்கப்பட்டு யாரும் எந்நேரமும் தமது விருப்பப்படி எடுப்பதும், வீட்டுக்கு எடுத்துச் செல்வதும் சாத்தியமாக இராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலம் பெயர் தமிழர்களின் இலக்கிய முயற்சிகள் எவ்வாறு உள்ளன?**

புகலிடங்களில் வெளிவந்த பெரும்பான்மையான கதை, கவிதை நூல்கள் போராட்டம் சார்ந்த இலக்கியங்களாகவே இருந்தன. தாம் புலம்பெயர்ந்த மண்ணின் இலக்கியங்களை தமிழுக்குக் கொண்டு வருவதும், தமிழில் தாம் எழுதிய படைப்புக்களை புகலிடத்துத் தேசிய மொழிகளில் கொண்டுவருவதும் ஆங்காங்கே இடம்பெற்றுமிருந்தன. ஆயினும் அவை முனைப்புப் பெற்றிருக்கவில்லை. முன்னைய காலங்களைப் போலல்லாது போரியல்சார்ந்த படைப்பிலக்கியங்கள் வெளிவருவது மே 2009இன் பின்னர் நின்றுவிட்டன. இப்போது தான் ஆங்காங்கே ஒன்றிரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. புலம்பெயர்ந்த தமிழர்களிடம் நான் அடிக்கடி குறிப்பிடும் விடயம் - தமது படைப்புகளை நூலுருவில் காண்பதுடன், வசதி குறைந்த ஈழத்துப் படைப்பாளிகளின் நல்ல படைப்புகளைப் பெற்றுப் பதிப்பிக்கும் பணியிலும் ஈடுபடுங்கள் என்பதாகும். எனது வேண்டுகோள் இடைக்கிடையே நிறைவேற்றப்பட்டிருப்பினும் அதில் போதிய வேகம் காணப்படவில்லை. இனிவரும் காலங்களில் அதற்கான வாய்ப்புகள் அதிகம் ஏற்படலாம். இப்பொழுது புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாம் தலைமுறையினரும் தமது படைப்பிலக்கியப் பணிகளில் முகம்காட்டுகின்றனர். இவர்களின் படைப்புக்கள் புதியதொரு அனுபவத்தை எமக்கு வழங்கும்.

**இன்றைய எழுத்தாளர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

எழுத்தாளர்களுக்கு என்ன எழுதவேண்டும், எப்படி எழுத வேண்டும் என்று ஆலோசனை கூற நான் அருகதை அற்றவன் என்பதே எனது தாழ்மையான கருத்து. நான் ஒரு படைப்பாளியோ எழுத்தாளனோ அல்ல. ஏதோ எழுதுகின்றேன். மற்றும்படி நான் ஒரு நூலகவியலாளன். நூலியல் சார்ந்த விடயங்களில் நான் தாராளமாகக் கூறலாம். குறிப்பாக ஒரு நூலை எழுதும்போது அதன் வடிவமைப்பு, விநியோகம் பற்றியும் அக்கறை செலுத் துங்கள். வெறும் வெளியீட்டு விழாக்களையும், சுற்று வட்ட நண்பர்களையும் மாத்திரமே கருத்தில் கொள்ளாதீர்கள். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் படைப்புக்களை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே தான் வைத்திருக்கும். ஊர் கடந்து, நாடுகடந்து அந்நியரின் கைகளுக்குள் அது செல்லவேண்டும். அப்போது தான் அது புதிய வாசகர்களை உங்களுக்குத் தேடித்தரும். உங்களை நாடி எவராவது வரவேண்டும் என்று எதிர்பார்த்து கைகளில் புத்தகத்துடன் காத்திருக்காதீர்கள். உங்கள் நூல்களில் ஒரு சில பிரதிகளையாவது அது வெளிவந்ததும் உங்களைப் பற்றிய குறிப்புகளுடன் சேர்த்து புகலிட ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தால், உங்கள் நூல் பற்றிய செய்தி வெளியாருக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும். புலம்பெயர் தமிழ் ஊடகம் பாரியது. உங்கள் நூல் பற்றிய விபரங்களை ஐரோப்பிய வாசகர்களிடம் என்னாலும் எடுத்துச் செல்லமுடியும். அதற்கு என்னுடனான உங்கள் தொடர்பு அவசியம்.

**ஈழத்துப் படைப்புக்களை உங்களால் உடன் பெற்றுக்கொள்ள முடிகிறதா?**

இல்லை என்பதே வேதனையான பதில். ஈழத்துப் படைப்புகள் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, அம்பாறை, மலையகம், புத்தளம், மன்னார் உள்ளிட்ட பல பிரதேசங்களிலிருந்து வெளி வருகின்றன. சிலவேளை அவை வெளிவந்த சுவட்டினைக்கூட நாம் அறிய முடிவதில்லை. ஒன்றிரண்டு நூல்கள் பற்றி பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவரும் அறிமுகச் செய்திகளை வைத்து நூலாசிரியரின் முகவரி கிடைக்குமிடத்து அவருக்கு கடிதம் எழுதுவது எனது வழக்கம். பெரும்பாலான நூல் அறிமுகங்களில் இந்தத் தொடர்பு முகவரி காணப்படுவதில்லை. இது கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையையே எம்மவர்க ளுக்குத் தோற்றுவிக்கும். ஒரு நூலை அறிமுகப்படுத்துபவரின் நோக்கம் வெறுமனே அந்நூல் பற்றித் தெரிவிப்பதுடன் மாத்திரம் நின்றுவிடுவதில்லை. அந்நூல் வாசகரின் கைகளை அடைவதற்கும் அது ஒரு பாதையை வகுத்துத் தரவேண்டும். அதற்கு ஏற்ப நூல் அறிமுகங்களில் நூலாசிரியரின் முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மின்னஞ்சல் போன்றவை அவசியம் பதிவுபெற வேண்டும்.

குமரன் புத்தக இல்லம், தாம் அச்சிடும் நூல்களில் ஒவ்வொரு பிரதியை எனக்குத் தவறாமல் அனுப்பி வைக்கிறார்கள். சேமமடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொத்தகசாலையினரும் தாம் தமது பிரசுரங்களை அனுப்புவதற்கு உடன்பட்டிருந்தார்கள். இன்னமும் காத்திருக்கிறேன். பிற வெளியீட்டகங்களும் எனது நூல்தேட்டப் பதிவுப் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். வெறும் வியாபாரிகளாக மாத்திரம் எம்மவர்கள் இருப்பது கொடுமையாகும். லாபீர், அந்தனி ஜீவா, ஞானம் ஆசிரியர்- கலாநிதி ஞானசேகரம் போன்றோரும், யாழ்ப்பாணத்திலிருந்து கவிஞர் முருகுவும், யாழ்.பல்கலைக்கழக நூலகர் கல்பனா சந்திரசேகர் போன்றோரும் தாமாக முன்வந்து நூல்களைச் சேகரித்து எனக்கு அவ்வப்போது அனுப்பிவைக்கி றார்கள். இவை தவிர நான் வீடுவீடாக, ஊர் ஊராக, நாடுகடந்து சென்று தான் நூல்கள் பற்றிய பதிவுகளை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. எனது இந்த வரிகளை வாசிக்கும் எழுத்தாளர்கள், நூல் ஆர்வலர்கள் தாம் வாசிப்பதை "ஒரு கணம்" நிறுத்தி வைத்துவிட்டுச் சற்றே சிந்தித்தால் அவர்களால் எனது தேடலுக்கு மிக எளிதில் உதவ முடியும். ஒரு தேசிய நூலகம் சட்டபூர்வமாகச் செய்யவேண்டிய பணி இது. உலகில் எங்குமே தமிழ்ப் படைப்புகள் முழுமையாகப் பதிவுபெறாத நிலையே இன்று காணப்படுகின்றது. ஈழத்தமிழரின் படைப்புக்கள் அந்த நிலையிலிருந்து விலகி முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற தீவிரஉணர்வு கொண்டவர்கள் ஒரு சிலராவது எனக்கு உதவலாம் அல்லவா?

**உங்களால் எழுதப்பட்ட நூல் முயற்சிகள்?**

ஈழத்து நூல்கள் மாத்திரமல்லாது, மலேசிய சிங்கப்பூர் நூல்கள் பற்றியும் அதன் படைப்பாளிகள் பற்றியும், நூல் வெளியீடுகள் பற்றியும், நூலகவியல் பற்றியும் ஏராளமான கட்டுரைகளை இதுவரை இலங்கையிலும் புகலிட நாடுகளின் ஊடகங்களிலும் எழுதிவந்திருக்கிறேன். பிரித்தானிய தமிழ் வானொலியான ஐ.பீ. சீயில் காலைக்கலசம் என்ற நிகழ்ச்சியில் தமிழ் இலக்கியம் மற்றும் நூல் வெளியீடுகள் பற்றி 2002ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஞாயிற்றக்கிழமைகளிலும் 15 முதல் 20 நிமிடங்கள் உரையாடி வருகின்றேன். ஞானம், சுடரொளி போன்ற சஞ்சிகைகளில் எனது பத்தி எழுத்துக்கள் இடம்பெறுகின்றன. இவை அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது பல்வேறு உலகத் தமிழ் சிற்றேடுகளிலும் இணையத்தளங்களிலும் மீள்பிரசுரம் கண்டும் உள்ளன. நூல்களைப் பொறுத்தவரையில் (இன்றைய தினமான செப்டெம்பர் 2009 வரை) 28 நூல்கள் வரையில் எழுதியிருக்கிறேன். அண்மையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கொழும்பு ஞானம் சஞ்சிகையின் வெளியீடாக "வேரோடி விழுதெறிந்து" என்ற தலைப்பில் எனது 20 கட்டுரைகள் கொண்ட நூலொன்று வெளியிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இலங்கையிலேயே அச்சிட்டு விநியோகிக்கப்படுவதால், இலங்கையின் பிரபல புத்தக நிலையங்களில் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**இந்த முயற்சிகளுக்காக நீங்கள் பெற்றுக்கொண்ட விருதுகள்...... ?**

எனது இலக்கியப் பணிக்காக 2004இல் கனேடிய நாட்டில் ஒன்ராரியோ மாநிலத்தில் தமிழர் தகவல் நிறுவனம் **"தமிழர் தகவல்"** விருதினை வழங்கிக் கௌரவித்திருந்தது. 2005இல் உடத்தலவின்னை சிந்தனை வட்டம் அமைப்பினால் திரு பீ.எம். புன்னியாமீன் அவர்கள் **"இலக்கிய வித்தகர்"** விருதினை வழங்கி கௌரவித்திருந்தார். இவை தவிர பல்வேறு நாடுகளுக்கும் நான் நூல்தேடல் பணியினை மேற்கொண்டு செல்லும் போதெல்லாம் அவ்வந்நாட்டு தமிழ் இலக்கிய அமைப்புகள் என்னை வரவேற்று உபசரித்து பாராட்டுவதுடன் நூல்களைத் தேடியும் வழங்கிவருகின்றன. சுய அறிமுகம் ஏதுமின்றிப் பெறப்படும் இந்த அங்கீகாரமே பெரிய விருதாகக் கருதுகின்றேன்.

**ஆவணக் காப்பகம் தொடர்பாக எதிர்காலத்தில் செயற்படுத்த வென எத்தகைய திட்டங்களை முன்வைத்துள்ளீர்கள்?**

**ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகம்** ஒரு தனியான கட்டடத்தில் சுதந்திரமாக செயற்படவேண்டும் என்பதே எனது கனவாகும். இதற்கு ஈழத்தமிழர்கள் நூல் ஆதரவும், புலம்பெயர் தமிழர் நிதி ஆதரவும் வழங்கினாலேயே என் கனவு மெய்ப்படும். இக்கனவு எனக்கானதொரு சுயநலக் கனவல்ல. எமது அடுத்த தலைமுறையின ருக்கு எமது தேட்டத்தை விட்டுச்செல்ல என்ன நடவடிக்கைகளை நாம் எமது காலத்தில் எடுத்தோம் என்று சுயவிமர்சனம் செய்துகொள்ளும் ஒவ்வொரு புத்திஜீவியின் கனவுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான வழி-அடிப்படையில் நிதி ஆதரவிலேயே தங்கியுள்ளது. பிரித்தானியாவில் வாழும் எம்மவர்களில் ஆகக் குறைந்தது 500 பேர் மாதம் 5 பவுண் நன்கொடை செலுத்தும் அளவுக்கு எமது அறக்கொடை அமைப்பு வளர்ந்தால், பிரித்தானிய அரசே எமக்கு பல வழிகளில் உதவும் வாய்ப்புள்ளது. இரண்டு லட்சம் ஈழத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நிலையில் பிரித்தானியாவில் இன்றைய தினத்தில் எமது வேண்டுகோள்கள் அனைத்தும் தீவிரமாக மக்களைச் சென்றடையவில்லை. இன்றைய இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் திடீர் மௌனிப்பு அவர் களை நிலைகுலையச் செய்திருக்கலாம். எதிர்காலத்தில் சிறிய அளவிலான கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து புத்திஜீவிகள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தவிருக்கிறோம். இதற்கு தமிழறிஞர் ஐ.தி.சம்பந்தன் போன்றோர் உதவி வருகின்றனர். தற்போது ஆங்கிலத்தில் வெளிவரவுள்ள நூல்தேட்டம் தொகுப் பினை ஆவணக்காப்பக வெளியீடாகவே பிரசுரிக்கவுள்ளோம். தமிழர் அல்லாதவர்களிடையே இக்காப்பகச் செயற்பாடுகள் பற்றிய தெளிவான தகவல் ஒன்றினை இந்நூல் எடுத்துச் செல்லும் என்று நம்புகின்றோம். கணிசமான நிதி வருவாயினையும் இது எமக்குப் பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம்.

**ஈழத்து எழுத்தாளர்கள் எவ்வாறு உங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்?**

தமிழ் எழுத்தாளர்கள், நூல் ஆர்வலர்கள் மற்றும் ஆவணக் காப்பகத்தின் உருவாக்கத்திற்கு ஏதோ ஒரு வகையில் உதவ முன் வருபவர்கள் என்னுடன் மின்னஞ்சல் வழியாகவோ, தொலைபேசி வழியாகவோ, கடிதம் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

(நன்றி: ஞாயிறு தினக்குரல் *27.09.2009, 04.10.2009* )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய இலக்கியம் உண்மையில் ஒடுக்கப்பட்டுள்ளது

**– என்.செல்வராஜா –**

(நேர்காணல்-ம.நவீன்)

சிங்கப்பூரில் காதல் இதழ் அறிமுக நிகழ்வின் பயணத்தில் அகிலனோடு தங்கியிருந்த பொழுதுகள் பெரும்பாலும் அறைக்குள் நடந்த உரையாடலிலேயே கழிந்தன. இலக்கியம், சமயம், இசை, சினிமா எனத் தலைப்புக்கள் மாறி கடைசியில் முழுமையைத் தேடுவதைப் பற்றி பேசத்தொடங்கினோம். "ஒரு மனிதன் கலை சார்ந்த விஷயங்களில் ஈடுபடுவது முழுமையைத் தேடித்தான்" என்றேன். அகிலன் ஏதோ சொல்ல நினைத்தார். அதற்குள் நண்பர் ஈழநாதன் அறையில் இருந்த எங்களை ஒரு முக்கிய நபரைச் சந்திப்பதற்காக அழைத்துச் சென்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் திரு என்.செல்வராஜா. "புத்தகம்" ஒவ்வொரு இனத்தின் பண்பாட்டை, சிந்தனையை, வாழ்க்கைமுறையை, வாழ்வியல் நெறியை அடுத்துவரும் தலைமுறையினருக்கு அம்பலப்படுத்தும் அல்லது எடுத்துரைக்கும் கருவி என நம்புபவர். இதனைக் கருத்தில்கொண்டு நூல்தேட்டம் எனும் தொகுப்பில் மக்கள் அறிந்த, அறியாத, வெளியீடு கண்ட இலங்கை தமிழ் எழுத்தாளர் களின் புத்தகங்களைச் சேகரித்து நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தரவுகளைத் தனது முதலாம் தொகுதி முதல் நான்காம் தொகுதி வரை பதிவுசெய்துள்ளார். நூலகப் பொறுப்பாளராகவும் நூலியலாளராகவும் அறிமுகமான திரு.செல்வராஜா, 1976இல் இலங்கையில் யாழ்ப்பாணத்தில், சுன்னாகம் எனும் பகுதியில் அமைந்துள்ள இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகப் பொறுப்பாளராகத் தன் பணியைத் தொடங்கினார். பின்பு 1983இல் எவ்லின் ரத்தினம் பல்லினப்பண்டபாட்டு ஆய்வு நூலகத்தின் தலைமை நூலகப்பொறுப்பை ஏற்றார். அதன்பின் 1990இல் இலங்கை அரசின் இந்து சமய, கலாசார அமைச்சின் ஆலோசக ராகவும், கொழும்பு இனத்துவத்துக்கான சர்வதேச நிலையத்தின் நூலகராகவும் பணியாற்றியுள்ளார். இப்போது இங்கிலாந்தின் அஞ்சல் துறையில் வெளிநாட்டு நாணயப் பிரிவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றுகின்றார்.

திரு. செல்வராஜா மிக இயல்பாகப் பேசத் தொடங்கினார்.

"இதுவரையில் நான் பிரித்தானிய நூலகம் முதல் இந்நாட்டி லுள்ள இந்திய ஆய்வியல்துறை நூலகம் வரை மலேசிய நூல்களை பதிவு எடுத்து 1583 நூல்களைப் பற்றிய விபரங்களைச் சேகரித்துள்ளேன். மலேசிய சிங்கப்பூர் புத்தகங்களை இணைத்து 2000 புத்தகங்களை நூல்தேட்டத்தில் பதிவுசெய்யலாம் என நினைக்கிறேன். ஆனால் இது முடிவு அல்ல. இந்நூல்தேட்டத்தைப் பொறுத்தவரை எவ்விடத்திலும் முடிவுகள் உருவாவதில்லை. இது ஒரு தொடர்வேலை.

ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் அறிவியல் வளத்தை அறிய அந்நாட்டில் வெளியான நூல்களைப் பற்றிய பதிவு இருக்க வேண்டும். அப்பதிவைச் செய்வது அந்நாட்டின் தேசிய நூலகம். அவற்றை National Bibliography என்கிறோம். ஆனால் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலும் தமிழ் நூல்களை அதுபோன்ற முழுமையான பதிவுக்கு உட்படுத்துவதில்லை.

அதற்கு பல தமிழ் நூல்கள் தமிழகம் போன்ற அண்டைய நாடுகளில் அச்சடிக்கப்படுவதும் காரணம். ஒரு நாட்டில் அந் நாட்டவரால் தேசியமொழியில் எழுதப்படும் ஒன்றே தேசிய நூலாகக் கருதப்படுவதும் ஒரு காரணமாகிவிடுகின்றது. அந்த வகையில் இந்தியாவிலோ, இலங்கையிலோ, மலேசியாவிலோ தமிழ் நூல்களைப் பற்றிய பதிவு முழுமையாக இல்லை.

இதை நிவர்த்திசெய்ய நான் தேர்ந்தெடுத்த முதல் நாடு இலங்கை. இலங்கைத் தமிழ்நூல்கள் ஆரம்பகாலங்களில் இலங்கையைவிட இந்தியாவில் அதிகம் அச்சடிக்கப்பட்டன. இதற்குக் காரணம் இந்தியாவிற்குள் வெளிநாடுகளில் அச்சடிக்கப் படும் புத்தகங்களை அனுமதி இல்லாமல் கொண்டுசெல்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை இருந்தது. இந்நிலையில் தங்கள் இலக்கியத்தை தமிழக எழுத்தாளர்களும் புத்திஜீவிகளும் அறியவேண்டும் என்ற ஆசை ஈழ எழுத்தாளர்களுக்கும் இருந்தது. அதற்கு வழிகாண பல புத்தகங்கள் தமிழகத்திலேயே பதிப்பிக்கப் பட்டன.

அப்படி அச்சடிக்கப்படும் நூல்கள், இந்தியாவிலிருந்து மீண்டும் தாய்நாடு உட்பட தமிழர் வாழும் அயல்நாடுகளுக்கு அனுப்பிவைக்க, பணவசதி போதாமையினால் தமிழகத்திலேயே விநியோகிக்கப்பட்டு விடுகின்றன. இதனால் ஈழத்துத் தமிழ் நூல்கள் பரவலாகப் பல நாடுகளுக்கும் செல்வதில்லை. இதுபோல மலேசியாவில் வெளியிடப்படும் ஒரு புத்தகம் உலகத் தமிழர்கள் மத்தியில் சேர்கிறதா என்பது கேள்விக்குறி. இதையெல்லாம் தவிர்க்கும் ஒரு நோக்கம்தான் தேசிய நூலகத் திட்டத்தின் பதிவு. அதில் தமிழ் நூல்களுக்கு முறையான பதிவு இல்லாததால் இலங்கையில் இருக்கின்ற ஈழத்துத் தமிழ் நூல்களை பதிவுசெய்ய 2002ஆம் ஆண்டு தீர்மானித்தேன். அதன்மூலம் ஒரு நூலின் இருப்பையாவது பலருக்கும் அறிவிக்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: ஏன் இந்த முடிவு பிறந்தது?**

**பதில்:** முறையான பதிவுகள் இல்லாததுதான் முக்கிய காரணம். ஈழத்தில் நூலகப் பொறுப்பாளராக இருந்தபொழுது, ஈழத் தமிழர்களின் புத்தகங்களே முறையாகக் கிடைக்கப்பெறுவதில்லை. இந்நாட்டில்கூட நான் சோதித்தவரையில் எனது பட்டியலில் உள்ள 1500 மலேசிய தமிழ்ப் புத்தகங்கள் இங்கே பிரதான நூலகங்களில் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் மலேசிய நூலகத்தில் இல்லாத புத்தகங்கள் உலகம் முழுவதிலும் உள்ள வெவ்வேறு நூலகங்களிலும் சில எழுத்தாளர் நண்பர்களிடமும் கிடைக்கப்பெறுகின்றன. ஆக, இவற்றை முழுமையாகத் தொகுப்பது அவசியம் எனப்பட்டது. ஈழத்தைப் பொறுத்தவரை அங்கே பொறுப்பில் உள்ளவர்கள் இதைச் செய்வது சிரமமானது. அங்குள்ள அரசியல் மற்றும் இலக்கிய இயக்கங்களின் சூழல் அப்படி. இந்நிலையில் 2002ஆம் ஆண்டு முதலாவது நூல் தேட்டத்தைக் கொண்டுவந்தேன். படிப்படியாக இரண்டாம் மூன்றாம் தொகுதிகள் என நகர்ந்து இன்று 2005இல் ஐந்தாம் தொகுதிக்கான நூல்சேகரிப்பை செய்துகொண்டிருக்கிறேன்.

**கேள்வி: எப்படி உங்கள் கவனம் மலேசிய இலக்கியப் பக்கம் திரும்பியது?**

**பதில்:** 2004ஆம் ஆண்டு பொன் முத்து என்னும் மலேசிய நண்பர் என்னை லண்டனில் சந்தித்தார். மலேசிய இலக்கியம் குறித்து அவர் எங்களிடம் நிறைய விளக்கங்கள் கொடுத்தார். மலேசியாவின் தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து அவர் கொடுத்த விளக்கங்கள் எங்களுக்கு வியப்பை அளித்தன. அந்தத் தொடர்புக்குப் பிறகு அங்குள்ள தேசம் எனும் சஞ்சிகை மூலமாக மலேசிய இலக்கிய விழா ஒன்றை ஏற்பாடு செய்து மலேசியாவி லிருந்து சிலரை அழைத்து 92 மலேசிய தமிழ் புத்தகங்களை அங்கு ஒரு கண்காட்சி கருத்தரங்கின்மூலம் அறிமுகம் செய்தோம். அந்தக் கண்காட்சியின் முடிவில் மலேசிய புத்தகங்களை விரி வாகப் பதிவுசெய்ய வேண்டும் எனத் தீர்மானித்து நான் முதன் முதலாக 2004இல் மலேசியா வந்தேன். என் திட்டம் குறித்து மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முழு சம்மதம் தெரிவித்தது. ஆனால் நான் ஊர்திரும்பியவுடன் அனைவரும் அதை மறந்து விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் புத்தகங்களை அனுப்ப வில்லை. ஒரு சில மலேசியப் படைப்பாளிகளே தங்கள் நூல்களை இடைக்கிடை அனுப்பிவந்தனர். ஆக, நான் சொன் னதைச் செய்து முடிக்க பிரிட்டிஷ் நூலகத்தில் பல மலேசிய நூல்விபரங்களை சேகரிக்கத் தொடங்கி அதன் தொடர்ச்சியாய் இங்கே வந்திருக்கிறேன். இந்தத் தொகுப்பில் சிங்கப்பூர் எழுத்தாளர்களின் தமிழ் புத்தகங்களையும் இணைத்துள்ளேன்.

**கேள்வி: எந்த குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இப்பணியை நீங்கள் தொடங்கினீர்கள்?**

**பதில்:** மலேசியாவில் இராம சுப்பையா என்பவர் 460 தமிழ் புத்தகங்களை பட்டியலாகப் பதிவுசெய்துள்ளது மட்டுமே ஒரே ஒரு அடிப்படை. உண்மையில் நல்லதொரு தொகுப்பைச் செய்ய அவர் அடிப்படை வேலைகளைத் தொடங்கி ஈடுபட்டிருக்கும் பொழுது கார் விபத்தில் 1967ஆம் ஆண்டு மாண்டுவிட்டார். அவரின் சேகரிப்பை அப்படியே எடுத்து இந்திய ஆய்வியல் துறை புத்தகமாக வெளியிட்டது. இந்தத் தொகுப்பில் எழுதப்பட்ட புத்தகம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது, புத்தகத்தின் அளவு, உள்ளடக்கம் போன்ற எதுவும் குறிப்பிடப்படவில்லை. இன்று நான் தயாரிக்கும் இந்த நூல்தேட்டம் தொகுப்பில், தலைப்பு, ஆசிரியர் பெயர், வெளியீட்டகம், எத்தனையாவது பதிப்பு, அச்சகத்தின் பெயர், எத்தனை பக்கம், விலை, அளவு, அப்புத்த கத்தின் உள்ளடக்கம் பற்றிய குறிப்பு என முழுமை பெற்றிருக்கும்.

**கேள்வி: மலேசிய புத்தகங்களை பதிவுசெய்யும் எண்ணம் எப்படி தோன்றியது?**

**பதில்:** மலேசியாவில் தமிழ் நூல்கள் அதிக அளவில் உள்ளன. மேலும் அவை இலங்கையில்கூட பரீட்சயம் ஆகாத சூழலில் உள்ளது. நூல்தேட்டத்தின் வழி, இங்குள்ள நூல்கள் இலங்கை யிலும், இந்தியாவிலும் இன்னும் பிற தமிழர்கள் வாழும் இடங்க ளிலும் பரவ அதிகம் வாய்ப்பு உண்டு. மலேசிய இலக்கியம் உண்மையில் ஒடுக்கப்பட்டுள்ளது. உங்கள் இறகுகள் நாசூக்காக நறுக்கப்பட்டுள்ளன. அதை நீங்கள் அறியமாட்டீர்கள். வெளியில் மலேசிய இலக்கியம் குறித்த தேடல் உள்ளவர்கள் தான் இதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொள்வர். உங்கள் இலக்கியங்களை வெளியிடுவதற்கான ஆர்வம் பலருக்கும் இருந்தாலும், அதை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. உங்கள் படைப்பை வெளிக் கொண்டுவர உண்மையில் நீங்கள் நம்பியிருக்கின்ற தமிழகம்தான் முன்வந்திருக்கவேண்டும்.

**கேள்வி: தனி ஒருவராகத்தான் உங்கள் பணி தொடர்கிறதா?**

**பதில்:** உண்மையைச் சொன்னால், தனியாகத்தான் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறேன். எனக்கு எந்தவகையான நிதி உதவியும் இல்லை. அதைக் கோரும் எண்ணமும் தற்போது இல்லை. அப்படி நிதி உதவியுடன் செய்யும்போது நிதி வழங்கும் நிறுவனங் களின் வரையறைகளுக்கோ தனிமனித வரையறைகளுக்கோ கட்டுப்பட நேரிடும். சமரசம் செய்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படும். இது மிகச் சங்கடமானது. நான் எனது சம்பாத்திய பணத்தில் ஓரளவை இப்பணிக்கென ஒதுக்கி, உலகம் முழுவதும் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிச் செல்கிறேன். நாளை நான் இல்லாத காலத்தில் என் பெயரைச் சொல்ல ஒரு உலகம் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நான் காதல் சஞ்சிகை வாயிலாக உங்களிடம் கேட்கும் உதவி எல்லாம் நூல்களைப் பெற்று எனக்கு வழங்குவதும், புத்தக விற்பனைக்கான ஆதரவு வழங்குவதும் தான். நிறுவனங்களும் கல்விமான்களும் இத்தொகுப்பினை வாங்கி ஆதரவளிப்பதன் மூலம் தொடர்ந்து என்னால் அடுத்தடுத்த நூல்தேட்டத்தை தொகுக்க முடிகின்றது. ஆனால் பல நிறுவனங்கள் என்னிடம் புத்தகங்களை இலவசமாகப் பெறவே முயல்கின்றன.

**கேள்வி: முதலில் நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றிக் கூறுங்களேன்?**

**பதில்:** இந்தப் பணியை நான் தொடங்கும்போது பிரபல எழுத்தா ளர்கள் என்னிடம் புத்தகசாலைகளின் (புத்தக அங்காடிகள்) நூற்பட்டியல்கள் இருக்கும்போது ஏன் இதைச் செய்கிறீர்கள் என்ற கேள்வியை எழுப்பினார்கள். புத்தகசாலைகள் தயாரிப்பது வர்த்தக நூற் பட்டியல், நான் செய்வது வரலாற்றுப்பதிவு என்ற எனது பதிலை பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் ஆரம்பக் காலத்தில் ஆதரவு என்பது பூச்சியம்தான். வர்த்தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்தில் இது செய்ய விளைந்திருந்தால் இப்பணியில் எனக்கு எப்பொழுதோ விரக்தி ஏற்பட்டிருக்கும். இது வியாபாரம் இல்லை. அவற்றையெல்லாம் மீறிய மகிழ்ச்சி எனக்குக் கிடைக்கின்றது.

சந்திப்பிற்குப் பின்னர் அறையைவிட்டு வெளிவந்தோம். அகிலன் "எனக்கென்னவோ இதுதான் முழுமையைத் தேடிய பயணம் எனப்படுகின்றது" என்றார். எனக்கும்தான் என்றேன்.

- ம.நவீன்.

நன்றி: நவீன இலக்கியத்தை நோக்கி காதல். *(மலேசியா:* Millenia Publication, No.28C, Jalan SG 3/2, Taman Sri Gombak, 68100 Batu Caves, Selangor Darul Ehsan) *காதல் 1, மலர் 10, நவம்பர் 2006. ப.4-6. (ஆசிரியர்: வீ.அ.மணிமொழி, இணை ஆசிரியர்: ம.நவீன்).*

பொது... 14 OCT 2020 மாநக... யாழ்ப்பா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பதில் ஆர்வம் இல்லாதவர்கள் எழுத்துத்துறையில் இறங்குகின்றனர்

### புலம் பெயர்வின் அவலங்கள்

(நேர்காணல்- ராம்)

நூல்தேட்டம் முதலாவது தொகுதி 2002இல் வெளிவந்தது. 2005இற்கிடையில் மூன்றாவது தொகுதியையும் என்.செல்வராஜா வெற்றிகரமாக வெளிக்கொணர்ந்துள்ளார். இது நிறுவனரீதியில் செய்யப்படவேண்டிய பணி. பெரும் பொருளும் நேரமும் கோரும் பணி. தனிமனித முயற்சியாகச் செய்துவரும் என்.செல்வராஜா, அடிப்படையில் ஒரு நூலகர். ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர். தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்தபோதும், ஆண்டு தோறும் தாயகத்துக்கு விஜயம் செய்வதுடன், நூல்கள் குறித்த தேடலுடன் இயங்குகின்றார். இப்பேட்டி வாசிப்புக் கலாசாரம் குறித்த அனுபவப் பகிர்வாக அமைகின்றது.

**கேள்வி: பிரித்தானியாவில் பல்கலாச்சார சூழலில் வாழ்கின்ற நீங்கள், ஈழத்து வாசிப்புக் கலாச்சாரம் குறித்து எத்தகைய மதிப்பீட்டைக் கொண்டிருக்கிறீர்கள்?**

**பதில்:** புலம்பெயர்ந்த ஈழத்துத் தமிழர்களின் வாசிப்புப் பழக்கத்தில் இரு வேறுபாடுகளைப் பிரதானமாகக் காண்கிறேன். ஒன்று, தமிழ்மூலம் வாசிப்பு, மற்றையது தம் புகலிட நாடுகளின் தேசியக் கல்விக்கான மொழிமூலமான வாசிப்பு. ஐரோப்பாவைப் பொறுத்தளவில் அதிகம் ஜனரஞ்சக ரீதியான போக்கே உள்ளது. உதாரணமாக, அங்கு வாழும் இளந்தலைமுறையினரின் (இரண்டாவது தலைமுறையினர்) வாசிப்பில் விஞ்ஞான புனைகதைகள் (Harry Potter, The Wheel of Time, Star Trek) போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்தொகுதி நாவல்கள் பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. மேற்சொன்ன தொடர் நூல்கள் ஐரோப்பிய மொழிகள் எல்லாவற்றிலும் பரவலாகப் பிரசுரமாகின்றன. இவை தவிர, கல்வித்துறை சார்ந்த நூல்கள், துணைப்பாடநூல்கள், என்ற வகையில் அவர்களது தெரிவுகள் அமையும் - அல்லது இணையத்தளத்தில் கணனி விளையாட்டுக்களுடன் ஐக்கியமாகி ஒரு வகையில் அதற்கு அடிமைப்பட்டு போதைக்குள்ளாகியும் விடுகிறார்கள்.

புலம்பெயர்ந்த முதற் தலைமுறையினர் தமிழில் தமது வாசிப்பைத் தொடர இரண்டாம் தலைமுறையினர் தாம் சார்ந்த நாடுகளின் போதனாமொழியில் தமது வாசிப்பைத் தொடர் கின்றார்கள்.

**கேள்வி: புலம்பெயர் தமிழர்களில் தமிழில் வாசிக்கும் பழக்க முடையவர்கள், எத்தகைய நூல்களைத் தெரிவுசெய்கிறார்கள்? அவர்கள் வாசிப்புக்கு ஒதுக்குகின்ற நேரம், ஒதுக்குகின்ற பணம், உண்மையிலேயே அவர்களுக்குப் பயனளிக்கின்றதா?**

**பதில்:** அங்கே நிலவும் ஒரு பரிதாபகரமான சூழல் என்னவென்றால், வாசிப்பதைவிட எழுதுவதே அவர்களில் ஒருசாராரின் விருப்பத்துக்குரியதாக உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் போன்ற தேசியமொழிகளில் தாம் கற்றதை அனுபவித்து உணர்ந் ததை தமிழில் தருவதாக இவ்வெழுத்துக்கள் அமைவதில்லை. ஓரளவு வாசிப்பினால் ஆர்வமேலிட்டவர்களும், குறைந்த அல்லது அறவே வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்களும் எழுதவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக எழுதுகின்றார்கள். இவர்களைக் குறிவைத்து தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் வரும் பிரசுராலயங்கள், இவர்களுடைய நூல்களை (அவர்கள் வழங்கும் பணத்திற்காக) வகைதொகையின்றி பிரசுரிக்கின்றன. அவற்றுள் அதிகமானவை கவிதைகளும், பிற படைப்பிலக்கியங்களும் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: இவ்வகை தரம் குறைந்த உற்பத்திகள் வெளிவருவதற்கான சமூகவியற் காரணிகள் எவை எனக் கருதுகின்றீர்கள்?**

**பதில்:** பிரதான காரணம், புலம்பெயர் சூழலில் உள்ள இலத்திரனியல் ஊடகங்கள், இணையத்தளங்கள், தொலைக்காட்சி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிகள் அங்குள்ள மக்களைக் கவர்வதற்காகப் போடும் நிகழ்ச்சிகளே. அந்நிகழ்ச்சிகளில் இவர்கள் நேரடியாகக் கலந்து கொள்கிறார்கள். தொலைபேசி மூலம் கவிதைகளை அவர்களால் விமர்சனமின்றி வாசிக்க முடிகின்றது. வாசிப்பவர்களில் சிலர் தாம் பிரபல்யமடைய இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்றார்கள். எனவே இவை கவர்ச்சிக்குரிய நிகழ்வுகளாக அமைந்துவிடுகின்றன. இங்கு நாம் கவனிக்கவேண்டிய விடயம், இவ்வாக்கங்கள் எடிட் செய்யப்படுவதில்லை. தரநிர்ணயம் செய்ய ஆக்கியோனுக்கு வாய்ப்புக் கொடுப்பதில்லை. ஆபத்தான இன்னொரு விடயம் இவ்வகை ஆக்கங்கள் ஒலிபரப்பானவுடன் அவை அங்கீகாரம் பெற்றவை என்ற தவறான எண்ணம் ஆக்கியோனுக்கு ஏற்பட்டு விடுகின்றது. இவையே பின்னர் அவசர அவசரமாக நூலுரு வாகின்றன. ஒருசில தமிழகப் பிரபலங்கள் இவ்வகை எழுத்துக ளுக்குத் தமது அறிமுகங்கள், அணிந்துரைகள் மூலம் போலியான அங்கீகாரத்தையும் வழங்கி, இவர்களது புத்தக வியாபாரம் தொடர்ச்சியாக நிகழச் சந்தைகளை விரிவாக்கிக் கொள்கிறார்கள்.

**கேள்வி: "தமிழில் தருதல்" என்று பார்ப்போமானால், புலம் பெயர்ந்த எழுத்துக்கள் இதற்கு எத்தகைய பங்களிப்பைச் செய்துள்ளன?**

**பதில்:** தமிழர்கள் வாழ்கின்ற தேசங்களில் மொழியியல் சார்ந்து அகராதி முயற்சிகள் பல பாதைகளைத் திறந்துவிட்டுள்ளன. ஜேர்மன் - தமிழ், டேனிஷ் - தமிழ், நொஸ்க் - தமிழ், பிரெஞ்சு - தமிழ் என்று பல அகராதித் தொகுப்பு முயற்சிகள் கைகூடி நம்பிக்கையை அளிக்கின்றன. இவற்றைத் தரும் தமிழ் அறிஞர்கள் வேறொரு தளத்தில் பயணிக்கிறார்கள்.

அண்மையில், ஒரு வானொலியின் (London Time) முயற்சியில் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழ்க் குழந்தைகள் மழலைத் தமிழில் கூறிய அவ்வந்நாட்டு, நாட்டார் கதைகள் ஒலிபரப்பா கின்றது. அது நூலாகவும் தொகுக்கப்படவுள்ளது. லண்டன் ரைம்சின் நடாமோகனின் வரவேற்கத்தக்க இம்முயற்சி புதிய திசையில் நாம் பயணிப்பதைச் சுட்டுகின்றது.

தமிழில் இருந்து அந்நிகழ்வுக்கு வந்த எழுத்துக்கள் பரவலாக உள்ளன. எனினும் மிகவும் கவலையான விடயம் புலம்பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகள் ஒருவழிப்பாதையாக உள்ளன. புலம்பெயர் எழுத்துக் கள் தமிழுக்கு ஒரு பெரும் பங்களிப்பினைச் செய்யத்தக்கதாக, அது அங்குள்ள இரண்டாம் தலைமுறையினரிலும் காத்திரமாக அமைய, தாயகத்தில் உள்ளவர்களும், பார்வையாளர்களாக மாத்திரம் இராது, தாமாக முன்வந்து அதனை இருவழிப் பயணமாக்க உழைக்க முன்வரவேண்டும்.

*(நன்றி: ஞாயிறு தினக்குரல் 11 டிசம்பர் 2005).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகவியலாளர் செல்வராஜா அவர்களுடன் இனிய நந்தவனம் ஆசிரியர் திரு.சந்திரசேகரன் அவர்கள் மேற்கொண்ட நேர்காணல்

**கேள்வி: தங்களின் நூல்தேட்டம் தொகுப்பு பற்றிச் சொல்லுங்களேன்?**

**பதில்:** ஈழத்தில் இதுவரை வெளியாகியுள்ள அனைத்துத் தமிழ் நூல்கள் பற்றிய நூலியல் விபரங்களையும் அந்நூல்கள் உள்ளடக்கிய விடயம் தொடர்பான சுருக்கக் குறிப்பொன்றையும் கொண்டதானதொரு ஆவணப்பதிவாக ஒரு தொகுப்பை கடந்த 2000ம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வருகின்றேன். என் தேடலில் அகப்பட்ட முதல் 1000 நூல்கள் பற்றிய விபரங்களைத் தொகுத்து கடந்த 2002இல் நூல்தேட்டம் என்ற பெயரில் முதலாவது தொகுப்பினை 340 பக்கங்களில் வெளியிட்டிருந்தேன். மேலும் 1000 நூல்விபரம் கொண்ட இரண்டாவது தொகுப்பினை 2004இல் வெளியிட்டிருந்தேன். அது 480 பக்கங்கள் கொண்டிருந்தது. இப்பொழுது மேலும் 1000 நூல்களின் விபரங்களைத் தொகுத்து 3வது தொகுப்பு தற்போது 500 பக்கங்களில் தயாராகியுள்ளது. இதன் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 2005 ஆகஸ்ட் 27ம் திகதி இடம்பெறவுள்ளது. 3வது தொகுதியுடன் இதுவரை ஈழத்தமிழர்களின் 3000 தமிழ் நூல்கள் விரிவான பதிவுக்குள்ளாகியுள்ளன.

**கேள்வி: இதுபோன்ற இலங்கைத் தமிழ் நூல்களுக்கான பதிவேட்டை வேறு யாரும் செய்யவில்லையா?**

**பதில்:** பொதுவாக ஒரு தேசிய இனத்தின் நூல்விபரப்பட்டியலை அவ்வினத்தின் தாய்நாட்டில் உள்ள தேசிய நூலகம் பொறுப்பேற்று காலத்துக்குக் காலம் வெளியிடுகின்றது. இந்தியாவில் இந்தியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம் இத் தேசிய நூற்பட்டியலை வெளியிடுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் கூட இது நடைமுறையில் உள்ளது. கொழும்பிலுள்ள இலங்கைத் தேசிய நூலகம் மாதாந்த வெளியீடாக இப்பட்டியல் தயாரிப்பில் ஈடுபடுகின்றது. துரதிர்ஷ்ட வசமாக இலங்கைத் தேசிய நூற்பட்டியல் ஈழத்தவரின் தமிழ் நூல்களையிட்டு அக்கறைப்படுவதில்லை. இப்பட்டியலின் ஒரு இதழில் 10-15 நூல்கள் கூட இடம்பெறுவது அபூர்வமாகின்றது.

**கேள்வி: இதற்கான காரணம் ஈழத்தமிழர்களின் பால் இலங்கை அரசு கொண்டுள்ள அரசியல் பாகுபாடு தானா?**

**பதில்:** அக்கறையின்மைக்கு அடிப்படைக் காரணம் அது தான். தேசிய நூலகத்தில் தமிழ்ப் பிரிவுக்கென்று உள்ள ஊழியர் களின் எண்ணிக்கை மிகக்குறைவு. பெரும்பாலும் முக்கிய தீர்வுகளை எடுக்கும் அதிகாரமற்ற பதவிகளைக் கொண்ட பணியாளர்கள். புதிய தமிழ் ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. விலகிச் செல்பவர்களுடைய வெற்றிடங்கள் அக்கறையுடன் நிரப்பப்படுவதில்லை. இப்போது இருப்பவர்களால் உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தவர்களின் தமிழ் நூல்களைத் தேடிப்பெறுவதென்பது இயலாத காரியமாகவுள்ளது. குறிப்பாகச் சொல்வதானால், இலங்கையில் அதுவும் கொழும்பில் வெளியாகும் தமிழ் நூல்க ளையே தேடிப்பதிவுசெய்ய முடியாத கையறுநிலையிலேயே அவ்வூழியர்கள் இருக்கிறார்கள். இந்நிலையில் உலகெங்கும் பரந்து விரிந்த ஈழத்தவரின் படைப்புக்களைத் தொகுப்பதென்பது அவர்களால் நினைத்தும் பார்க்கமுடியாது. இங்கு மற்றொரு கசப்பான விடயத்தையும் நாம் குறிப்பிடவேண்டும். எமது எழுத்தாளர்களுக்குத் தமது நூலை வெளியிடுவதில் உள்ள அக்கறை, அவை தேசிய நூலகமொன்றிலோ ஆவணக்காப்பகம் ஒன்றிலோ பாதுகாக்கப்படவேண்டும்- அது வரலாற்றுப்பதிவுக்கு உள்ளாக்கப்படவேண்டும் என்ற சிந்தனை கிடையாது. இதை எனது அனுபவத்தில் கண்டிருக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: உங்களது இந்த பாரிய நூல்தேட்டப் பணியின் நோக்கமென்ன?**

**பதில்:** தொழில் ரீதியில் இலங்கையில் நான் ஒரு நூலகராகக் கடமையாற்றியவன் என்பதாலும், எனது சமூகத்துடன் நூலியல், வெளியீட்டுத் துறை வாயிலாக ஒன்றிணைந்தவன் என்பதாலும், நான் தீவிரமாக நூலகப் பணியாற்றிய 80களின் ஆரம்பத்தில் நூலியல்துறையில் பல குறைபாடுகளை அவதானித்திருந்தேன். அந்த நாட்களில் இலங்கையில் நிகழ ஆரம்பித்த தீவிர அரசியல் மாற்றங்களினால் இலங்கையில் இருந்து எமது எழுத்தாளர்களில் பலர் நல்ல பல நூல்களை இந்தியாவிலேயே அச்சிட்டு வெளியிட்டு வந்தார்கள். அச்சுத் தொழில்நுட்பத்தில் அன்று மிகவும் முன்னேறியிருந்த தமிழகப் பதிப்பாளர்கள் ஈழத்தமிழர்களின் இந்த நிலையைத் தமக்கு நன்கு சாதகமாக்கியிருந்தார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இந்த நூல்களில் பெரும்பாலானவை ஈழத்து மண்ணையோ அதன் மக்களையோ சென்றடையவில்லை. தமிழகத்திலேயே அச்சாகி தமிழக நூலகங்களுக்கு விநியோகித்தது போக எஞ்சிய சில பிரதிகள் எழுத்தாளரின் நண்பர்களில் சிலரின் கரங்களை மட்டுமே அடைய முடிந்தது. குறிப்பாக பாதுகாப்பு, தணிக்கை போன்ற காரணிகளால் ஆரம்பகால ஈழத்துப் போர் இலக்கியங்களின் நிலையும் இதுவாகவே இருந்தது.

இந்நிலையில் நூலகர்களான எமக்கு இந்நூல்களின் வரவும் இருப்பும் பற்றிய செய்தியை வாசகர்களிடம் எடுத்துச்செல்வதுடன் அவர்களுக்காக அந்நூல்களைத் தேடிப்பெறப் பகீரதப் பிரயத்தனம் செய்யவும் வேண்டிய தேவை இருந்தது. இத்தேவைக்கான ஒரு தீர்வாகவே நூல்தேட்டம் என்ற காலாண்டு சஞ்சிகையாக இதை வெளிக்கொண்டுவரத் தொடங்கினேன். ஒவ்வொரு இதழிலும் 50 நூல்கள் என்ற ரீதியில் அண்மைக்கால நூல்களாகத் தேடி, குறிப்புரையுடன் கூடியதாக இச்சஞ்சிகையை யாழ்ப்பாணத்திலிருந்து அயோத்தி நூலக சேவைகள் என்ற அமைப்பின் வாயிலாக இரு இதழ்கள் வெளியிட்டேன். போதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு, பொருளாதார வசதிக்குறைவு, மற்றும் வட கிழக்கில் அச்சகங்களை தாக்கிய பத்திரிகைத்தாள்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத் தடை என்பன "நூல்தேட்டம்" சஞ்சிகையாக வெளிவருவதில் தடைக்கற்களாக அமைந்திருந்தன.

நான் 1990களில் புலம்பெயர்ந்து இலண்டனுக்கு வந்தபின்பும் கூட இந்த நூல்தேட்டம் பற்றிய எண்ணக்கருவை அழியவிடாது நெஞ்சில் பொத்திப் பாதுகாத்து வந்திருந்தேன். இன்று புலம்பெயர்வாழ்வியலில் இப்பதிவின் தேவையை எம்மவர்கள் மிகவும் பரந்ததொரு தளத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளதை நான் உணரமுடிகின்றது. இன்று நாம் புலம்பெயர்ந்து வந்ததால் பொருளாதாரரீதியிலும் தடங்கலின்றி வெற்றிகரமாக இதை நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது.

**கேள்வி: எந்தவகையான நூல்களை நூல்தேட்டத்துக்காகச் சேகரித்து வருகின்றீர்கள்?**

**பதில்:** இந்தக் கேள்வியில் உங்கள் அனுமதியுடன் ஒரு சிறு திருத்தத்தை மேற்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். நூல்தேட்டம் என்ற தொகுப்பின் அடிப்படை நோக்கம் ஈழத்து நூல்களைச் சேகரிப்பது அல்ல. நூல் சேகரிப்பது என்பது ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட பணியாகும். இப்பாரிய பணியை எதிர்காலத்தில் உருவாகப் போகும் ஈழத்தமிழரின் தேசிய நூலகம் நிச்சயம் மேற்கொள்ளும். தனியொருவனாக நான் மேற்கொண்டு வரும் இப்பணியானது, ஈழத்தில் வெளியானதும் ஈழத்தவரால் உலகெங்கும் வெளியிடப்பட்டதுமான தமிழ் நூல்கள் பற்றிய தகவல் பதிவினை ஒரு பல்தொகுதி நூலாக வெளியிடுவதாகும். இதன் மூலம் ஆய்வாளர்களுக்கு ஈழத்தவரின் அறிவியல் பரப்பின் விஸ்தாரத்தினை ஆக்கபூர்வமாக வெளிப் படுத்துவதே எனது பிரதான நோக்காகும். இங்கு நூல்களைச் சேகரிப்பதென்பது என் முன்னுள்ள இரண்டாம் பட்சக் கடமை யாகவே நான் கொள்கின்றேன். அதற்கான சக்தி, பொருளாதார வளம் என்பன சாதாரணக் குடும்பஸ்தனான என்னிடம் இல்லை. இனி உங்கள் கேள்விக்கான பதிலுக்கு வருகின்றேன்.

நூல்தேட்டம் தொகுப்பிற்காக ஈழத்தவரால் இதுவரை வெளியிடப்பட்ட தமிழ் நூல்களையும், ஈழம், ஈழத்தவர் தொடர் பாகப் பிறநாட்டவர் எழுதிய தமிழ் நூல்களையும் உள்ளடக்கு கின்றேன். இங்கு சஞ்சிகைகளை உள்ளடக்காது போனாலும்கூட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஈழத்தவரின் சஞ்சிகையின் சிறப்பு மலர் வெளியிடப்பட்டிருந்தால் அதனையும் பதிவுக்குள்ளாக்குகின்றேன். பிறமொழி நூல்கள் தமிழில் ஈழத்தவரால் மொழிபெயர்க்கப்பட்டால் இதுவும் எனது தொகுப்பில் உள்ளடக்கப்படும். காலத்துக்குக் காலம் வேறுபட்ட காரணங்களுக்காக வெளியிடப்படும் சிறப்பு மலர்களையும் அதன் முக்கியத்துவம் கருதிப் பதிவு செய்கின்றேன். நூல்கள் என்றதும் சிறு நூல்கள் (Pamphlets), தனிநூல்கள் (Monographs) என்றெல்லாம் குறிப்பிடுவார்கள். இவற்றில் எனது தொகுப்பில் வேறுபாடு காண முடியாது. காரணம் என்னவென்றால், ஈழத்தவரின் ஆரம்பகால நூல்கள் பல 10-12 பக்கங்களில் வெளிவந்துள்ளன. எனவே எனது தொகுப்பிற்கு அவையும் முக்கியமானவையாகக் கருதுகின்றேன்.

**கேள்வி: இலங்கைத் தமிழ் நூல்கள் பதிவு செய்தல் தவிர்ந்த வேறு இலக்கியப்பணிகள் பற்றிச் சொல்ல முடியுமா?**

**பதில்:** இலக்கியப்பணி என்று எனது பணிகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுத்துக்கொள்ள முயல்வதை நான் விரும்பவில்லை. எனது பணி பிரதானமாக நூலியல், நூலகவியல் வெளியீட்டுத்துறை சார்ந்ததாகவே அமைகின்றது. இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமான "ஐ.பீ.சீ. தமிழ்" வானொலியில் கடந்த 2002ம் ஆண்டு மே மாதம் முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலையில் "இலக்கியத்தகவல் திரட்டு" என்ற தலைப்பில் 15-20 நிமிடங்களுக்கு நூலியல் தகவல் நிகழ்ச்சியொன்றை நடத்தி வருகின்றேன். இதில் ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்களின் படைப்புக்களையும் அவர்களின் புதிய நூல்களின் வருகையையும் சர்வதேச வாசகர்களுக்கு வானலை வழியாக அறிமுகப்படுத்தி வருகின்றேன். இந்த வானொலி உரைகள் கனடாவில் வெளியாகும் தமிழர் தகவல் என்ற மாத இதழிலும் பிரசுரமாகின்றன. காலத்துக்குக்காலம் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் இவ்வுரைகள் மேலும் மீள்பிரசுரம் காண்கின்றன.

1981 ஜூன் மாதம் யாழ்ப்பாண நூலகம் எரியுண்டதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த எரிவை நினைவு கூரும் வகையில் 2001இல் "யாழ்ப்பாண நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பில் பாரிய தொகுப்பு நூலொன்றினை இலண்டனில் வெளியிட்டு வைத்திருந்தேன். இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அண்மைக் காலம் வரையிலான வரலாற்றைப் பதிவு செய்த ஆவணமாக உலகெங்கும் வலம் வந்தது. இந்நூலின் ஆங்கிலப்பதிப்பு Rising from the Ashes என்ற பெயரிலும் வெளியாகியுள்ளது.

இவை தவிர, நூலகவியல்துறையில் சில நூல்களை எழுதியும், பல நூல்களை வெளியிட்டும் உள்ளேன். 2005 நடுப்பகுதி வரை மொத்தம் 12 நூல்கள் இவ்வாறு என்னால் வெளியிடப்பட்டுள்ளன.

மலேசியாவில் வெளியான தமிழ் நூல்களின் விபரங்களைச் சேகரித்து ஒரு நூலாக்கும் பணியை கடந்த ஆண்டு ஆரம்பித்துள்ளேன். இதற்கான அடிப்படைத் தகவல்களைத் தரும் வண்ணம் அண்மைக்காலமாக 1576 நூல் விபரங்களைச் சேகரித்துள்ளேன்.

ஈழத்தவரின் தமிழ் நூல்களுக்கு அடுத்ததாக, ஈழத்தமிழர்களால் தொன்றுதொட்டு இன்று வரை எழுதப்பட்ட ஆங்கில நூல்களின் விபரத்திரட்டு ஒன்றையும் தயாரித்து வருகின்றேன். இதன் முதலாவது தொகுதியை 2007 ஆம் ஆண்டில் வெளியிடத் திட்டமிட்டுள்ளேன்.

**கேள்வி: இந்த நேர்காணல் மூலம் உலகத் தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏதேனும் சொல்ல விரும்புகின்றீர்களா?**

**பதில்:** உலகத் தமிழ் எழுத்தாளர்களுக்கல்ல, எமது ஈழத்தமிழ் எழுத்தாளர்களுக்கு, குறிப்பாகத் தாயகத்திலிருந்து வெளியேறிப் புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்காக ஒரு வேண்டுகோளை இனிய நந்தவனம் இதழின் வாயிலாக உரிமையுடனும், அன்புடனும் விடுக்க விரும்புகின்றேன். உங்கள் படைப்புக்களைப் பதிவுசெய்யும் எனது சமூகப்பணிக்கு நீங்கள் முன்வந்து உதவவேண்டும் என்பதே அந்த அன்பான வேண்டுகோளாகும். நீங்கள் தங்கியுள்ள நாட்டில் மட்டும் அறியப்பட்ட உங்கள் நூல் பற்றிய தகவல்களை உலகெங்கும் எடுத்துச் செல்லவும், நான் முயன்று வருகின்றேன். நானாக வந்து உங்கள் நூல்களை நூலகங்களில் தேடி எடுத்துப் பதிவுசெய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் வரை காத்திராமல், நீங்களாகவே முன்வந்து உங்கள் நூல் பற்றிய விபரங்களைத் தந்துதவுங்கள். முடிந்தால் நூலின் பிரதியொன்றை எனக்கு அனுப்பி வைக்கலாம். அது எனது பணியை விரைவுபடுத்தவும் பெரிதும் உதவும்.

**கேள்வி: நந்தவனம் இதழ் பற்றி உங்களின் கருத்தைச் சொல்லுங்களேன்?**

**பதில்:** இனிய நந்தவனம் தமிழக மண்ணில் இருந்து ஒரு ஈழத்தவரால் நடத்தப்படுவதாக அறிந்துள்ளேன். அண்மைக்கால இதழ்கள் சில என் கையில் கிடைத்தன. ஒரு இலக்கியத் தொடர்புப் பத்திரிகையாக இதை நீங்கள் வளர்க்க முற்படுவதை அதன் ஆக்கங்களின் போக்கை அவதானித்தபோது கணித்துக்கொள்ள முடிந்தது. இது ஒரு வரவேற்கத்தக்க முயற்சி. காலத்துக்கேற்ற முயற்சியும் கூட. கதை, கவிதை, கட்டுரைகள் என்று படைப்பிலக் கியங்களை வெளியிட இன்று உலகெல்லாம் சஞ்சிகைகளும், இணையத்தளங்களும் காத்துக்கிடக்கின்றன. இன்று தெட்டம் தெட்டமாகப் பரந்து பிரிந்து வாழும் எழுத்தாளர்களுக்கிடையே பரஸ்பரம் இலக்கியத்துக்கு அப்பால், தாம் சார்ந்த கொள்கைகளுக்கு அப்பால், எழுத்தாளர்கள் என்ற பொதுவானதொரு பதாதையின் கீழ் பேசிக்கொள்ள நிறைய விசயங்கள் உள்ளன. அவர்களிடம் நிறையச் சிந்தனைகள் உள்ளன. இவை அனைத்தையும் இனிய நந்தவனம் வெளிக்கொண்டுவர முயலலாம்.

இன்றைய எனது நேர்காணல் கூட அப்படியானதொன்று தானே? இங்கு படைப்பிலக்கியம் பற்றிப் பேசப்படவில்லை. ஆனாலும் அந்த இலக்கியத்தின் பதிவு பற்றித் தானே பேசப் படுகின்றது? இதற்குக் களம் அமைத்துக் கொடுத்த இனிய நந்தவனம் ஆசிரியர் தம்பி சந்திரசேகரன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

*(நன்றி: நவமணி, ஆசிரியர்: எம்.பி.எம்.அஸ்ஹர், Free Lanka Newspapers, 156, வைத்தியசாலை வீதி, களுபோவில, தெகிவளை. 11.09.2005: ப.16.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோவிற்கு வருகை தந்துள்ள நூல்தேட்டம் என்னும் தொடர் நூலின் ஆசிரியரான என். செல்வராஜா அவர்களுடனான ஒரு நேர்காணல்

(நேர்காணல்: கே.ஜவஹர்லால் நேரு)

ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் சொந்த நாட்டிலும் சரி புலம்பெயர்ந்து வாழும் பிற நாடுகளிலும் சரி முறையாகவும் முழுமையாகவும் பதிவு செய்யப்படாமல் இருந்து வருவது எமது இனத்திற்கு பரவலாக இழைக்கப்பட்டு வரும் அநீதிகளில் ஒன்று. எமது இனத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவலமான நிலைக்கு ஒரு தீர்வுகாணும் முகமாக திருவாளர் என். செல்வராஜா தனிமனிதனாக நின்று "நூல்தேட்டம்" என்னும் ஆவணத்தை உருவாக்கி வருகிறார். இந்த ஆவணத்தின் இரண்டாவது தொகுப்பையும் நிறைவுசெய்து, மூன்றாவது தொகுப்பினை ஆரம்பித்துள்ள நிலையில் திரு. என். செல்வராஜா கனடாவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அவருடைய விஜயத்தின் நோக்கத்தைப் பற்றியும் சேவைகளைப் பற்றியும் றொறன்ரோவாழ் தமிழ்மக்கள் விபரமாக அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஈழமுரசுப் பத்திரிகையின் சார்பில் திரு. கே. ஜவஹர்லால் நேரு அவருடன் நடத்திய நேர்காணலின் தொகுப்பு.

**கேள்வி: திரு செல்வராஜா அவர்களே, நீங்கள் றொறன்ரோவிற்கு வந்ததை இட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். எமது வாசகர்களும் உங்களுடைய விஜயத்திற்கான காரணங்களை அறிந்துகொள்ளும் முகமாக அவற்றைப் பற்றிச் சற்று விளக்கமுடியுமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்:** நன்றி. நான் ரொறன்ரோ வந்ததற்கு மூன்று காரணங்கள் உண்டு. முதலாவதாக நான் ஈழத்தமிழ் மக்களுக்கும் எமது வருங்காலச் சந்ததியினருக்கு நூல்தேட்டம் வாயிலாக ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி எனக்கு "தமிழர் தகவல்" சஞ்சிகையின் சார்பில் 2005ம் ஆண்டுக்கான விருதினை வழங்கப் போவதாகவும், "தமிழர் தகவல்" சஞ்சிகையின் பதினான்காவது ஆண்டு பூர்த்தி வைபவத்திற்கு வருகைதந்து, அந்த விருதினை ஏற்றுக் கொள்ளுமாறும் "தமிழர் தகவல்" சஞ்சிகையின் ஆசிரியரான திரு. எஸ்.திருச்செல்வம் அவர்கள் எனக்கு ஒரு அழைப்பினை விடுத்திருந்தார். இது எனக்குக் கிடைத்த ஒரு பெருமை என்றே நான் கருதுகின்றேன்.

இரண்டாவது, எனது வெளியீடான "நூல்தேட்டம்" இரண்டாவது தொகுதியை ஈழத் தமிழ்மக்கள் செறிந்து வாழும் இந்த ரொறன்ரோ நகரத்திலும் அறிமுகப்படுத்தி வெளியிட விரும்பினேன். அந்த வெளியீட்டு வைபவமானது எதிர்வரும் சனிக்கிழமை, அதாவது பெப்ரவரி 19ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஸ்காபரோவில் உள்ள Civic Centre மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதற்கு வருகைதந்து அதனைச் சிறப்பிக்குமாறு எனது அன்பார்ந்த தமிழ்நெஞ்சங்களை ஈழமுரசு வாயிலாக அழைக்கின்றேன்.

மூன்றாவது, நூல்தேட்டத்தின் மூன்றாவது தொகுதியை வெளியிடுவதற்கான முயற்சியையும் ஆரம்பித்துள்ள நான், ஸ்காபரோவிலுள்ள உலகத் தமிழர் சமூக நூலகத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததினால், அந்த நூலகத்தில் சில தேடல்களை மேற்கொள்ளலாம் எனவும் எண்ணம் கொண்டேன். அந்த நூலகத்தை வந்து பார்த்ததும் ஒருகணம் திகைத்து விட்டேன். நான் எத்தனையோ நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளேன். ஆனால் இதைப் போன்ற ஒரு ஈழத்தமிழர் சம்பந்தமான விரிவான விடயங்களைக் கொண்ட ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நூலகத்தை நான் எந்தப் புலம்பெயர்ந்த நாட்டிலும் பார்க்கவில்லை. இந்த நூலகம் ஆற்றிவரும் சேவை ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவராலும் பாராட்டப்பட வேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: தமிழர் தகவல் விழாவைப் பற்றியும், உங்களுக்கு வழங்கப் பட்ட விருதைப் பற்றியும் வாசகர்களுக்கு விளக்கமுடியுமா?**

**பதில்:** முதலில் நீங்கள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட விடயத் தைப்பற்றிக் கூறுகின்றேன். எனது சேவையைப் பாராட்டி தமிழர் தகவல் சார்பில் ஒரு கேடயமும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது. அது மட்டுமல்ல. ரொறன்ரோ மாநகரசபை மேயரிடமிருந்தும், மாகாண அரசாங்க மட்டத்தில் இருந்தும், மத்திய அரசாங்க மட்டத்தில் என்.டீ.பீ கட்சியின் தலைவரான ஜாக் லெயிட்டன் அவர்களிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழ்களும் எனக்கு வழங்கப்பட்டன. இவற்றுக்கெல்லாம் எப்படி நன்றி கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை. அடுத்தது, இந்த விழாவைப் போன்று நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தையும் நான் இது வரை எந்த நாட்டிலும் பார்க்கவில்லை. மாநகரசபை உறுப்பினர் மண்டபத்தில் வெளியார் ஒரு வைபவத்தை நடத்துவதென்றால் அது ரொறன்ரோவில் தான் சாத்தியமாகும் என்று கருதுகின்றேன். ரொறன்ரோவாழ் ஈழத் தமிழ் மக்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள். அந்த வைபவத்தின் கம்பீரத்தையும், அங்கு நிலவிய அமைதியையும், விழாவிற்கு வருகைதந்தோரின் சுய கட்டுப்பாட்டையும், நிரைப்படுத்தப்பட்ட முறைகளையும், நிகழ்ச்சியின் நேரக் கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட்ட விதத்தையும் நான் முன்பு வேறெந்த விழாவிலும் கண்டதில்லை. அத்தனை நேர்த்தியாக ஒழுங்குகளைச் செய்த திரு.திருச்செல்வத்தை நாமெல்லாம் போற்ற வேண்டும்.

**கேள்வி: சனிக்கிழமை வெளியிடப்படவுள்ள உங்களுடைய "நூல் தேட்டம்" இரண்டாம் தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் கூறமுடியுமா?**

**பதில்:** இந்த நூல் முதன்முறையாக எமது தாயகத் தலைநகரமாகிய யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் 2004ம் ஆண்டு ஜுன் மாதம் வைபவரீதியாக வெளியிடப்பட்டது. அந்த விழாவிற்குத் தலைமை தாங்கியவர் பேராசிரியர் நந்தி அவர்கள். ஆசிரியர் சொக்கன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இப்பொழுது தமிழீழத்திற்கு அடுத்ததாக பெருந்தொகையான ஈழத்தமிழ் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் நாடு கனடா என்பதால் இந்த நாட்டிலும் எனது நூலை அறிமுகம் செய்ய விரும்புகின்றேன்.

**கேள்வி: நீங்கள் இந்த பாரிய தொகுப்பு முயற்சியில் ஈடுபட்ட-தற்கான காரணத்தைக் கூறமுடியுமா?**

**பதில்:** ஒரு நாட்டில் தேசிய இனத்தினால் வெளியிடப்படும் அறிவேடுகளான நூல்களின் விபரங்களைப் பதிவுசெய்வது அந்தந்த நாடுகளின் கடமைகளில் ஒன்று. அந்தப் பணியைச் செய்வது அந்தந்த நாட்டின் தேசிய நூலகமாகும். நாகரீகம் அடைந்த சகல நாடுகளிலும் இந்தப் பட்டியல் மாத வெளியீடாக வெளியிடப்பட்டு வருகின்றது. ஸ்ரீலங்காவிலும் அப்படியான ஒரு பட்டியல் வெளியிடப்படுகின்றது. ஆனால், அவை தற்போது ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக வெளியிடப்படுவதும் இல்லை. அப்படி வெளிவரும் பிரதிகளில் ஈழத் தமிழ்மக்களின் நூல்கள் யாவும் முறையாகப் பதிவு செய்யப்படுவதும் இல்லை. அரசாங்க வெளியீடுகளுக்கும் அறிக்கைகளுக்கும் தம்மைத் தேடி வருகின்ற இலங்கைத் தமிழரின் ஒருசில நூல்களுக்குமே அந்தப் பிரசுரத்தில் பிரதான இடம் அளிக்கப்படுகின்றது. இந்தப் பெருங்குறையை நிவர்த்தி செய்வதையே எனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றேன்.

**கேள்வி: உங்களுடைய வெளியீடு ஏனைய தேசிய நூலகங்கள் வெளியிடும் நூல்பட்டியலைப் போன்றதாகவே இருக்குமா அல்லது வேறுபாடுகள் எதனையும் கொண்டுள்ளனவா என்பதைக் கூறமுடியுமா?**

**பதில்:** நான் வெளியிடும் பட்டியல் சற்று வித்தியாசமானது தான். ஏனைய தேசிய நூலகங்களினால் வெளியிடப்படும் பட்டியலில் நூல்களின் அடிப்படைத் தகவல்கள் மாத்திரமே கொடுக்கப்படு கின்றன. நான் தயாரிக்கும் பட்டியலில் வெளியிடப்படும் நூல்களைப் பற்றியும், அந்த நூல்களைப் படைத்த நூலாசிரியர் களைப் பற்றியும் நூல்களின் உள்ளடக்கம் பற்றிய தகவல்களையும் சேர்த்துள்ளேன். இரண்டாவது, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தேசிய நூலகம் அந்தந்த நாட்டில் வெளியிடப்படும் நூல்களை மாத்திரமே அதன் பட்டியலில் பதிவு செய்கின்றன. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA

நான் சர்வதேச ரீதியாக சகல ஈழத்தமிழ் ஆசிரியர்களின் (authors) ஆக்கங்களையும் எனது பட்டியலில் சேர்த்துள்ளேன். இது ஆயவாளர்களுக்கு எமது வெளியீட்டுப் பரப்பினை விரிவாகவும் முழுமையாகவும் எடுத்துக்காட்டும் என்பதால் இந்த முறையைக் கையாள்கின்றேன்.

**கேள்வி: உங்களுடைய நூல்தேட்டத்தில் பதியப்படுவது நூல்கள் மாத்திரம் தானா அல்லது சஞ்சிகைகளும் சேர்க்கப்படுகின்றனவா?**

**பதில்:** எனது நூல்தேட்ட முயற்சியின்போது நூல்களையும், ஈழத் தமிழர் சம்பந்தப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவையுமான சஞ்சிகைகளின் சிறப்பிதழ்களையும், சிறப்புமலர்களையும் உள்ளடக்கி வருகின்றேன்.

**கேள்வி: உங்களுடைய முயற்சி மூலம் எவ்வாறான நன்மைகளை ஈழத் தமிழ் மக்கள் பெறுவார்கள் என நம்புகின்றீர்கள்?**

**பதில்:** இன்றைய பதிவுகளே எதிர்கால வரலாற்றை நிர்ணயிக்கின்றன. எமது முன்னோர்கள் நேற்றைய பதிவுகளை முறையாக மேற்கொள்ளாததால் ஈழத் தமிழர்களின் தாயக வரலாறு திரிக்கப்பட்டு எமது இன்றைய அவலநிலைக்குக் காரணமாகியது. ஈழத் தமிழர்களின் நூல்களை ஒழுங்காக இன்று பதிவு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் எமது வரலாறு தெளிவாகவும், உறுதியாகவும் எழுதப்படும் சாத்தியம் ஏற்படுகின்றது.

**கேள்வி: உங்களுடைய நூல்தேட்டத்தில் பதிவு செய்யப்படும் அத்தனை நூல்களும் இப்பொழுதும் பெறக்கூடிய நிலையில் உள்ளனவா?**

**பதில்:** நான் மேற்கொண்டுள்ள பணியானது முற்றுமுழுதாக ஈழத் தமிழர்களின் ஆக்கங்களைப் பதிவுசெய்யும் முயற்சியாகும். இதுவொரு வர்த்தக நூற்பட்டியல் அல்ல. உலகெங்கிலும் பரந்து வாழும் எம்மவர்களின் தனிப்பட்ட சேகரிப்புகளில் இருந்தும், நூலகங்களின் சேர்க்கைகளில் இருந்தும் நான் நேரடியாகப் பார்வையிட்ட நூல்களை மாத்திரமே பதிவுசெய்கின்றேன். இவ்வகையில் இந்நூல்கள் உலகில் இன்று ஏதோவொரு மூலையில் பேணப்பட்டு வருவது உறுதியாகின்றது. வழக்கொழிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களின் மீள்பதிப்புக்களைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவையும் நூல்தேட்டத்தில் சேர்க்கப்படுகின்றன. இந்நிலையில் இந்நூல்களைத் தேடிப்பெற்று நூலகங்களில் பாதுகாக்கும் வழிமுறைகளைச் செய்வது ஒவ்வொரு புத்திஜீவியினதும் கடமை என்று நான் கருதுகின்றேன். எனது நூல்தேட்டம் இத்தகைய ஒரு தேடலுக்கு அடிப்படையான உசாத்துணைச் சாதனமாக எதிர்காலத்தில் அமையும்.

**கேள்வி: நூல்தேட்டத்தில் பதியப்பட்ட நூல்களை புலம்பெயர்ந்த மக்கள் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்?**

**பதில்:** உங்களுடைய கேள்விக்கான பதிலில் தான் ஈழத்துத் தமிழ் தேசிய நூலகத்தின் கட்டமைப்பிற்கான தேவை தொக்கி நிற்கின்றது என்று கருதுகின்றேன். புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழருக்கான தேசிய நூலக வலையமைப்பு (Eelam Tamil National Library Network) ஒன்றின் தேவை இன்று பரவலாக உணரப்பட்டு வருகின்றது. ஈழத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் சகல நாடுகளிலும் ஈழத் தமிழ்த் தேசிய நூலகப் பிரிவொன்று உருவாக்கப் படல் வேண்டும். அந்தந்த நாடுகளில் வெளியாகும் ஈழத் தமிழர்களின் நூல்களும், ஈழத் தமிழர் தொடர்பான நூல்களும் அங்கு எழுதாச் சட்டமாகத் தேடிப் பெற்றுப் பாதுகாக்கப்பட வேண்டும். அந்தந்த நாட்டில் வதியும் எழுத்தாளர்களும், தனிப்பட்ட சேகரிப்பாளர்களும், புத்திஜீவிகளும் தத்தமக்கிடையே கொள்கை, கருத்து வேறுபாடுகள் கொண்டிருப்பினும், ஒரு தேசிய நூலக வலைஅமைப்பு என்ற கட்டமைப்பின் கீழ், அந்தந்த நாட்டின் ஈழத் தமிழ்த் தேசிய நூலக வலையமைப்பில் இணைந்துகொள்ள வேண்டும். இதன்மூலமே உலகின் எந்தவொரு பாகத்திலும் இருக்கும் வாசகருக்கு அந்த நூல் இருக்கும் இடத்தை அறிவிக்கவும் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**கேள்வி: இப்பொழுது வேறு என்ன முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கூறமுடியுமா?**

**பதில்:** நூல்தேட்டத்தின் மூன்றாவது தொகுதியைத் தொகுக்கும் பணியில் இப்பொழுது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். அந்தப் பணியும் முடிவுபெறும் தறுவாயில் இருக்கின்றது. அந்த நூலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி சனிக் கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந்தத் தொகுப்பிற்கான நூல்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை ஈழமுரசு வாசகர்கள் தந்துதவலாம்.

**நன்றி: நீங்கள் ஆற்றிவரும் சேவைக்கு கனடாவில் உள்ள சகல ஈழத் தமிழ் மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன். சனிக்கிழமை நடைபெறவுள்ள உங்களது வெளி யீட்டுவிழா வெற்றிபெறவேண்டும் என்பதற்கும், உங்களுடைய பணி தொடரவேண்டும் என்பதற்கும் எங்களுடைய மனப்பூர்வ மான ஆசிகள்.**

**திரு.செல்வராஜா :** என்னை அழைத்துக் கௌரவித்த திரு திருச் செல்வம் அவர்களுக்கும், அவரது தமிழர் தகவல் அமைப்பின ருக்கும், எனது தேடல்களுக்கு பெரும் உதவியாக இருந்த உலகத் தமிழர் சமூக நூலகத்தின் நூலகரான திரு. த.நடராசா அவர்க ளுக்கும், தனது சிரமத்தைப் பொருட்படுத்தாது ஈழமுரசுப் பத்திரிகைக்காக என்னை நேரில் பேட்டிகண்ட உங்களுக்கும், ரொறன்ரோவாழ் ஈழத் தமிழ் மக்கள் அனைவருக்கும், ஈழமுரசுப் பத்திரிகைக்கும் அதன் ஆசிரியரான ரஞ்சன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி, வணக்கம்.

*(நன்றி: ஈழமுரசு, முரசு 6, இதழ் 305: பெப்ரவரி 16 முதல் பெப்ரவரி 22 2005வரை: ப.45).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறுகளைப் பதிவுசெய்ய வேண்டும் நூல் தொகுப்பாளர் செல்வராஜா கூறுகின்றார்

(நேர்காணல்: இராஜேந்திரன், தலைவர், மலேசிய எழுத்தாளர் சங்கம், பிரதம நிருபர், மலேசிய நண்பன்)

தங்களது வரலாற்றை முறையாகப் பதிவுசெய்து வைப்பதில் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் அக்கறை காட்டுவதில்லை. இலங்கையில் நேர்ந்துவிட்ட இதுபோன்ற தவறினால்தான் தாய்மண்ணைவிட்டுத் தமிழர்கள் புலம்பெயர நேரிட்டது என்று லண்டனில் வசிக்கும் நூல் தொகுப்பாளர் திரு. என். செல்வராஜா கூறுகின்றார்.

தங்களது தோற்றம், வரவு, வாழ்க்கை ஆகியவற்றை தமிழர்கள் பதிவுசெய்து வைக்கவில்லை. கற்பனை கலந்த இலக்கியங்களைத் தான் நாம் நமது வரலாறாகக் கூறிக்கொள்ள முடிகின்றது. ஆதாரப் பூர்வமான தகவல்களோடு நமது வரலாறு முழுமையாக பதிவு செய்யப்படவில்லை என்பது சோகமான உண்மை என்றார் அவர்.

இலங்கையில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் நூல்களை ஆவணப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, ஒரு பகுதியில் வெற்றியடைந்துள்ள திரு செல்வராஜா அப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்ப ணித்துக் கொண்டுள்ளார்.

மலேசிய மண்ணில் வெளியான ஈழத்துத் தமிழர்களின் நூல்களை ஆவணப்படுத்த வேண்டும் என்கிற நோக்கோடு இங்கு வருகை புரிந்துள்ள திரு செல்வராஜாவுடன் ஒரு நேர்காணல் நடத்தப்பட்டது. இலங்கையில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் நூல்களை அவர் ஆவணப்படுத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள "நூல்தேட்டம் 1" என்ற முதல் நூலில் ஆயிரம் புத்தகங்களின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணியை அவர் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். இலங்கையில் வெளிவந்த இன்னும் ஏறக்குறைய ஆறாயிரம் புத்தகங்களின் குறிப்புகளை ஆறு புத்தகங்களாகத் தொகுக்க முயற்சித்து வருகிறார்.

இந்தப் பணிகளுக்கிடையே மலேசியப் படைப்பாளிகளின் நூல்களையும் ஆவணப்படுத்த அவர் முன்வந்திருக்கிறார். கடந்தாண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி லண்டனில் மலேசியத் தமிழ் படைப்புக்களின் கண்காட்சியை வெகுச் சிறப்பாக நடத்தி, ஐரோப்பாவில் வாழும் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

லண்டனில் அரச தபால்துறையில் அந்நிய நாணயப் பிரிவில் பணியாற்றும் திரு செல்வராஜா, யாழ்ப்பாண பொது நூலகத்தின் ஐரோப்பிய நாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் சேவை யாற்றுகின்றார்.

ஐரோப்பாவில் வாழும் தமிழர்களின் நூல்களையும் யாழ்ப்பாண நூலகத்திற்கு அனுப்பி வைப்பது, ஐரோப்பிய நாடுகளில் யாழ்ப்பாண நூலகம் பற்றிய தகவல்களை எடுத்துக் கூறுவது போன்ற பணிகளையும் அவர் செய்து வருகின்றார்.

தொண்டூழியச் சேவையாகவே இதனைச் செய்துவரும் திரு செல்வராஜா, நூல்களை ஆவணப்படுத்தும் பணியில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறார்.

தேசிய நிலநிதிக் கூட்டுறவுச்சங்க தலைமை நிர்வாகி டத்தோ சகாதேவன், மலேசியத் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் திரு. அரி கிருஷ்ணன் ஆகியோரின் விருந்தினராக இங்கு தங்கியிருக்கும் செல்வராஜாவுடன் நடத்தப்பட்ட நேர்காணலின் மேல்விபரம் வருமாறு:

**கேள்வி: கதைகளை, கட்டுரை-கவிதைகளைத் தொகுத்து நூ லாக்குவது வழக்கம். நூல்களை ஆவணப்படுத்தும் ஆர்வம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

**செல்வராஜா:** பொதுவாகவே நம் தமிழர்களுக்கு வரலாற்றைப் பதிவுசெய்வதில் அக்கறை இல்லை. நமது இலக்கியம் பற்றி தெளிவான குறிப்புகள் இல்லை. நாம் யார் என்பதை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற நாடுகளில் வாழும் மற்றவர்கள் தெரிந்து கொள்ளவும், நாளைய தலைமுறைகளுக்கும், நாம் பதிவுசெய்து வைக்கும் குறிப்புகள் தான் உதவும். நாளைய தலைமுறைக்கு நம்மை அடையாளம் காட்டப் போவதும் அத்தகைய பதிவுகள் தான்.

இன்று உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்கிறார்கள். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலக்கியம் படைத்து வருகின்றனர். ஆனால், அவற்றைப் பற்றிய அறிமுகம் இல்லாமல் இருக்கின்றது. எந்தெந்தத் துறையில் நம்மவர்கள் கால் பதித்துள்ளனர் என்பதை உலகம் அறியவேண்டும். நமது வரலாற்றைப் பதிவு செய்வதில் பலவீனமாக இருக்கும் நாம், பதிவு செய்ததை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்துவதிலும் சக்தியற்றவர்களாகிவிடக் கூடாது. உலகத்தில் எந்த மூலையில் தமிழ் இலக்கியம் படைக்கப்பட்டாலும் அதனை வரவேற்று உரிய அங்கீகாரம் வழங்கவேண்டிய கடப்பாடு தமிழ்நாட்டிற்கு உண்டு. ஆனால் இது பற்றியெல்லாம் தமிழ் நாட்டிற்கு அக்கறை கிடையாது.

தமிழ்நாட்டில் வெளிவரும் குப்பைகளைக் கூட தேடித் தேடி வாசிக்கிறோம். இலங்கையிலும் மலேசியாவிலும் தமிழ்நாட்டுப் படைப்புகளுக்கு மிகப்பெரிய தேடல் உண்டு. ஆனால் மாறாக, இலங்கையிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் வரும் இலக்கியங்களை தமிழகம் கண்டுகொள்வதில்லை. யார் கைதூக்கிவிட வேண்டுமோ அவர்கள் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள்.

இலங்கை இலக்கியம் அண்டை அயலவர்களால் கண்டு கொள்ளப்படுவதில்லை என்ற ஆதங்கம் தான் எனக்கு இருந்தது. மலேசியாவில் படைக்கப்படும் இலக்கியங்கள் பற்றியும் இங்கு இலக்கிய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றியும் அண்மையில் தான் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கை இலக்கியங்களுக்கு ஏற்படும் நிலைதான் மலேசிய இலக்கியங்களுக்கும் ஏறபட்டிருக்கின்றது என்பதை அனுபவ வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது.

நமது ஈழத்து இலக்கியங்களை உலக மக்களுக்கு அறிமுகப் படுத்த புகலிடத்தில் பத்திரிகைகள். சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் என்று பல்வேறு ஊடகங்கள் உருவாகிவிட்டன. இன்றைக்கு புலம்பெயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் என்று தனி இலக்கியம் உருவாகி விட்டது. எனவே யாரையும் எதிர்பார்க்காமல் நாமாகவே அந்த முயற்சியில் சுதந்திர மாக ஈடுபட முடியும்.

என்னைப் பொறுத்தவரையில் இதுவரை பதிப்பிக்கப்பட்ட ஈழத்து நூல்களை பட்டியலிடவேண்டும் என்பது தான் குறிக்கோள். இதுபற்றிய தொகுப்புக்கள் உலகநாடுகளில் தமிழியல் நூலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். புத்தகத் தலைப்பு, படைப்பாளரின் பெயர், வெளியீட்டு விபரம், நூலின் பக்கங்கள், அளவு போன்ற பௌதிக அம்சங்கள், நூலின் உள்ள டக்கம், ஆகியவற்றைத் தொகுத்து தனி நூலாக வெளியிடுவதில் கவனம் செலுத்தி வருகின்றேன்.

மலேசியாவில் கூட இந்தத் தலைப்புகளில் நூல்கள் பதிப்பிக் கப்பட்டுள்ளன என்பதை உலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். அது ஒரு பதிவாக இருக்கும். அதன்பின்னர் தேவைப்படுபவர்கள் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு நூலைப் பெற்றக்கொள்ள முடியும். ஆய்வுத் தேவைகளுக்கும் அத் தகவல்கள் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். இன்று மலேசியாவில் எத்தனை தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளனவென்று புள்ளிவிபரம் எவருக்கும் தெரிந்திராது என்றே கருதுகின்றேன்.

**கேள்வி: மலேசிய எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

**செல்வராஜா:** சென்றாண்டு லண்டனில் நடத்தப்பட்ட மலேசிய நூல்களுக்கான கண்காட்சிக்கு ஏறக்குறைய 97 நூல்கள் இங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. எனது தனிப்பட்ட முயற்சியில் இங்குவந்து இதுவரை 700 மலேசிய தமிழ் நூல்களைப் பார்த்தி ருக்கிறேன்.

தமிழ்நாட்டுத் தாக்கம் இல்லாமல் தனித்த இலக்கியம் படைக்க வேண்டும் என்பதில் இப்பொழுது இங்கே அதிகமாகக் கவனம் செலுத்தப்படுவதை உணர்கின்றேன். உங்கள் தொடக்க கால இலக்கியங்களில் தமிழ்நாடு-இலங்கை ஆகிய நாட்டுமக்களின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. இன்று நிலைமை மாறியுள்ளது. மலேசிய எழுத்தாளர்களிடையே மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: இங்கு யாழ்ப்பாணத் தமிழர்களால் படைக்கப்பட்டி ருக்கின்ற இலக்கியங்களைப் பார்த்திருக்கிறீர்களா? அதுபற்றிய உங்கள் பார்வை என்ன?**

**செல்வராஜா:** மிகப்பெரிய உண்மை ஒன்றைச் சொல்லவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து தமிழர்கள் முதன்முதலாக புலம்பெயர்ந்தது மலேசியாவிற்குத் தான். ஆங்கிலேயர்களுடன் தொடர்பு வைத்தி ருந்த ஆங்கிலம் கற்றிருந்த யாழ்ப்பாணத்தவர்கள் சிலர் இங்கே வந்து தொழில்புரிந்து செல்வந்தர்களாகத் திரும்பியுள்ளனர். அதன்பின்னர் அண்மைக்காலத்தில் நேர்ந்த புலம்பெயர்வு யுத்தத் தால் நடந்தது. ஆனால், மலேசியாவிற்கு வந்தவர்கள் வேலை செய்யவே வந்தார்கள். அப்படி வந்தவர்கள் இங்கே இலக்கியம் படைத்திருக்கிறார்கள். இங்கு அவர்கள் படைத்த இலக்கியம், இலங்கைக்கு வரவில்லை. தமிழகத்திற்கும் போகவில்லை. இங்கு வேலை செய்துவிட்டு இலங்கைக்குத் திரும்பிய பின்னர் சிலர் இலங்கையிலும் நாவல் எழுதியுள்ளனர். ஈழத்து இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான நாவலாசிரியர் அ.நாகலிங்கம் என் பவர் "மலாயன் பென்சனியராக" அடையாளம் காணப்பட்டவர்.

"பென்சனியர்" என்பது இங்கு மலேசியாவில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்கள். (பென்ஷன் வாங்குபவர்கள்). மலேசியாவில் வேலை செய்து பென்ஷன் பெறும் நிலையில் உள்ளவர்கள். இவர்கள் அங்கு யாழ்ப்பாணத்தில் ஒரு தனி சமூகம் போலவே கருதப்பட்டனர்.

நல்ல தரமான கல்வீடு, வசதியான வாழ்க்கை என்று அவர்கள் தனியாகவே அடையாளம் காணப்பட்டனர். இன்னமும் அவர் களது வழிவந்தவர்களும் அப்படியே அழைக்கப் படுகின்றனர்.

அ.நாகலிங்கம் என்பவர் 1927 ஆம் ஆண்டு தனது 26 வயதில் "சாம்பசிவம்-ஞானாமிர்தம் அல்லது நன்னெறிக் களஞ்சியம்" என்னும் நாவலை எழுதி வெளியிட்டுள்ளார். 343 பக்கங்களைக் கொண்ட அந்த நாவலின் நாயகன், இலங்கையில் இருந்து சிங்கப்பூருக்குச் சென்றதைப் போலவும், அரசாங்க உத்தியோகத்தில் இருந்ததாகவும் கதை பின்னப்பட்டிருக்கிறது. மலாயாவில் பிறக்க வில்லை என்ற காரணத்தை வைத்து வேலையிலிருந்து நீக்கப்படுவ தாகவும் பென்சன் பணத்தைப் பெற்றுக்கொண்டு நாடுதிரும்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதாகவும் கதை நகர்கின்றது. இக்கதையில் மலேசியப் புலம்பெயர்வு மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கதாபாத்திரம் கொள்ளும் சமூகப் பார்வையும் வெளிப் பட்டிருந்தது.

இப்படிப் பல படைப்புக்கள் மலேசியப் பின்னணியை வைத்துப் படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை மலேசிய மண்ணை விட்டு வெளியே போகவில்லை. அதே போல் இந்த மண்ணிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழர்கள் இலக்கியம் படைத்து அவை தொகுப்பாகவும் வந்திருக்கலாம். அவையும் இந்த மண்ணைவிட்டு வெளியே தெரியவரவில்லை. அது போன்ற விபரங்களையும் திரட்டும் நோக்கோடு தான் இங்கு வந்திருக் கின்றேன்.

**கேள்வி: யாழ்ப்பாண இலக்கிய வரலாற்றுக்கும் மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கும் ஓர் ஒப்பீடு செய்யமுடியுமா?**

**செல்வராஜா:** "யாழ்ப்பாணம்" என்று நீங்கள் குறிப்பிடும்போது அது ஈழத்தமிழர்களை மொத்தமாகக் கருதுவதாக எண்ணுகின்றேன். நாவலைப் பொறுத்தவரையில் இலங்கை மண்ணில் முதல்நாவல் 1885ம் ஆண்டளவில் வெளிவந்துள்ளதாகக் கூறுகிறார்கள். "அசன்பேயின் கதை" என்ற இந்நாவல் முஹம்மது காசிம் சித்தி லெவ்வை அவர்களால் எழுதப்பட்டு கொழும்பு: முஸ்லீம் நேசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது. மலேசியாவில் 12 ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னரே 1897இல் முதல் நாவல் வெளி வந்துள்ளது.

ஆக, கால அளவில் பெரிய மாறுபாடுகள் இல்லை. ஆனால், அந்தக் காலத்தில் தமிழகத்தில் இருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் தமிழர்கள் இங்கு புலம்பெயர்ந்த காரணத்தால் மலேசிய மண்ணின் அடையாளத்தைக் காட்டும் படைப்புக்கள் வரவில்லை. இடைப் பட்ட காலத்தில் மலேசிய இலக்கியங்களில் மண்ணின் வாசனையை சுவாசிக்க முடிகின்றது. ஆனால். யாழ்ப்பாண இலக்கியங்கள் அத்தகைய தாக்கங்களைக் கொண்டிருக்கவில்லை.

இன்று யாழ்ப்பாண மக்கள் ஏறக்குறைய 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு புலம்பெயர்ந்துவிட்ட சூழ்நிலையில் சொந்தமண்ணில் நடக்கும் யுத்தம் பற்றி நிறைய எழுதுகிறார்கள். "போர்க்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்" தனிவடிவம் பெற்றிருக்கிறது. யாழ்ப்பாண மண்ணில் இன்று யாரும் காதலைப் பற்றி, கல்யாணத்தைப் பற்றி எழுதுவதில்லை. யுத்தம் ஏற்படுத்தும் கொடுமைகள் பற்றித்தான் பெரும்பான்மையான இலக்கியங்களும் பேசுகின்றன.

**கேள்வி: உங்கள் முயற்சிக்கு மலேசிய எழுத்தாளர்கள், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் எந்த வகையில் உதவமுடியும்?**

**செல்வராஜா:** மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தும் புதுக் கவிதை திறனாய்வுக் கருத்தரங்கம் தொடர்பான நூலை லண்டனில் பார்த்தேன். நான்கு மாதங்களுக்கு ஒரு முறை புதுக்கவிதைக் கருத்தரங்கு நடத்தி அந்த நடப்புகளை எல்லாம் தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறீர்கள்.

இந்த மாதிரியான தொடர் முயற்சியும் பதிவும் வேறு எங்கும் நடந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மலேசிய நூல்கள் பற்றிய தொகுப்பில் புதுக் கவிதைக் கருத்தரங்கு பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த மாதிரியான பதிவுதான் நமக்குத் தேவை. மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் தாங்கள் பதிப்பித்துள்ள நூல்களை எனக்கு அனுப்பி வைக்கலாம். நூல்களை அனுப்ப முடியாதவர்கள் தங்களது பெயர், முகவரி, நூலின் பெயர், அதன் உள்ளடக்கம், நூலின் எழுத்தாளர் எழுதியுள்ள முன்னுரை, அல்லது நூல் பற்றிய அணிந்துரை, என்ன விலை? எங்கு பெறலாம் என்பன போன்ற தகவல்களை அனுப்பலாம். நூலை நேரடியாக அனுப்பிவைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

நமது நூல்களை உலகத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தவும், ஆவணப்படுத்தவும் திரு செல்வராஜா மேற்கொண்டிருக்கும் இந்தப் பணி, மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்த ஒரு தமிழர் நமக்காகச் செய்யும் பணிக்கு துணைபுரிவதை கடமையாகக் கருதி நமது பங்கினைச் செய்வோம்.

*(நன்றி: மலேசிய நண்பன், திங்கட்கிழமை 19.07.2004:ப.7).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A bibliographer's labour of love

## (Interviewed by: J. S. Tissainayagam)

The Ceasefire Agreement has not only brought a halt to murder and mayhem, but also afforded opportunities to many Sri Lankans – especially Tamils – of immense ability, learning and skill, to visit the country of their birth without fear.

Tamils living overseas whose achievements have earned them a reputation and name, have been visiting the northeast over the past eight months since the Agreement was negotiated and given of their knowledge – be it on agriculture and crop management, computer software development, or the rehabilitation of reservoirs and irrigation canals.

One such visitor is a bibliographer and librarian, who lived the last several years in Britain. He is here to lend his expertise and knowledge for the redevelopment of the Jaffna library and similar institutions. What is engaging about the man however is that he already has a remarkable output, produced through sustained but silent labour, which goes to show the commitment he has to his work.

"It took me two years to compile Noolthettam that has 1000 annotated entries," said N. Selvarajah, speaking to the Northeastern Herald.

Selvarajah's beginnings were comparatively modest as the librarian of Chunnakam Ramanathan College in the 1970s. After a stint of being in charge of Sarvodaya's library in the Jaffna District, he became

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the librarian at the Evelyn Ratnam Institute in Jaffna and later at the International Centre for Ethnic Studies (ICES) in Colombo.

He went on to found the Ayothy Library Services an organisation devoted to library development and was in charge of two of its publications dealing with library science and bibliography.

His visit to Sri Lanka was partly in connection with the publication of Noolthettam that was launched in Colombo last Sunday. This compilation of 1000 entries is classified into three: according to subject, which are the principal entries, followed by classification on the basis of titles and authors. They are also annotated. Noolthettam is formatted according to the Dewey decimal classification. The significance of Selvarajah's work can only be seen when it is examined against the parlous state in which bibliographical classification of Tamil books from Sri Lanka is.

"I believe there are between 5000 and 8000 volumes of Tamil writing from Sri Lanka," said Selvarajah. It is also important to note the volumes he is referring to are books starting with the Story of Assambai in 1895 and do not include writing preserved in ola form.

What is however alarming, but not uncommon in this country, is that these 8000 volumes are not recorded in their entirety anywhere. "It is the function of a national library to collect and record all of a nation's writings. This has not happened here," Selvarajah stressed.

It is the function of national libraries to compile lists of books, journals and other written materials published and unpublished within the borders of that country. Therefore India and the west include in bibliographies only Sri Lankan Tamil writing published in their respective countries. Sri Lanka that should have a central repository of Sri Lankan Tamil writing does not have one.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"This is especially unfortunate because roughly about 70% of Tamil writing by Sri Lankan authors is published outside the country," says Selvarajah.

He estimates that only between 500 and 700 titles by Tamil authors from Sri Lanka would have found a place in the bibliography compiled by the Sri Lanka National Library Services Board. "How would they have a comprehensive bibliography when they do not have access to exhibitions of Tamil books overseas?" asked Selvarajah an amused smile playing on cherubic face.

An important reason for Tamil books – even those published in Sri Lanka – not being registered at the national library is due to printers who are obliged to send copies to the archives being either lazy, or constrained by costs to do so.

"I do not think it is a deliberate policy of the government to sabotage Tamil writing. Rather, it is sheer carelessness. They do not have sufficient number of staff that read and understand Tamil. Of course you could say it is deliberate on the basis these organisations do not recruit Tamil-speaking staff," Selvarajah conceded.

Of publishing done of Tamil books by Sri Lankan authors overseas, almost 80% is in south India. Since most of the books are self-published, these author-publishers prefer India because publishing is very cheap.

"The other advantage is the Government of India has a scheme whereby the state purchases around 300 to 400 books to distribute among the school and state libraries. This guarantees that at least some books sell. Usually the remaining are distributed by their authors among known people," Salvarajah said.

In Europe the system is different. Here, with advances in technology, desktop publishing is available to all who wish to use it. The only cost is that of printing, since most books are privately published. The core constraint is distribution however. Due to the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

limited reading public of Tamil books, they tend to be distributed free through Tamil literary circles, bookshops specialising in catering to Tamil clientele, or to friends and relatives.

"The Tamil book-publishing industry in Europe and the west is not a profitable one. It is mostly a labour of love. I would include my own books in the same category," said Selvarajah.

Tracing the history of book publishing in Tamil and bibliographical studies, which are in a way intertwined, he said output had been on fairly even keel till about the 1960s. They took an upward climb soon after.

"I think the introduction of swabasha as the medium of instruction in the late 1950s and early 1960s helped this trend," Selvarajah said. The imposition of controls on importing books by the SLFP government of Sirimavo Bandaranaike in the 1970s also helped by forcing Tamils of Sri Lanka to write, and the trends that were established refused to dry up even after book imports were liberalised later.

The upward trend of this period reached a plateau between the late-1970s and early-1980s after which there was a steep rise once more, "And the trend is still going on," says Selvarajah.

He attributes three different stimuli for this second upsurge of Tamil writing from Sri Lanka. First, with the war, Tamils from Sri Lanka had a story to tell; second the relative economic prosperity in western societies and India for some immigrant Tamils give them the luxury to indulge in literary production.

"Thirdly, immigration has allowed us to view our national problems from a distance and helps to give it perspective," said Selvarajah, with a far away look descending upon him as if to emphasise the point.

However, unlike post-colonial literatures in English for instance, where immigrant writing has focussed on non-white experience in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

western societies such as alienation and inability to come to terms with new realities, Selvarajah says Sri Lankan Tamil writing, especially fiction, does not necessarily conform to that mode.

"Much of the writing in poetry and short stories tends to be experiential. Interestingly, there is very little love poetry; much of the verse is revolutionary or speak of the horrors of war," explained Selvarajah.

There are also important non-fiction works that have come through the meeting of cultures. He spoke of a German – Tamil dictionary with contemporary references compiled by V. Saravanabahwan in 1992 as one example.

Selvarajah looks upon his own work as path breaking in the general bibliography category of Sri Lankan Tamil writing. There have been subject bibliographies compiled in the past. Sri Lankan Tamil novels published between 1895 and 1975 prepared N. Subramaniam of the University of Jaffna is one such. S. H. N. Jameel has published a bibliography of Sri Lankan Muslim writing from 1895-2000 in four volumes, which though having 1975 entries, is unfortunately not annotated. Another work is Bibliography of Sri Lankan Tamil literature prepared in the 1970s by Kanagasenthinathan. Bibliographies of Tamil writing in Sri Lanka, compiled in Tamil, is pretty much limited to these.

Speaking of the Jaffna public library onto whose board of advisors he was appointed in 1991, he said it had always remained a municipal library. "Jaffna library, despite its vast resources, was not famous till it was burnt down," he said. "And then it assumed a political significance." Since it was not a national library, Jaffna did not have a book depository. Therefore, all books published in Tamil did not reach it. Since the depository was the National Library Services Board in southern Sri Lanka (first at the University of Peradeniya under the able guidance of H. A. I. Goonatilleke before it was shifted to Colombo),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

printers in the northeast were reluctant, or just careless about sending copies of published works in Tamil for registration. Selvarajah said there was an attempt to make Jaffna library a regional library for the northeast, but the project did not take off.

He said a national library is a structure, which has a legal book depository. Jaffna library however, even if it is reconstructed, will remain a municipal library. A possible solution is to make it a wing of the National Library Services Board as in the U.K where the national library has wings in different parts of the country. If this is accomplished, Jaffna library could legally access resources for library development for collecting, cataloguing and compiling bibliographies.

Selvarajah believes that a national bibliography should be put together once the Jaffna library or a similar institution catering to the compilation of Tamil books and journals is set up. This will be an authoritative body with the necessary legal backup. "Till then I will do it," he says.

Now the first volume of 1000 entries is complete, Selvarajah is compiling the second volume that will contain the next 1000 entries. He expects to bring out six or seven volumes to cover a substantial portion of his area of specialisation. He said his visit to Sri Lanka is also partly a fund-raising mission. He hopes to go to France and Malaysia shortly to drum up financial support for the forthcoming volumes.

"I also hope to obtain support from authors by asking them to provide information about their books. They could send me a copy, if they can afford it. Otherwise, even vital information about the book such as title, author's name, printer, contents, number and size of pages would be welcome," said Selvarajah.

(*நன்றி:* Northeastern Herald, Colombo, Issue: November 01 - November 07: 2002).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# N.Selvarajah: Personal Profile

| | | |
|---|---|---|
| பெயர் | : | நடராஜா செல்வராஜா (என்.செல்வராஜா) |
| பிறந்த திகதி | : | *20 ஒக்டோபர் 1954* |
| பிறப்பிடம் | : | தண்டுகம, கொழும்பு மாவட்டம், இலங்கை. |
| புலம்பெயர்வு | : | *(ஐக்கிய இராச்சியம்) 04.10.1992* |
| புகலிடத்து முகவரி | : | 14, Walsingham Close, Luton, LU2 7AP, Bedfordshire, United Kingdom |

தொழிற்றுறை

***யாழ்ப்பாணம் இராமநாதன் பெண்கள் கல்லூரி, நூலகர் பதவி. (மே 1978-ஏப்ரல் 1979)***

*(நூலகவியல் துறையில் டிப்ளோமா கல்வியைத் தொடர்ந்த பின்னர் முதலாவதாக பதவியேற்ற நூலகம் இது. அமரர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தாபித்த இந்து மகளிர் உயர்கல்லூரியின் நூலகம் இதுவாகும்.)*

***யாழ்ப்பாணம் சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்மாவட்ட நூலகப் பொறுப்பாளர். (ஏப்ரல் 1979-ஜனவரி 1980)***

*(காந்தீயவாதியான விநோபா பாவேயின் சீடரான ஏ.ரீ.ஆரியரட்ணா என்ற சிங்களப்பெரியார் தென்னிலங்கையில் மொரட்டுவை என்ற இடத்தில் தாபித்த சர்வோதய மத்திய நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண மக்களுக்கு உதவும் பொருட்டு அமைந்த நிலையம். இங்குள்ள பிரதான நூலகம் படிப்படியாக விரிவடைந்து குடாநாட்டின் 12 கிளை நூலகங்களை வழிநடத்தி வந்தது.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகர், திருகோணமலை மாவட்டம். (பெப்ரவரி 1980-பெப்ரவரி 1981)**

(இலங்கை அரசின் உள்ளூராட்சி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் பொதுநூலக சேவையில் தேர்ந்தெடுக்கப்பட்டு திருக்கோணமலை மாவட்ட நூலகராகப் பொறுப்பேற்றேன். தம்பலகாமம் என்ற புராதன தமிழ்க்கிராமத்தை அடுத்துள்ள முள்ளிப்பொத்தானை என்ற முஸ்லிம் - சிங்கள விவசாயக் குடியிருப்பில் (கந்தளாய் செல்லும் பாதையில்) இந்தச்சிறு நூலகம் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சேவைக்கான அழைப்பை ஏற்று, மனதுக்குப் பிடிக்காத இந்த அரச பதவியை இராஜினாமா செய்து ஒரு ஆண்டிலேயே பதவி துறந்துவிட்டேன்.)

**இந்தோனேசியா, ஐக்கிய நாடுகள் சபையின் (UNDP Volunteer Project) கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதி (பெப்ரவரி 1981-பெப்ரவரி 1982)**

(இத்திட்டத்தின் கீழ் இந்தோனேசியாவின் ஜாவாபாரத் பகுதியில் உள்ள பண்டுங் மாநிலத்தில் உள்ள மரேங்மாங் என்ற கிராமத்தில் ஒரு பொது நூலகத்தினை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உதவியுடன் நிறுவி அக்கிராம மக்களுக்கு பொது நூலக சேவைகளை அறிமுகம் செய்து வைக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். எனது சேவையின் ஞாபகார்த்தமாக இந்நூலகம் அமைந்துள்ள பாதைக்கு "ஜலாங் செல்வா" என்று உள்ளூராட்சி மன்றத்தினால் பெயர் சூட்டப்பட்டமையும், இந்நூலகத் திட்டத்தை பார்வையிட இந்தோனேசியாவின் கல்வி மந்திரியே வருகைதந்து என்னை கௌரவித்தமையும் இன்றும் பசுமை நினைவுகளாயுள்ளன.)

**இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட மத்திய நூலகப் பொறுப்பாளர் (மார்ச் 1982- நவம்பர் 1983)**

(காந்தீயவாதியான விநோபா பாவேயின் சீடரான ஏ.ரீ.ஆரியரட்ணா என்ற சிங்களப்பெரியார் தென்னிலங்கையில் மொரட்டுவை என்ற இடத்தில் தாபித்த சர்வோதய மத்திய நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண மக்களுக்கு உதவும் பொருட்டு அமைந்த நிலையம். புங்குடுதீவில் தன் பிரதான பணிமனையைக்

278826

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. இங்குள்ள பிரதான நூலகம், குடாநாட்டின் 12 கிளை நூலகங்களை வழிநடத்தி வந்தது. வெளிநாட்டுச் சேவையை முடித்து வந்த நான் மீண்டும் எனது முன்னைய நூலகப்பணியை புதிய சர்வதேச நிதி வசதிகளுடன் விரிவாக்கும் வாய்ப்பு இங்கு கிடைத்தது.)

**யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின்** (Evelyn Rutnam Institute for Inter cultural Studies)**ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளர். (டிசம்பர் 1983-மே 1990)**

(இலங்கையில் இடம்பெற்ற 1983 வன்செயல்கள், இராணுவ ஆட்சியை யாழ்ப்பாணத்துக்குள் பலவந்தமாகப் புகுத்தியதால் கொழும்புடனான யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய இயக்கத்தின் சுமுகமான தொடர்புக்குப் பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் சுதந்திரமான சமூகப்பணிகளுக்கும் தடைகள் ஏற்பட்டன. இதனால் சர்வோதய இயக்கச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பராமரிக்கப்பட்டுவந்த இந்த ஆய்வு நூலகத்தின் நூலகராகக் கடமையேற்று என் நூலகசேவையினை பிறிதொரு தளத்தில் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் (James T.Rutnam) அவர்களால் தனது துணைவியாரின் ஞாபகார்த்தமாக 1981இல் யாழ் நூலகம் எரிக்கப் பட்ட வேளையில் அந்த ஏக்க உணர்வின் தூண்டுதலால் கட்டப் பட்ட நூலகம் இது. பேராசிரியர் கா.இந்திரபாலா இயக்குநராகவும், ஆ.சிவநேசச்செல்வன் பிரதான நூலகராகவும் பணியாற்றிய வேளையில்- திரு. சிவநேசச்செல்வன் வீரகேசரி வார இதழின் பிரதம ஆசிரியராகப் பதவியேற்றுச்சென்ற வேளையில் அவ்வெற்றிடத்தை நான் நிரப்பியிருந்தேன். 1985இல் பேராசிரியர் இந்திரபாலா அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் முழுநிறுவனத்தையும் பொறுப்பெற்று நடத்தவேண்டிய பாரிய பணி என்மீது சுமத்தப்பட்டது. இந்திய அமைதிப்படையின் காலகட்டத்திலும் அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் அந்த நிறுவனம் கையகப் படுத்தப்படுவதிலிருந்தும் நூலகத்தைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருந்தது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலையம், (International Centre for Ethnic Studies)ஆய்வு நூலகப் பொறுப்பாளர்** ***(மே 1990-ஒக்டோபர் 1992)***

*(1983-1989 காலகட்டம் ஈழத்தமிழரின் அமைதியான வாழ்வியல் போர்ச்சூழலுக்குள் தள்ளப்பட்ட காலகட்டம். கடல், வான், தரைத்தாக்குதலுக்குள் அல்லலுற்ற ஈழத்தமிழ் மக்களின் வாழ் வியல் அன்றாட உயிர்வாழ்தலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மாற்றப்பட்டதால், தமிழ்ப் பிரதேசமெங்கும் நூலகசேவைகள் அத்தியாவசியமற்ற பணிகளாக்கப்பட்டு எமது சேவைப்பரப்பு மிகவும் சுருக்கப்பட்டது. இந்நிலையில் கொழும்பில் இயங்கும் சர்வதேச நூலகமொன்றில் பணியாற்றும் அழைப்பையேற்று குடும்பத்தினருடன் கொழும்புக்குச் சென்று பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இங்கிருக்கும் வேளையில் கொழும்புத் தமிழ்ச்சங்கம், இந்து சமய விவகார அமைச்சு ஆகியவற்றின் நூலகங்களை புனரமைத்துத் தரும் பணியையும் மேற்கொள்ள முடிந்தது. கொழும்பு இனத்துவத்துக்கான சர்வதேச நிறுவனம் திரு. நீலன் திருச்செல்வம் அவர்களால் தாபிக்கப்பட்டு வழிநடத்தப் பட்டது. அவரது நிறுவனத்தின் ஆய்வு நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பு அங்கு எனக்குக் கிடைத்தது. செல்வி ராதிகா குமாரசுவாமி, கவிஞர் சேரன், சுனில் பஸ்தியான் போன்ற அறிவுஜீவிகளின் தொடர்பும் அங்கு கிட்டியது. ஒக்டோபர் 1992இல் லண்டனுக்குப் புலம்பெயரும்வரை அங்கு பணியாற்றினேன்.)*

**தற்போதைய தொழில்**

*1999 முதல் 2017 வரை ரோயல் மெயில் தபால் சேவைகள் நிறுவனத்தின் அந்நிய நாணயப் பிரிவில் அதிகாரியாகப் பணியாற்றி மார்ச் 2017இல் இளைப்பாறியுள்ளேன்.* (Royal mail-Bureau de Change Services).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகித்த, வகிக்கின்ற பதவிகள்- சமூகப் பணிகள்

**ஸ்தாபகர், நிர்வாக இயக்குநர், அயோத்தி நூலக சேவைகள், யாழ்ப்பாணம். (தாபிதம்1985)**

(தமிழ்ப்பிரதேசத்தின் நூலகவியல்துறையின் அபிவிருத்திக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் இலங்கையின் பிரதான தமிழ் நூலகர்களாக இருந்த எஸ்.எம்.கமால்தீன் (இலங்கைத் தேசிய நூலகப்பணிப்பாளர்), வே.இ.பாக்கியநாதன் (முன்னாள் யாழ்ப்பாண பொது நூலகர், யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி அதிபர், நூலகச்சங்கத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்), சி.முருகவேள், (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதம நூலகர்), திருமதி எஸ்.பரராஜசிங்கம்,(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவி நூலகர்), திருமதி விமலா பாலசுந்தரம், (யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உதவி நூலகர், ரூபாவதி நடராஜா, (யாழ்ப்பாணப் பொது நூலகர்) ஆகியோரை இணைத்து அயோத்தி நூலக சேவைகள் என்ற இந்த அமைப்பு தாபிக்கப்பட்டது. "நூலகவியல்" என்ற காலாண்டு சஞ்சிகையின் வெளியீடு 7 ஆண்டுகளாக இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது.இச்சஞ்சிகைக்கான ஆசிரியராக நான் பணியாற்றினேன். தமிழ்ப்பிரதேசங்கள் தோறும் நூலகக் கருத்தரங்குகளை மேற்கொண்டதுடன் தமிழில் நூலகவியல் துறை நூல்கள் ஏழு இவ்வமைப்பினால் வெளியிட்டுள்ளோம். தற்போது இலண்டனில் இவ்வமைப்பு இயங்கி வருகின்றது. தாயகத்தில் நூலகசேவைகளை மேற்கொள்ள உதவும் வகையில் இணைப்பகமாக செயற்படுகின்றது. சர்வதேசத் தமிழர்களை இணைக்கும் பணியிலும் அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றது. இதன் ஒரு அம்சமாகவே மலேசியத் தமிழ் இலக்கிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. லண்டனில் ஈழத்தமிழ்ப் புத்தகச்சந்தை யினை அவ்வப்போது நடத்தி மலிவு விலையில் தரமான ஈழத்துத்தமிழ் நூல்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.)

**இலண்டன், தமிழர் தகவல் நிலையம், இயக்குநர் நூலக சேவைகள், ஆவணக்காப்பகப் பிரிவு. (1992-1997)**

(இலண்டனில் இயங்கிவரும் இந்நிலையத்தில் இலங்கை தொடர்பான ஆவணங்கள் வெளியீடுகள் பாதுகாக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதுடன், இலங்கை அரசியல்தொடர்பான அறிக்கைகள் காலத்துக்குக்காலம் தயாரித்து சர்வதேச அவதானிப்பாளர்களுக்கும் ஊடகங்களுக்கும், பொதுநல சமூகசேவை நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன. இவ்வமைப்பின் கௌரவ இயக்குநர்களில் ஒருவராக இயங்கிவந்தேன். எனது காலகட்டத்தில் லண்டனில் ஒரு தரமான ஆவணக்காப்பகமொன்றினை தமிழர் தகவல் நடுவத்தின் ஆதரவுடன் நிறுவலாம் என்ற எனது தீவிர ஆர்வத்துக்கு அவ்வமைப்பின் இயக்கம் எவ்வகையிலும் ஒத்துழைக்கத் தயாரில்லாத நிலையில் எனது நேரத்தை வீணடிப்பதாகக் கருதி எனது பதவியிலிருந்து ஒதுங்கிவிட்டேன்.)

**நூலகவியல்: காலாண்டுச் சஞ்சிகை: தாபக ஆசிரியர் (1985-1991)**

(தமிழ்ப் பிரதேசங்களில் நூலகங்களும் நூலகர்களும் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு அறிவியல், தொழில்நுட்ப ரீதியில் உதவிகளை வழங்குவதற்கு அக்கால கட்டத்தில் நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பு எதுவும் தமிழர் தாயக மண்ணில் இருந்திருக்கவில்லை. இந்நிலை பற்றி ஈழத்தின் தமிழ் நூலகத்துறையின் முன்னோடி களாக அந்நாட்களில் இருந்த கலாநிதி. வே.இ.பாக்கியநாதன், எஸ்.எம்.கமால்தீன், இ.முருகவேள் போன்றோருடன் நான் நீண்டகாலமாக கலந்துரையாடித் திட்டமிட்டு வந்திருந்தேன். இதன் விளைவாக அறிஞர்களின் ஆசியுடன் 1985இல் அயோத்தி நூலக சேவைகள் நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நூலகவியல் கல்வியை தமிழில் பரவலாக்குவ தற்கும், நூலகங்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்குரிய தீர்வுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை நிறுவனரீதியில் வழங்குவதுமாகும்.

இத்திட்டத்திற்கு அடிப்படையாக நூலகவியல் என்ற காலாண்டு சஞ்சிகை செப்டெம்பர் 1985இல் அயோத்தி நூலக சேவைகள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங் களில் இயங்கும் அனைத்து நூலகங்களுக்கும், தமிழ் நூலகர்க ளுக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன. யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனம், யாழ் மாவட்ட உள்ளு ராட்சி சேவைகள் அலுவலகம், யாழ் மாவட்ட கல்வி நிறுவனங்கள் என்பன ஆர்வத்துடன் இவற்றை விநியோகிக்க ஒழுங்கு செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. தமிழ்மூலம் நூலகவியல் கல்வியைக் கற்கும் மாணவர்களுக்கும், சுயம்புவாக நூலகத்துறையில் ஈடுபட்டுவந்த பல தராதரப்பத்திரமற்ற நூலகர்களுக்கும் நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

நூலகவியல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் திரு சி.முருகவேள், வே.இ.பாக்கியநாதன், இ.பாலசுந்தரம், திருமதி ரூபா நடராஜா, திருமதி ரோ.பரராஜசிங்கம், திரு. எஸ்.எம். கமால்தீன், திரு.செ.கிருஷ்ணராஜா ஆகியோர் பணியாற்றினார்கள். 1991வரை தடங்கலின்றி வெளிவந்த நூலகவியல் சஞ்சிகை, நான் புலம்பெயர்ந்து ஐக்கிய இராச்சியத்துக்குச் சென்றதோடு வெளிவராது நின்றுபோயிற்று. தபால் போக்குவரத்து, மற்றும் போர்ச் சூழல் காரணமாக நூலகவியல் மீண்டும் வெளிவருவது இன்றுவரை தடைப்பட்டுள்ளது.)

**தொகுப்பாசிரியர் நூல்தேட்டம் (1990- )**

(இலங்கைத் தமிழர்களின் தமிழ்நூல்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் பரவலாக வெளியிடப்பட்டு வந்த போதிலும் எந்தவொரு நாடும், நிறுவனமும் அதை தொகுத்து ஆவணப்படுத்தும் நடவடிக்கையை செய்ய முன்வரவில்லை. இலங்கைத் தேசிய நூலகம் இத்தகைய பணியை சட்டபூர்வமாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் தமிழ் நூல்களை ஆவணப் படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் ஈழத்துத் தமிழ் நூல்களை ஆவணப்படுத்தும் பணியை 1990இல் தொடங்கி இன்று வரை 14000 நூல்களை ஒருதொகுதியில் தலா 1000 நூல்கள் என்ற வரையறையில் பதினான்கு தொகுதிகளாகத் தொகுத்திருக்கின்றேன். பதினைந்தாவது தொகுதிக்கான தொகுப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 20 தொகுதிகளில் ஈழத்துத் தமிழர்களின் 20000 நூல்களையாவது தொகுத்து வழங்கவேண்டும் என்பது எனது திட்டமாகும்.)

**யாழ்ப்பாணப் பொது நூலகம். ஆலோசனைக்குழு (1991- )**

(1981இல் எரியுண்ட யாழ்ப்பாணப் பொது நூலகம் இன்று சர்வதேச அரங்கில் ஒரு நினைவுச்சின்னமாக அமைந்துவிட்டது. இந்நூலகம் கட்டியெழுப்பப்பட்டு இப்பொழுது மீண்டும் இயங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. இந்நூலகத்தின் அபிவிருத்திப்பணிகளில் ஆலோசகராக 1991முதல் இயங்கி வந்துள்ளேன். தற்போது 2001ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாண மாநகர சபையினரின் வேண்டுகோளின் பேரில் மேற்படி நூலகத்தின் சேவைகளுக்கும், அபிவிருத்திக்கும் உதவும் பொருட்டு ஐரோப்பிய இணைப்பாள ராகக் கடமையாற்றுகின்றேன். இதுவரை தமிழிலும் ஆங்கிலத் திலும் யாழ்ப்பாண நூலகம் பற்றிய ஆவணத்தொகுப்பினை வெளியிட்டுள்ளதுடன், யாழ்ப்பாண நூலகத்தில் புகலிடத்து இலக்கியங்கள் என்ற பிரிவினையும், நூலகவியல் தகவல் விஞ்ஞானத்துறைக்கான சிறப்புப்பிரிவினையும் வளர்த்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன். அவ்வப்போது யாழ்ப்பாண நூலகம் கேட்கும் உதவிகளை- லண்டனிலுள்ள நலன் விரும்பிகளின் உதவியுடன் பெற்று வழங்கிவருகின்றேன்.)

**புக்ஸ் அப்ரோட் நிறுவனம், டண்டி,ஸ்கொட்லாந்து (2004-)**

(2004 இல் ஸ்கொட்லாந்திலுள்ள Books Abroad என்ற தொண்டர் அமைப்புடன் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் அவ் வேளையில் இலங்கையில் 12 நிறுவனங்களுக்கு வருடாந்தம் ஆங்கில நூல்களை அனுப்பி வந்தார்கள். இவற்றில் ஒரே ஒரு தமிழ் நூலகமாக அவர்கள் உதவிய சாவகச்சேரி - அறவழிப் போராட்டக் குழு என்ற அமைப்பின் நூலகத்துடன் தொடர்பு முறிந்துவிட்ட தாகவும், அவர்களது நிலைப்பாடு பற்றிய அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கும்படியும் கேட்டிருந்தார்கள். அன்று என்னுடன் அவர்கள் ஏற்படுத்திய தொடர்பினைப் பயன்படுத்தி படிப்படியாக தமிழ்ப் பிரதேசங்களுக்கு பல தடவைகளில் மேலதிக ஆங்கில நூல்களை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டேன். இம்முயற்சிகளுக்கு அவ்வப்போது தேசம் இணைத்தள குழுமத்தின் தாபகர் த.ஜெயபாலன், மற்றும் லிட்டில் எயிட் தொண்டர் அமைப்பின் தாபகர் ரி.கொன்ஸ்டன்டைன் ஆகியோர் உதவி வந்தனர். அம்முயற்சியின் பரிணாம வளர்ச்சியின் ஒரு படியாக 2013இல் ஒரு கொன்டெய்னர் நூல்கள் (18 பலட் களில்) 300க்கும் அதிகமான வடக்கு கிழக்கு மலையகப்பிரதேச பாடசாலை நூலகங்களுக்கும் யாழ்ப்பாணப் பொது நூலகம் உள்ளிட்ட பிரதான பொது நூலகங்களுக்கும் சென்றடைய வழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தித்தர முடிந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக 2020இல் மற்றொரு கொண்டெய்னர் நூல்கள் 24 பலட்களில் அனுப்பிவைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளோம். இடையில் நுழைந்துவிட்ட கொவிட்-19 கொரொணா நோயின் காரணமாக கப்பல் சேவைகள் தடைப்பட்டுள்ளன. நிலைமை ஓரளவு வழமைக்குத் திரும்பியதும் கப்பல் புறப்படவுள்ளது. புக்ஸ் எப்ரோட் இந்நிறுவன இயக்குநர் ஜோன் கால்டிங் அவர் களும், வினய் ரூபரெலியா அவர்களும் இருவேறு சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து, அவர்களிடம் நூலக உதவிபெற்ற நிறுவன அதிபர்கள், நூலகர்களுடன் கலந்துரையாட ஒழுங்கு செய்திருந்தேன். அதன்மூலம் புக்ஸ் எப்ரொட் அமைப்பின் தொடர்பணிகளுக்கு ஒரு பலமான நம்பிக்கையான அத்திவாரத்தை உருவாக்கமுடிந்தது.

**ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும்** European tamil Documentation and Research Centre ***(2008-)***

*(19.4.2008* இல் லண்டனில் ஆய்வாளர்களுக்கும், எதிர்கால ஈழத்துத் தமிழ்ச்சிறார்களுக்கும் எமது இனம் கலாச்சாரம் வரலாறு பற்றிய ஆவணங்களை சேகரித்துப் பாதுகாத்து வழங்கும் நோக்கு டன் இவ்வமைப்பினை லண்டனில் வாழும் சில புத்திஜீவிகளின் உதவியுடன் உருவாக்கினேன். இந்நிறுவனத்திற்கென என்னிடம் உள்ள 7000க்கும் அதிகமான ஈழத்துத் தமிழ் படைப்பாளிகளின் நூல்களையும் ஒதுக்கிவைத்துள்ளேன். பிரித்தானிய அறக்கட்டளையாக (Charity No.1127365) பதிவுசெய்யப்பட்டுள்ள இவ்வமைப்பு காலக்கிரமத்தில் வீறுடன் இயங்கி எனது கனவை நனவாக்கும் என்ற நம்பிக்கையுள்ளது. இன்று எம்மவரிடம் இத்தகையதொரு அமைப்பின் தேவை உணரப்படாத நிலையில் என்னால் தனித்து இவ்வமைப்பைக் கட்டியெழுப்பும் வலுவும், நிதியும் இல்லை. பொருத்தமான நலன்விரும்பிகளின் தொடர்பினை வேண்டிக் காத்திருப்பதைத்தவிர என்னால் எதுவும் செய்யமுடியாமலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லண்டன் தமிழ் புத்தகச்சந்தையும் எழுத்தாளர் வாசகர் சந்திப்பு நிகழ்வும் London Tamil Book Fair and Authors meet readers event. *(2011-)***

(*16.10.2011* இல் Lord Brooke Hall, Shernhall Street, Walthamstow, E17 3 EY என்ற முகவரியில் உள்ள மண்டபத்தில் முதலாவது புத்தகச்சந்தையை ஒழுங்குசெய்து வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். அதைத் தொடர்ந்து ஈஸ்ட்ஹாம், இல்போர்ட், ஈலிங், உள்ளிட்ட பல பிரதேசங்களில் பன்னிரண்டு புத்தகச் சந்தைகளை இதுவரை நடத்தியுள்ளோம். இது முழுமையானதொரு புத்தகச் சந்தையேயன்றி புத்தகக் கண்காட்சி யல்ல. லண்டன் வாழ் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தாம் முன்னர் வெளியிட்ட நூல்களைச் சந்தைப்படுத்தும் பொது வாய்ப்பினையும் இந்நிகழ்வு சாத்தியமாக்குகின்றது. எம்மிடையே புத்தகக் கலாச்சாரத்தை வளர்க்கும் திட்டத்தின் முதற்படியாக அங்கு குடும்ப நூலகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவியாக, புத்தகங்களை எம்மவரின் இல்லங்களுக்குள் நுழையவைப்பதும் இச்சந்தையின் மற்றொரு நோக்கமாகும். நலிந்துசெல்லும் ஈழத்தில் தமிழ்ப் பதிப்புத்துறைக்கு புது இரத்தம் பாய்ச்சும் வகையில் அவர்களது வெளியீடுகளில் குறைந்தது 25 பிரதிகளையாவது கொள்வனவு செய்து அவர்களுக்கு உறுதியான புகலிடச் சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்போம் என்ற உறுதிமொழியுடன் இலங்கைப் பதிப்பகங்களை இத்திட்டத்தில் பங்காளர்களாக்கியிருந்தேன்.

முன்னொரு தடவை வெளியீட்டு விழாவுடன் முடிவுக்கு வந்துவிட்ட லண்டன்வாழ் எழுத்தாளர்களின் நூல்களை ஆண்டுக்கு இருமுறையாவது மீண்டும் மக்களிடம் சேர்ப்பிக்கவும், சக எழுத்தாளர்களுடனும் வாசகர்களுடனும் இறுக்கமற்ற ஒரு எளிமையான நேரடிச் சந்திப்பை எழுத்தாளர்கள் மேற்கொண்டு உரையாடவும் கருத்தாடவும் இவ்வாப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிகின்றது. நிகழ்வில் எவ்விதமான கருத்தரங்குகளோ, கலை இலக்கிய நிகழ்ச்சிகளோ, பேருரை-சிற்றுரைகளோ ஒழுங்கு செய்யப்பட மாட்டாது. இது ஒரு வித்தியாசமான இலக்கிய, அறிவியல் அனுபவத்தை எம்மவருக்கு வழங்கும் சந்திப்பு நிகழ்வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியல்துறை பணிகள்

### I.B.C.தமிழ் அனைத்துலக ஒலிபரப்புக் கழகம்

இலண்டனில் இருந்து இயங்கும் I.B.C.தமிழ் என்ற அனைத்துலக ஒலிபரப்புக்கழகத்தின் வாயிலாக ஞாயிறு தோறும் காலை 7.15 முதல் 7.30 வரை காலைக்கலசம் என்ற நிகழ்ச்சியில் இலக்கியத் தகவல் திரட்டு என்ற ஒரு உரை நிகழ்ச்சியை 2002 மே மாதம் 5ஆம் திகதிமுதல் நடத்தி வந்தேன். 2009இல் முள்ளிவாய்க்கால் அவலம் வரை வாரம்தோறும் தவறாமல் தொடர்ந்து ஞாயிறுதோறும் ஒலிபரப்பாகிய இந்நிகழ்ச்சியின் மூலம், ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா உட்பட புகலிடத்துத் தமிழ் நூல்களையும், எழுத்தாளர்களையும் அவர்களின் படைப்புகளையும் அறிமுகம்செய்து வந்தேன். எனது உரைகள் அவ்வப்போது தினக்குரல், ஞானம், கனடா தமிழர் தகவல், போன்ற எழுத்து ஊடகங்களிலும் அவ்வப்போது பிரசுரமாகியிருந்தன. எனது பணியை கௌரவித்து தமிழுணர்வாளர் பழநெடுமாறன் அவர்களால், I.B.C. அமைப்பின் புத்தாண்டு நிறைவு விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.

### சஞ்சிகைகளில் எழுத்துப் பணி

இலண்டனிலிருந்து வெளிவரும் தேசம், வடலி, புதினம், தென்றல், ஐ.பீ.சீ. தமிழ், ஆகிய ஊடகங்களின் வாயிலாகவும் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல், நம் நாடு, தாய் வீடு போன்ற மாதாந்த இதழ்களின் வாயிலாகவும், இலங்கையில் வெளிவரும் தேசிய, பிராந்தியப் பத்திரிகைகள், பல்வேறு சிறப்பு மலர்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றில், தமிழ் நூல்வெளியீடுகள், தமிழ் எழுத்தாளர் அறிமுகங்கள் பற்றிய தொடர் கட்டுரைகள் எழுதி வந்தேன். இவ்வூடகங்களின் உதவியுடன் தாயகத்திலும், புகலிடத்திலும் உள்ள தமிழரின் படைப்புக்களை உலகெங்கும் அறிமுகப்படுத்தும் பணியினை முழு மூச்சுடன் மேற்கொண்டு வந்துள்ளேன். இவை காலக்கிரமத்தில் தொகுக்கப் பெற்று தனிநூல்களாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஈழத்தமிழரின் நூலியல்சார்ந்த குரல் நாடுகளின் எல்லைகளைக் கடந்தும் உரத்து ஒலிக்க வேண்டும் என்பதே எனது அடிப்படை நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

பொதுசன நூலகம் 14 OCT 2020 மாநகரசபை யாழ்ப்பாணம்

விருதுகள்-வாழ்த்துப் பத்திரங்கள்

1. கனடா தமிழர் தகவல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "தமிழர் தகவல் விருது 2004"ம் தங்கப் பதக்கமும்
2. கண்டி சிந்தனை வட்டம் வழங்கிய "எழுத்தியல் வித்தகர் விருது 2005"
3. அவுஸ்திரேலியா-தமிழ் இலக்கிய கலைச்சங்கம், வழங்கிய "சேவைநலன் பாராட்டு விருது 24.11.2007"
4. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டத்தாபனம்-தமிழ் 1997-2007 பத்தாவது ஆண்டு நினைவின்போது வழங்கப்பட்ட பணி மதிப்பளிப்பு விருது.
5. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்-இந்திய ஒன்றியம், சென்னை பாரதிய வித்யா பவனில் வழங்கிய வரவேற்புப சாரத்தின் போது வழங்கிய வாழ்த்துப்பத்திரம்- 29.01.2013.
6. தமிழியல் விருது 2012. மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய 2011இல் வெளிவந்த சிறந்த ஆவணமாக்கல் நூலுக்கான தமிழியல் விருது நூல்தேட்டம் தொகுதிக்கு வழங்கப்பட்டது.
7. லண்டன் தமிழினி குலேந்திரன் வழங்கிய 2013- வாழும்போது வாழ்த்துவோம் விருது சிறந்த நூலியலாளருக்கும் தொகுப்பா ளருக்குமான விருது. (27.7.2013)
8. IPRA 2017: First Honourable Mention-(Informed Peer Recognition Award 2017) பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு சேவையாற்றும் நூலக சேவையாளர்களுக்கான பிரித்தானிய நூலக சேவையினரான ISLIB கௌரவ விருது.
9. இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கிய வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது 2018.
10. புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு நற்பணி ஒன்றியம், ஜேர்மனி- தொண்டரின் திருமுரசு-1 05.10.2019.
11. ஜேர்மனி வெற்றிமணி "வாழ்நாள் சாதனையாளர்" விருது செப்டெம்பர் 2019

278826

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என். செல்வராஜா: ஈழத்து நூலகவியல் துறையிலும் வெளியீட்டுத்துறையிலும் நன்கு அறிமுகமானவர். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் தன் நூலகப் பணியை ஆரம்பித்த இவர், பின்னர் யாழ். சர்வோதய மத்திய நூலகம், இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகம், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் கொழும்புக் கிளையின் நூலகம் ஆகியவற்றில் பணியாற்றியவர்.

அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் தாபகரான இவர் அந்நிறுவனத்தினூடாகப் பல நூலகவியல் சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றார். 'நூலகவியல்' சஞ்சிகைகளினதும் 'நூல்தேட்டம்' தொகுப்புகளினதும் ஆசிரியராக இருந்ததுடன், 'கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்', 'ஆரம்ப நூலகர் கைந்நூல்', 'உருமாறும் பழமொழிகள்', 'யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு', 'நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம நூலகர்களுக்கு', 'தேடலே வாழ்க்கையாய்', ஈழத்தின் தமிழ் கவிதையியல் 'Selected Bibliography of James T. Ratnam', 'Rising From the Ashes' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். தற்போது இங்கிலாந்தில் வசித்துவரும் இவர் அங்கும் புத்தகப் பண்பாட்டை ஊக்குவிக்கும் முயற்சிகள் பலவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார்.

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

விடயம்: நேர்காணல்

ISBN 978-955-659-676-2

9 789556 596762

விலை ரூபா: 650.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org